

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 மார்ச் 5, 2009 புரட்சி 8 முழக்கம் 08 விலை : ரூ.2.50

## இயக்குனர் சீமானைத் தொடர்ந்து மீண்டும்

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி கைது




கழகத் தலைவர் கொளத்தூர் மணியை மீண்டும் தமிழக அரசு கைது செய்துள்ளது. பிப்.26 ஆம் தேதி திண்டுக்கல்லில் நடந்த கழகக் கூட்டத்தில் ஈழத் தமிழர்களுக்கு இந்திய அரசின் துரோகத்தைக் கண்டித்து உரையாற்றினார். ராஜீவ் மரணத்தையே முன்னிறுத்தி ஈழத் தமிழர்களின் தேசிய சுயநிர்ணயப் போராட்டத்தையே புறக்கணிக்கும் காங்கிரசின் போக்கையும் மக்களிடம் எடுத்துக் காட்டினார். தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாகவும், இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் பேசியதாக திண்டுக்கல் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து, மார்ச் 2 ஆம் தேதி காலை 7 மணியளவில் மேட்டூர் குமரன் நகரிலுள்ள அவரது இல்லத்தில் கைது செய்தனர்.

நள்ளிரவே ஏராளமான காவல்துறையினர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வீட்டைச் சுற்றி குவிக்கப் பட்டனர். செய்தியறிந்த தோழர்கள் ஏராளமாக கழகத் தலைவர் இல்லத்தை நோக்கி திரண்டனர். கைது செய்யப்படும்போது செய்தியாளர்களிடம் பேசிய கழகத் தலைவர் ஈழத் தமிழர்களுக்கு மத்திய அரசு இழைக்கும் துரோகங்களை தனது பாரமாகவே கருதி கலைஞர் தோளில் சுமந்து கொள்ள விரும்புகிறார் என்று குறிப்பிட்டார்.

கழகத் தலைவர், திண்டுக்கல் நீதிமன்றம் கொண்டு வரப்படும் செய்தியறிந்த தோழர்கள், வழக்கறிஞர்கள், தமிழர்கள் ஏராளமாக திண்டுக்கல் நீதிமன்றத்தில் காலை முதல் காத்திருந்தனர். வழக்கறிஞர்கள் சங்கத்தைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட வழக்கறிஞர் களும் காத்திருந்தனர். பெரும் கூட்டம் திரண்டிருப் பதை அறிந்த காவல்துறை நீதிமன்றம் கொண்டு செல்வதை பல மணி நேரம் தாமதப்படுத்தியது.

திண்டுக்கல் செல்லும் வழியிலுள்ள எரியோடு காவல் நிலையத்துக்கு கொண்டு போய் காலை 11 மணி முதல் 1.30 மணி வரை வைத்திருந்து விட்டு 3 மணி யளவில் திண்டுக்கல் நீதிபதி ராதாகிருஷ்ணன் இல்லத்துக்கு அழைத்துச் சென்று நேர் நிறுத்தினர். 15 நாள் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். தண்டனைச் சட்டப் பிரிவுகள் 153(ஏ), 505(1)(பி) மற்றும் 13 (1)(பி) - சட்ட விரோதமாகக் கூடுவதைத் தடுக்கும் சட்டம் 1967 ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கழகத் தலைவர் மதுரை மத்திய சிறைக்கு கொண்டு போகப்பட்டார்.

கடந்த 2008 டிசம்பர் 14 ஆம் தேதி ஈரோடு பொதுக் கூட்டத்தில் பேசியதற்காக இதே பிரிவுகளின் கீழ் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, த.தே.பொ.க. பொதுச் செயலாளர் மணியரசன், இயக்குனர் சீமான் ஆகியோர் மீது காவல்துறை வழக்கு தொடர்ந்து கைது செய்தது குறிப்பிடத்தக்கது. டிசம்பர் 19 ஆம் தேதி கைது செய்யப்பட்டு, கோவை சிறையில் வைக்கப் பட்டு 2009 ஜனவரி 19 ஆம் தேதி பிணையில் மூவரும் விடுதலையானார்கள்.

தொடர்ந்து புதுவையில் உண்ணாவிரதம் இருந்த மாணவர்களிடையே பேசியதற்காக புதுவை காவல் துறை இயக்குனர் சீமானை கைது செய்து புதுவை சிறையில் அடைத்தது. புதுவையைத் தொடர்ந்து நெல்லையில் வழக்கறிஞர்களிடையே சீமான் பேசியதற்காக நெல்லை காவல்துறை மற்றொரு வழக்கைத் தொடர்ந்தது. இயக்குனர் சீமான் இப்போது ஒரு வருடம் வெளியில் வர முடியாத தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப் பட்டுள்ளார். இந்த நிலையில் சீமானைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணியையும் கலைஞர் ஆட்சி கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத் தேர்தல் வரும் நிலையில் காங்கிரசுக்கு எதிராக தீவிரப் பிரச்சாரம் நடத்திட கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சீமான் உள்ளிட்ட தமிழின உணர்வாளர்கள் திட்டமிட்டுள்ள நிலையில் அவர்கள் பிரச்சாரத்தை முடக்கிடும் நோக்கத்தோடு அரசு இந்த கைது நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

கழகத் தலைவர் கைது செய்யப்பட்டவுடனேயே ஒட்டன்சத்திரம் வழக்கறிஞர் ஜெயராஜ், திண்டுக்கல் நீதிமன்றத்தில் பிணை மனுவை தாக்கல் செய்தார்.

காங்கிரசின் துரோகத்துக்கு பச்சைக் கொடி காட்டி, தன்னையும் தமிழினத் துரோகப் பட்டியலில் தி.மு.க. ஆட்சி இணைத்துக் கொண்டிருப்பது தமிழின உணர்வாளர்களைக் கொதிப்படையச் செய்துள்ளது.

●

## பிரணாப் பேசிய ‘போர் நிறுத்தம்’ எங்கே?

மத்திய அரசிடமிருந்து ஈழத் தமிழர்களின் மீதான இனப்படுகொலைக்கு எதிராக - ஏதேனும் ஒரு கருத்து வெளி வராதா என்று வழிமேல் விழி வைத்து பார்த்துக் கொண்டிருக்கிறது, தமிழகத்தை ஆளும் கலைஞர் ஆட்சி. ஆனால், சிறு துரும்பையும் அசைக்க டில்லி தயாராகவே இல்லை.

மத்திய அரசுக்கு ‘கெடு’ விதித்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் தூக்கி எறியும் எல்லைக்குப் போய் தீர்மானங்களைப் போட்ட தி.மு.க., இப்போது - கைகட்டி, வாய்ப்பொத்தி நிற்பது மட்டுமல்ல, தமிழ் நாட்டில் மத்திய அரசின் துரோகத்தைக் கண்டித்துப் பேசுவதைக்கூட அனுமதிக்க மறுக்கிறது. ஒருமைப் பாட்டிற்கு எதிராகப் பேசி விட்டார்கள் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குநர் சீமானை தொடர்ந்து கைது செய்து சிறையில் அடைத்து விடுகிறது.

எத்தனையோ முறை வேண்டுகோள்; சட்டமன்ற தீர்மானம்; நேரில் வலியுறுத்தல் எல்லாம் நடந்து முடிந்த பிறகும், கொழும்புக்கு போக மறுத்த வெளிநாட்டுத் துறை அமைச்சரான பார்ப்பனர் பிரணாப் முகர்ஜி, சிறீலங்கா அழைப்பை ஏற்று, கொழும்பு போனபோது, ஏதோ, தங்கள் கோரிக்கைக்கு கிடைத்த வெற்றியாக - தி.மு.க. கொண்டாடியது. கொழும்பு போன பிரணாப் முகர்ஜி, சிங்கள ராணுவத்தின் வெற்றிகளைப் பாராட்டினாரே தவிர, போரை நிறுத்து என்று சொல்லவில்லை. ஒவ்வொரு நாளும் சராசரியாக 75 முதல் 100 அப்பாவித் தமிழர்கள் - ஆண்களும், பெண்களும், குழந்தை களுமாக - ராக்கெட் வீச்சு, செல் வீச்சு, விமானக் குண்டுவீச்சுக்கு பலியாகிக் கொண்டே இருக்கிறார்கள். கடந்த ஜனவரிக்குப் பிறகு 2000 தமிழர்கள் பலியாகி விட்டனர். 700 குழந்தைகள் கொல்லப்பட்டுவிட்டனர். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகாயத்துக்கு உள்ளாகி, மருத்துவ சிகிச்சையின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிரணாப் முகர்ஜி கொழும்புக்குப் போய் வந்த பிறகும் இந்தப் படுகொலைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

கடந்த 28 ஆம் தேதி தூத்துக்குடியில் அரசு விழா ஒன்றில் பங்கேற்க பிரணாப் முகர்ஜி வந்தபோது, அவருக்கு எதிராக வை.கோ. தலைமையில் தமிழின

(4 ஆம் பக்கம்)

## ‘டெசோ’ கூட்டங்களில் கலைஞர் பேசியது என்ன? (2)

# ஆயுதம் ஏந்தும் காலம் வரும்

*நாம் கீழே வெளியிட்டிருப்பது கலைஞரின் உரை. தமிழின உணர்வோடு இந்திய ஒருமைப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கும் போர் முழக்கம். 1985 ஆம் ஆண்டு எதிர்கட்சியில் இருந்த கலைஞர் காங்கிரஸ் ஆட்சியை நோக்கி வைத்த கேள்விகள். தி.மு.க. தலைமைக் கழகமே, “தமிழனுக்கு ஒரு நாடு; தமிழ் ஈழ நாடு” என்ற தலைப்பில் இந்த உரையை நூலாக வெளியிட்டுள்ளது. ஒருமைப்பாட்டுக்கு எதிராக, கலைஞர் பேசியதில் கால்பங்கு கூட பேசாத சீமானை, கொளத்தூர் மணியை அதே கலைஞர் சிறைப்படுத்தியிருக்கிறார். அப்போது ஆட்சியில் இருந்த எம்.ஜி.ஆர். - கலைஞர் மீது இந்த உரைகளுக்காக எந்த வழக்கையும் போடவில்லை.*

“நான் உறுதியாகச் சொல்கிறேன். அரசியல் லாபத்திற்காகத் தான் இலங்கைப் பிரச்சினையை எடுக்கிறோம் என்று யாராவது சொன்னால், நாங்கள் நடந்து முடிந்த பொது தேர்தலிலேயே இலங்கைப் பிரச்சினையை முன் வைத்திருப்போம்.

நாங்கள் இலங்கைப் பிரச்சினையை அரசியல் ஆதாயத்திற்காக வலியுறுத்த விரும்பவில்லை. இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சியினருக்கும், கட்சி சார்பற்ற முறையில் உடலிலே ஓடுகின்ற இரத்தம், தமிழ் இரத்தமானால், இதயத்தில் துடிக்கின்ற துடிப்பு ஒவ்வொன்றும் தமிழ்!! தமிழ்! என்று துடிப்பது உண்மையானால் அந்தத் தமிழன் சிந்திக்கட்டும்.

இலங்கையில் செத்துக் கொண்டிருக்கும் தமிழனை காப்பாற்ற வேண்டுமா? வேண்டாமா?

அவனுடைய உரிமைக் குரலுக்கு ஆதரவு தர வேண்டுமா வேண்டாமா என்பதை! பழங்கதை பேசிப் பயனில்லை; வீரம் பேசிப் பயனில்லை. கனக விஜயர் தலையில் கல்லேற்றிக் கொண்டு வந்தான் செங்குட்டுவன். காவிரிக்கு கரை கட்ட பன்னீராயிரம் சிங்களவர்களை கைதிகளாகக் கொண்டு வந்தான் கரிகாலன்; ராஜேந்திர சோழன் கடாரம் சென்றான்; வென்றான்! இது சரித்திரம்!

ஆனால், அந்த சரித்திரத்தின் விழுதுகளாக நாம் இருக்கிறோமா? இனிப் பழங்கதைப் பேசிப் பயனில்லை. செயலில் இறங்க வேண்டும்.

என்ன செயலில்? எப்படிப்பட்ட செயலில்? **ஆளுக்கு ஓர் ஆயுதத்தைத் தூக்குவதா என்று கேட்பீர்கள். அப்படி ஒரு காலம் வந்தால் தட்டிக் கழிக்க முடியாது.** ஆனால், அந்தக் காலம் இப்போது வந்துவிடும் என்றும் என்னால் சொல்ல முடியவில்லை.

**இந்தத் தலைமுறையில் இல்லாவிட்டாலும் அடுத்த தலைமுறையில் அது வரலாம்.**

**ஏனென்றால் தமிழினத்தை அழித்துத்தான் தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப் பதும், அதைத் தடுக்காமல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நம்மை ஆளுகின்ற அரசு இங்கே இருப்பதும், அதைப் பார்த்தும் பார்க்காததைப் போல நாம் பாமரர்களாய், பஞ்சைகளாய், பரிதாபத் திற்குரியவர்களாய் உலவுவதும் நியாயமில்லை.**

எனவேதான் சொல்லுகிறேன், இன்றில்லாவிட் டாலும் நாளை, நாளை தவறினால் மறுநாள் உலகத்திலே இருக்கின்ற தமிழனுக்கு ஒரு நாடு கிடைத்தாக வேண்டும். அப்படிக் கிடைக்கின்ற நாடு எளிதாய்க் கிடைக்கக் கூடிய ஒன்றாக - அதற்குத் தயாராகிவிட்ட நிலையிலே உள்ளதாக இருப்பது தனித் தமிழ் ஈழ நாடாகும். அந்தத் தனித் தமிழ் ஈழ நாட்டைப் பெறுவதற்காக நம்மாலான அனைத்துத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்போம்.

தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சிகளுமே கட்சிகளுக்கு அப்பாற்பட்டு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ஓரணியில் நிற்க வேண்டும்.

### பிரதமர் ராஜீவின் பொல்லாத பேச்சு

பத்திரிகைச் செய்தியின் குறிப்புப்படி அக்டோபர் முதல் நாள் பயங்கரமான எரிகுண்டுகள் தமிழர்கள் பெரும்பாலும் வாழுகின்ற திரிகோண மலைப் பகுதியிலே வீசி எறியப்பட்டு, பத்தாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி கிடைத்திருக்கிறது.

250 பேர் தப்பித்துப் பிழைத்து அகதிகளாக வந்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இரண்டு விடுதலைப் போராளிகள் முகமெல்லாம் கருகிப் போய் தமிழகத்திற்கு வந்து சேர்ந்தார்கள் என்ற தகவலும் கிடைத்திருக்கிறது.

இப்படி நடைபெறுகின்ற அக்கிரமங்களை நாம் கண்டிக்கத்தான் இந்த பேரணிகளையும் பொதுக் கூட்டங்களையும் நடத்துகிறோம்.

இந்த அக்கிரமத்தை கேட்க வேறு ஆளே இல்லையா? நாம் கேட்க வேண்டிய முறைப்படி யெல்லாம் கேட்டாகி விட்டது -

1983 ஆம் ஆண்டில் இந்த அநியாய இனப் படுகொலை இலங்கையில் தொடங்கியவுடன் தமிழகம் கொந்தளித்தது - கிளர்ச்சி வடிவெடுத்தது.

ஜனநாயக ரீதியில் அணுகிப் பார்த்தோம். போராட்ட ரீதியில் அணுகிப் பார்த்தோம். பல முறையீடுகளை எடுத்துச் சென்று அன்றைக்கு பிரதமராக இருந்த இந்திராகாந்தி அவர்களை சந்தித்துப் பார்த்தோம். எதுவும் நடைபெறவில்லை.

இப்போது நடைபெறுகின்ற அக்கிரமங்களை மாநிலங்களவையில் வை.கோபால்சாமி, எல். கணேசன் போன்றவர்கள் எடுத்துச் சொன்ன போதும், நாடாளுமன்றத்திலே என்.வி.என். சோமுவும், கலாநிதியும் எடுத்துச் சொன்ன போதும் கிடைத்த பதிலென்ன?

வெளிநாட்டிலிருந்து வரும் ஒரு விமானத்தில் சிங்களவர் ஆயுதங்களை ஏற்றி வந்தார்கள். அப்படி ஆயுதங்களை ஏற்றி வந்த அந்த விமானம் எண்ணெய் இல்லாத காரணத்தால் திருவனந்தபுரத்திலே இறங்கியது. அந்த விமானத்தில் ஆயுதங்கள் இருக்கின்றன. அதை இலங்கைக்கு அனுப்புவீர்களேயானால், அது இலங்கைத் தமிழர்களைக் கொல்லப் பயன்படுத்தப் படும். எனவே அங்கே அனுப்பாதீர்கள் என்று தமிழ்நாடு ஒருமித்த குரல் கொடுத்து கேட்டுக் கொண்டது. அப்படியிருந்தும் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் தமிழ்நாட்டு மக்களுடைய கோரிக்கையை காலில் போட்டு மிதித்து விட்டு, தமிழர்களைக் கொல்லுகின்ற ஆயுதங்களைத் தாங்கியிருந்த அந்த விமானத்தை இலங்கைக்கு அனுப்பியது நியாயம் தானா? என்று கோபால்சாமி கேட்டபோது பிரதமர் எழுந்து, “அந்த ஆயுதங்களில் - ‘இது தமிழர்களைக் கொல்ல’ என்று எழுதப்படவில்லை” என்று சொன்னார்.

உலகத்தில் எந்த யுத்தத்திலாவது - எந்த துப்பாக்கிக் குண்டிலாவது - அல்லது எந்த துப்பாக்கியிலாவது இது இன்னின்னாரைக் கொல்ல என்று எழுதப்பட்டிருக்குமா?

நான் வேதனையோடு ராஜீவ்காந்தி அவர்களை பார்த்து கேட்கிறேன். அன்னை இந்திராகாந்தியின் உடலைப் பல குண்டுகள் துளைத்தனவே - அதிலே எந்தக் ‘குண்டிலாவது இது இந்திரா காந்தியைக் கொல்ல’ என்று எழுதப்பட்டிருந்ததா?

ஆனால், கொஞ்சமும் ஈவிரக்கம் இல்லாமல், உணர்வு இல்லாமல், விமானத்தை அனுப்பி - அதிலே வந்த ஆயுதங்கள் தமிழர்களைக் கொல்ல பயன்படுத்தப்பட்டன. இது நியாயம்தானா என்று கேட்டோம்.

இப்படிக் கேட்ட கோபால்சாமிக்கு கிடைத்த பதில் அந்த ஆயுதத்தில் தமிர்களைக் கொல்ல என்று எழுதப்படவில்லை என்கின்ற ஹாசியமான - நகைச்சுவை வாய்ந்த ஒரு பதிலைத்தான் பிரதமர் ராஜீவ்காந்தி தருகிறார்.

எனவேதான் இலங்கையில் இருக்கிற தமிழர் களைக் காப்பாற்ற நாம்தான் முன்வரவேண்டும். நாம் தான் குரலெழுப்ப வேண்டும் என்கின்ற இறுதி முடிவுக்கு இன்றைக்கு நாம் வந்திருக்கின்றோம்.

**(தொடரும்)**

# ராஜீவ் கொலையில் சு.சாமி தொடர்பு

ராஜீவ் கொலையில் நடந்த சதி பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜெயின் கமிஷன் சந்திராசாமி - சுப்ர மணியசாமி இருவர் மீதும் சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது.

ராஜீவ் கொலையில் - தமிழகத் தலைவர்களைத் தொடர்புபடுத்தி மிரட்டி வந்தவர் சுப்ரமணியசாமி. இந்த பார்ப்பனரே - ராஜீவ் கொலையில் சந்தேகத்துக்கு உரியவர். ஜெயின் கமிஷன் - சுப்ரமணியசாமி மீதும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளது. ஜெயின் கமிஷன் அறிக்கையில் சுப்ரமணியசாமி பற்றி கூறப்பட்டிருப்பது என்ன? இதோ சில பகுதிகள்:

1995 ஜூன், ஜூலையில் சந்திராசாமியும், சுப்ரணியசாமியும் லண்டனுக்குப் போயிருக்கிறார்கள். இவர்களில் லண்டன் பயணத்தின் நோக்கம் குழப் பத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்து கிறது.

காலிஸ்தான் விடுதலைப் படையைச் சார்ந்த ஜெக்ஜித்சிங் சவுகான் என்பவர் - அகாலிதளம் கட்சியைச் சார்ந்த சேவா தாஸ் என்பவரிடம் ராஜீவ் காந்தியைக் கொல்லத் திட்டம் இருப்ப தாகக் கூறி இருக்கிறார். இதை சேவா தாஸ் என்பவர் ஜெயின் கமிஷன் முன் தெரிவித்தார். லண்டனில் உள்ள சவுகான் வீட்டில் - தீவிரவாதிகள் பங்கு கொண்ட ஒரு கூட்டம் நடந்தது என்றும், அதில் இந்தக் கொலைத் திட்டம் பற்றி கூறப்பட்டது என்றும் அவர் மேலும் கூறினார். இந்த நிலையில் - சவுகானை அப்ரூவராக மாறும்படி வலியுறுத்தவே சந்திராசாமியும், சுப்ர மணியசாமியும் லண்டன் சென் றார்களா என்று, கமிஷனில் கேள்வி எழுப்பப்பட்டது. ஜெயின் தனது அறிக்கையில் இதைக் குறிப்பிட்டு சுப்ரமணியசாமிக்கு எதிராக சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார்.

கமிஷன் முன்பு சுப்ரமணியசாமி நடந்து கொண்ட முறையையும் கமிஷன் குறை கூறியுள்ளதோடு, பல தேவை யான பொருத்தமுள்ள கேள்விகளுக்கு, சுப்ரமணியசாமி பதிலளிக்க மறுத்து விட்டதால் உண்மையைக் கண்டறிய அவர் ஒத்துழைக்கவில்லை என்றும் கமிஷன் தனது அறிக்கையில் 8-வது பகுதியில் 231-வது பக்கத்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

If would appear that consistant and persistant effort is there on his (Subramania samy) part not to answer the questions which are most relevant in order to find out the truth (JAIN COMMISSION REPORT vol. VIII-page 231)

இந்தப் பின்னணியில் - சுப்ரமணிய சாமி பற்றி அவரது கட்சிச் செய லாளராக இருந்த வேலுசாமி என்பவர் ஜெயின் கமிஷன் முன்பு அளித்த சாட்சியத்தையும் குறிப்பிட வேண்டும்.

வேலுசாமி அளித்த சாட்சியம்:

1991 மே 24-ம் தேதியோடு தமிழகத் தில் தேர்தல் பிரச்சாரம் முடிவடைய இருந்தது. அதற்கு 3 நாட்களுக்கு முன்பு மே 31-ம் தேதி ராஜீவ் திருப்பெரும் புதூரில் கொலை செய்யப்பட்டார்.

மே 19-ம் தேதி தில்லியிலிருந்து தமிழகம் வந்த சுப்ரமணியசாமி திருப்பெரும்புதூர் பகுதிக்குத்தான் சென்றார். திருப்பெரும்புதூர் வழியாக நாங்கள் காஞ்சிபுரம் சென்று, பகல் உணவை முடித்துக் கொண்டு வாலாஜா பாத்துக்குச் சென்று பிரச்சாரம்

(4 ஆம் பக்கம்)

# பெரியார்: நாட்டுடைமையாக்குதலின் அரசியல்

**எஸ்.வி. ராஜதுரை**

*(கட்டுரையாளர் பெரியாரிய சிந்தனையாளர். பெரியாரியம் தொடர்பான பல ஆய்வு நூல்களை எழுதியவர். திருச்சி பாரதிதாசன் பல்கலையின் பெரியார் உயராய்வு மய்யத்தின் தலைவராக செயலாற்றியவர்.)*

தமிழக அரசு, பெரியாரின் எழுத்துகளையும், பேச்சுகளையும் நாட்டுடைமை ஆக்காமல் இருப்பதற்கான காரணங்களைத் தமிழக முதல்வர் நேரடியாகக் கூறாமல், மூத்த பத்திரிகையாளரும், சமூகவியல் அறிஞருமான சின்ன குத்தூசி மூலம் இப்படி எழுத வைத்திருக்கிறார்:

"பெரியார் நூல்களை நாட்டுடைமை ஆக்க வேண்டுமா என்பது பற்றிய வழக்கு உயர்நீதிமன்ற விசாரணையில் உள்ளது. ஆகவே, அது பற்றி இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை."

"பெரியார் உயிரோடு இருந்த காலத்தில் அவருடைய நூல்களையும் இயக்கப் பிரச்சார நூல்களையும் வெளியிடுவதற்காக பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தை தொடங்கினார். 1920-களிலிருந்து அவர் ஆற்றிய பேருரைகள், எழுதிய ஆய்வு நூல்கள் அனைத்தையும் அந்த நிறுவனமே தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. அது மட்டுமல்ல, அவரது நூல்களையும் அவர் கண்ட பகுத்தறிவு இயக்கத்தின் நூல்களையும் நகர்வுப் புத்தகக் காட்சி அமைத்து ஆண்டு முழுவதும் தமிழகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் எடுத்துச் சென்று மக்களிடம் சேர்ப்பித்து வருகிறோம்" என்கிறார்கள் பெரியார் கண்ட திராவிடர் கழகத்தின் கருஞ் சட்டைப் படையினர்."

முதலாவதாக, உயர்நீதிமன்ற விசாரணையில் இருப்பது பெரியார் நூல்களை நாட்டுடைமை ஆக்க வேண்டுமா, கூடாதா என்பது பற்றிய வழக்கு அல்ல. மாறாக, 1925 முதல் 1938 வரை 'குடிஅரசு' ஏட்டில் வெளிவந்த பெரியாரின் பேச்சுகள், எழுத்துகள் ஆகியவற்றைத் தொகுத்துப் பெரியார் திராவிடர் கழகத்தினர் வெளியிடுவதைத் தடுக்கும்படியும், தனக்கு இழப்பீடாக 15 லட்சம் ரூபாய் வழங்கும்படியும் ஆணையிடுமாறு உயர்நீதிமன்றத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தொடுத்த வழக்குதான்.

இரண்டாவதாக, பெரியாரின் நூல்கள் என வெளியிடப்பட்டு வருபவை 'மதம்', 'சாதி - தீண்டாமை', கடவுள்', 'பெண்ணுரிமை', 'பகுத்தறிவு', 'ஏன், எதற்காக' போன்ற தனித்தனிப் பகுதிகளாக, பல இடங்களில் பெரியார் தந்த தலைப்புகளை மாற்றிப்போட்டு - வெளியிடப்படும் கட்டுரைத் தொகுப்புகள் தாம். பெரியாரின் சிந்தனையில் சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, கடவுள் மறுப்பு, மத எதிர்ப்பு, பொருளாதார சமதர்மம் ஆகியன ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவை. மேலும், அது அவர் வாழ்ந்த சமூக, அரசியல், பண்பாட்டுப் பின்புலத்தில் விளைந்ததேயன்றி சுத்த சுயம்புவாக அல்ல.

மூன்றாவதாக, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், தற்போது மேற்கொண்டுள்ள வெளியீட்டு முறையால் பெரியாரின் பேச்சுகளையும், எழுத்துகளையும் முழுமையாக வெளியிட முடியாது. அந்த நிறுவனத்திடம் பெரியாரின் எழுத்துகளும், பேச்சுகளும் முழுமையாக இல்லை.

நான்காவதாக, பெரியாரின் கொள்கைகளை வீரமணி துணிந்து திரித்து வருவது தொடர்பாக எனது 'பெரியார்: மரபும் திரிபும்' நூல் உள்பட, தமிழகத்தில் ஏராளமான கட்டுரைகள் அசைக்க முடியாத சான்றாதாரங்களுடன் வெளிவந்துள்ளன.

எப்படி இருப்பினும், பெரியாரின் எழுத்துகளுக்கும், பேச்சுகளுக்கும் வீரமணி சட்டரீதியான மரபுரிமையர் அல்லர் என்பதைத்தான் முதல்வர் இங்கு மறைமுகமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்.

வீரமணி கொண்டாடும் மரபுரிமை என்னும் விஷயத்திற்குப் போகும்முன் வேறொன்றைத் தெளிவுபடுத்த வேண்டும். தமிழகத்திலுள்ள பல்வேறு தரப்பினரால் நீண்டகாலமாக அரசாங்கத்திடம் முன்வைக்கப்படும் கோரிக்கை, பெரியாரின் எழுத்துகள், பேச்சுகள் அனைத்தும் நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டும்; அதுவும் கால வரிசைப்படியான தொகுப்புகளாக என்பதுதானேயன்றி பெரியாரின் நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்பதல்ல.

பெரியாரின் நூல்கள் என இதுவரை வெளிவந்துள்ளவற்றில் பெரியாரின் ஆக்கங்கள் பத்து சதவிகிதம் கூடத் தேறாது. காந்தி, பாரதியார், மார்க்ஸ், லெனின் போன்றோரது ஆக்கங்களைப் போலவே பெரியாரின் எழுத்துகளையும், பேச்சுகளையும் காலவரிசைப்படி தொகுத்து வெளியிட்டால்தான் அவரது சிந்தனையிலும் செயலிலும் ஏற்பட்ட பரிணாமத்தையும் அவற்றுக்கான சமூக, அரசியல் பின்னணிகளையும் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால், வீரமணியோ, 'ஆனந்த விகடன்' ஏட்டிற்கு கொடுத்த பேட்டியில், "மொத்தமாகப் பதிப்பிக்கும்போது, கொள்கைக் குழப்பங்கள் ஏற்படும்" என்னும் விநோதமான கருத்தைக் கூறியிருக்கிறார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்குக்கான மனுவில் (26.8.2008) "தீவிர முயற்சிகள் மேற்கொண்டு, குடிஅரசு, ஜஸ்டிஸ், ரிவோல்ட், மாடர்ன் ரேஷனலிஸ்ட் முதலிய ஏடுகளில் பிரசுரிக்கப்பட்ட பெரியாரின் பேச்சுகள், எழுத்துகள், பேட்டிகள், இதர விஷயங்கள் ஆகிய அனைத்தையும் திரட்டி வைத்துள்ளதாக" வீரமணி கூறியுள்ளார். ஆனால், 20.12.2008-ம் தேதிய 'விடுதலை' இதழில் தன்னிடம் இல்லாத 'குடி அரசு' முதலிய ஏடுகள் பற்றிய நீண்ட பட்டியலை வெளியிட்டு, அவற்றைத் தனது இயக்க நூலகத்துக்குத் தந்துதவுமாறு 'கழகத் தோழர்கள் மற்றும் கழகப் பற்றாளர்களுக்கு' வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரிடம் இல்லாதவைகளில் ஏறத்தாழ எட்டாண்டு கால 'குடிஅரசு', இரண்டாண்டு கால 'விடுதலை' ஆகியனவும் அடங்கும். 1989, 1990-ம் ஆண்டு 'விடுதலை' இதழ்கள்கூட அவரிடம் இல்லை! பெரியார் தன்னிடம் விட்டுச் சென்றதை வீரமணி உரிமை கொண்டாடும் 'அறிவுசார் சொத்து' அவரால் இப்படித்தான் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

பெரியாரைத் தலைவராகக் கொண்டு நிறுவப்பட்டதும் 1952-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டதுமான 'பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்' என்னும் நிறுவனத்தின் தற்போதைய செயலர் என்னும் முறையில் அந்த நிறுவனத்தின் சட்டதிட்டங்களில் கூறப்பட்டுள்ள கடமைகளையும், சொத்துகளையும் நிர்வகிக்கும் உரிமை வீரமணிக்கு மட்டுமே உண்டு என்பதை யாரும் மறுக்கவில்லை. அந்த சட்ட திட்டங்கள் பிரிவு 2 (b) (iv) மற்றும் (v) ஆகியன.

மேற்சொன்ன நிறுவனத்தின் குறிக்கோள்களை எய்யும் பொருட்டு செய்தித்தாள்கள், ஏடுகள் ஆகியவற்றை நடத்துவதும் புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றைப் பிரசுரித்து சுற்றுக்கு விடுவதும் இது போன்ற இதர நிர்மாணப் பணிகளைச் செய்வதும் ஆகும் எனக் கூறுகின்றன. ஆதரவற்றவர்களுக்கும், கணவரை இழந்தோர்க்கும் இல்லங்களும், கல்வி நிறுவனங்களும் கட்டுவது இந்த நிறுவனத்தின் பணிகளில் ஒன்று என மற்றொரு துணைப் பிரிவு கூறுகிறது. ஆனால், கல்வியை வணிக ரீதியாக்க வேண்டும் என்று எந்தப் பிரிவும் கூறுவதில்லை.

பெரியாரின் வாழ்வும், சிந்தனையும் இந்த நிறுவனத்தையும் கடந்து அரசியல், பண்பாட்டு, சமூகத் தளங்களில் இயங்கின. இந்த நிறுவனத்திற்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களையும், கடமைகளையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான செலவுகளுக்காகப் பெரியாரும் அந்த நிறுவனத்தைச் சேர்ந்த பிறரும் சில சொத்துக்களை வாங்கினர். இது குறித்து மேற்சொன்ன சட்டதிட்டப் பிரிவு 22 கூறுகிறது.

"பெரியார் ஈ.வெ.ராமசாமியால், சுயமரியாதை சங்கத்திற்காக அதன் நிதிகளில் இருந்து அச்சங்கத்தின் தலைவர் என்னும் முறையில் அவர் பெயரிலும் அவரது சொந்தப் பெயரிலும், நிறுவனத்தின் தலைவர் பெரியார் ஈ.வெ.ராமசாமியால் ஏற்கனவே வாங்கப்பட்ட சொத்துக்களுக்கும், நிறுவனத்தின் நிர்வாகக் குழுவின் ஆயுள்கால உறுப்பினர்களே அறங்காவலர்களாக இருப்பர்."

தற்போது இந்த நிறுவனத்தின் செயலராக இருக்கும் வீரமணி, இதனுடைய சொத்துக்களுக்கான மரபுரிமை கொண்டாடுவது சட்டப்படி சரியானதே! ஆனால், இந்த சொத்துக்களில், பெரியாரின் எழுத்துகள், பேச்சுகள் ஆகியவற்றுக்கான பதிப்புரிமையும் அடங்கும் என்னும் அவரது கூற்று விவாதத்திற்குரியது. இந்தக் கூற்றுக்கு ஆதாரமாக அமெரிக்க நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்பொன்றில் 'சொத்து' என்பதற்குத் தரப்பட்டுள்ள விளக்கமொன்றினைக் கூறுகிறார். இந்த விளக்கத்தின்படி, 'சொத்து' என்பது 'கண்ணுக்குப் புலப்படுகிற, புலப்படாத, தொட்டுணரக்கூடிய, தொட்டுணர முடியாதது என்பது அவரது விளக்கம்.

இந்தத் தீர்ப்பு, சொத்து பற்றிய வேறு சில வரையறைகளையும் குறிப்பிடுகிறது. "ஏற்கெனவே உள்ள செல்வத்தைப் பெருக்கும் தன்மையுடையது; பரிவர்த்தனை மதிப்புடையது" என்பன இந்த வரையறைகளில் அடங்கும். அதாவது, வீரமணி உரிமை கொண்டாடும் பெரியாரின் அறிவுசார் சொத்து, அவரிடம் ஏற்கெனவே உள்ள செல்வத்தைப் பெருக்கும். பரிவர்த்தனை மதிப்பைக் கொண்டிருக்கும். 'அறிவுசார் சொத்துரிமை' கொண்டாடும் ஒருவர் அமெரிக்க நீதிமன்றத்தைத் துணைக்கு அழைப்பதில் ஆச்சரியமில்லை!

சொத்துரிமை தொடர்பான இந்திய சட்டங்களின்படி இந்த விளக்கம் ஏற்றுக் கொள்ளப்படும் சாத்தியப்பாடு உண்டு என்பதை வாதத்திற்காக நாம் ஒப்புக் கொண்டாலும், வேறு சில சிக்கல்களை வீரமணி எதிர்கொண்டாக வேண்டும்.

மேற்சொன்ன நிறுவனத்தின் சட்டதிட்டங்கள் பிரிவு 22, 'பெரியாரால் ஏற்கனவே வாங்கப்பட்ட சொத்துகள்' பற்றிக் கூறுகின்றது. அவை பெரியாரின் எழுத்துகள், பேச்சுகள் ஆகியவற்றுக்கான பதிப்புரிமையையும் உள்ளடக்கும் என்னும் வீரமணியின் வாதத்தைப் பின்பற்றினால், பெரியார் தனது எழுத்துகளையும், பேச்சுகளையும் தானே விலை கொடுத்து வாங்கினார் என்பதுதான் தர்க்கரீதியான அர்த்தமாக இருக்க முடியும்! இந்த அபத்தத்தைத் தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என வீரமணி விரும்புகிறார் போலும்!

மேற்சொன்ன பிரிவு 22, "சுயமரியாதை சங்கத்திற்காக, சுயமரியாதை சங்கத்தின் நிதியிலிருந்து பெரியார் வாங்கிய சொத்துகள்" என்று தான் கூறுகிறது. பெரியார் கட்டுரைகள் எழுதி வந்த 'குடிஅரசு', 'பகுத்தறிவு', 'புரட்சி', 'விடுதலை', 'ரிவோல்ட்', 'ஜஸ்டிஸ்' முதலிய ஏடுகள் ஏதும் 'சுயமரியாதை சங்கத்தால்' வெளியிடப்பட்டவை அல்ல; அந்த சுயமரியாதை சங்கம் பதிவு செய்யப்பட்ட சங்கமும் அல்ல.

வீரமணி தற்போது செயலாளராக இருக்கும் நிறுவனம் உள்ளிட்ட அமைப்புகளுக்கோ, தனி நபர்களுக்கோ பெரியார் விட்டுச் சென்றவை தவிர வேறு ஏதேனும் சொத்துகள் இருக்குமேயானால், அவை சட்டப்படி அவரது துணைவியார் மணி அம்மையாருடைய ரத்த உறவுகளில் யாரேனும் ஒருவருக்குத்தான் போய்ச் சேரும்.

தவிரவும், இந்தியப் பதிப்புரிமைச் சட்டத்தின் படி, ஒருவர் தனது எழுத்துகளுக்கும் (அச்சில் வந்தவை, வராதவை) பேச்சுகளுக்கும் (அச்சில் வந்தவை) வேறு யாருக்கேனும் பதிப்புரிமை வழங்குவதாக இருந்தால் அது அவராலோ, அவரது அத்தாட்சி பெற்ற பிரநிதியாலோ, எழுத்துப்பூர்வமாகத் தரப்பட்ட ஒப்புதலாக இருக்க வேண்டும். பெரியார், தனது எழுத்துகளுக்கும், பேச்சுகளுக்கும் வீரமணிக்குப் பதிப்புரிமை வழங்க எழுத்துப்பூர்வமான ஒப்புதலைத் தந்ததற்கான சான்றுகள் ஏதும் இல்லை. அம்பேத்கரின் பேச்சுகளும், எழுத்துகளும் இந்தியாவில் நூற்றுக்கணக்கானோரால் பதிப்பிக்கப்படுகின்றன. எனினும், காலவரிசைப்படி இல்லாவிட்டாலும் அவற்றை முழுமையாகத் தொகுத்து மலிவு விலையில் வெளியிடும் பணியை மகாராஷ்டிரா அரசாங்கம்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

எனவே, பெரியாரின் பேச்சுகளும் எழுத்துகளும் அவர் இறந்து 36 ஆண்டுகளுக்குப் பிறகாவது முழுமையாக அனைத்து மக்களுக்கும் போய்ச் சேரும் வகையில் தமிழக அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதுதான் நமது வேண்டுகோள்.

**('தினமணி' நாளேடு 26.2.2009-ல் வெளியிட்ட கட்டுரை)**

### பெரியார் நூல்கள் நாட்டுடைமையாக்க பத்திரிகையாளர்கள் வலியுறுத்தல்

*மார்ச் 3 ஆம் தேதி காலை 8.30 மணியளவில் 'இசட்-தமிழ்' தொலைக்காட்சியில் - நூல்கள் நாட்டுடைமை பற்றிய விவாதம் நடந்தது. விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய பத்திரிகையாளர்கள் சிகாமணி, 'தீக்கதிர்' பொறுப்பாசிரியர் க.பொ. அகத்தியலிங்கம் ஆகியோர் - "பெரியார் எழுத்து-பேச்சு நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும்" என்று வலியுறுத்தினர்.*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## கொளத்தூர் மணி – சீமானை விடுதலை செய்!
## தமிழினக் கருத்துரிமைக்கு தடையா?
## கருத்துரிமை மீட்பு உரிமை முழக்கம்

நாள் : 9.3.2009, திங்கள் மாலை 5 மணி

இடம் : முத்துரங்கம் சாலை, பெரியார் நினைவுத் திடல் (சென்னை தியாகராயர் பேருந்து நிலையம் அருகில்)

தலைமை : விடுதலை இராசேந்திரன்

உரை : மாண்புமிகு சுரேஷ் (மும்பை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி)
பால். கனகராஜ் (தலைவர், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம்)
தமிழருவி மணியன், பெ. மணியரசன், தியாகு,
வழக்கறிஞர் பாண்டிமா தேவி மற்றும் பலர்

ஏற்பாடு : தமிழர் ஒருங்கிணைப்பு

### கொளத்தூர் மணி – சீமானை விடுதலை செய்

***அன்று – ஜெயலலிதா ஆட்சியில் நேரடி 'பொடா'***

***இன்று – தி.மு.க. ஆட்சியில் மறைமுக 'பொடா'***

***அடக்குமுறையால் – தமிழின உரிமைக் குரலை அடக்கிட முடியாது***

**– பெரியார் திராவிடர் கழகம்**

(மேற்கண்ட வாசகம் அடங்கிய சுவரொட்டிகள் - கழக சார்பில் சென்னையில் ஒட்டப்பட்டுள்ளன)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உணர்வாளர்கள் கருப்புக்கொடி காட்டியபோது தி.மு.க. ஆட்சி கைது செய்து சிறையிலடைத்துவிட்டது. 'பிரணாப் முகர்ஜி' உருவ பொம்மையை எரித்தால் தேசிய பாதுகாப்புச் சட்டம் பாயும் என்கிறார் கலைஞர்.

தூத்துக்குடியில் பேசிய பிரணாப் முகர்ஜி, முதல்முறையாக போரை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு வேண்டுகோள் விடுத்தபோது, "பரவாயில்லை, தமிழர்களின் உணர்வுகளை மத்திய அரசு மதிக்கத் தொடங்கியிருக்கிறதே" என்ற நம்பிக்கை துளிர் விட்டது. மத்திய அரசைப் பாராட்டுவதற்காக காத்துக் கொண்டே இருந்த கலைஞர், உடனே பிரணாப் முகர்ஜிக்கு 'தூயவர்' என்ற புகழாரம் சூட்டி அறிக்கை விடுத்தார். "பிரணாப் பேச்சு நம் நெஞ்சத்து அணலைத் தணித்து, ஆறுதல் பூங்காற்றால் வீசச் செய்திருக்கிறது" என்று எழுதியதோடு, பிரணாப் முகர்ஜிக்கு எதிராக கருப்புக்கொடி போராட்டம் நடத்தியவர்களை, "வக்கிர மூளையினர்; நாகரிகக் கேடர்கள்" என்றெல்லாம் கடும் வார்த்தைகளால் 'அர்ச்சனை' செய்தார்.

அது மட்டுமல்ல, பிரணாப் முகர்ஜி, இலங்கை அரசுக்கு விடுத்த வேண்டுகோளில், பிரதமர் மன்மோகன்சிங், சோனியாகாந்தியின் கருத்தும் கலந்திருக்கின்றன என்பதை நான் சொல்லவும்வேண்டுமோ? என்று அவர்களையும் இணைத்துக் கொண்டார்.

இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவையும் அவசரமாகக் கூடி, கலைஞர் மேற்கொண்ட இடைவிடாத முயற்சிக்கு வெற்றி கிடைத்துவிட்டது என்று தீர்மானம் போட்டு, பிரணாப் முகர்ஜிக்கு பாராட்டு மாலைகளை சூட்டி தீர்மானம் நிறைவேற்றியது. மின்னல் வேகத்தில் இவ்வளவு பாராட்டுகளைக் குவித்து, வெற்றி மாலைகளைத் தாங்களே கழுத்தில் போட்டுக் கொண்டு, காங்கிரஸ் ஆட்சிக்கு தமிழ்நாடு மக்களிடம் நற்சான்றிதழைப் பெற்றுத் தந்து, அதன் வழியாக தங்களது 'அரசியல் சந்தர்ப்பவாத'ங்களை மறைத்துக்கொள்ளத் துடித்தார்கள். ஆனால் என்ன நடந்தது?

"போரை நிறுத்துமாறு, இந்திய அரசிடமிருந்து அதிகாரபூர்வமாகவோ அல்லது அதிகாரபூர்வமற்ற முறையிலோ எந்தத் தகவலும் எங்களுக்கு வரவில்லை" என்று இலங்கையின் வெளியுறவுத் துறை செயலாளர் பாலித கோகனா அறிவித்து விட்டார்.

சிங்களர்களின் அதிகாரபூர்வ ஏடாக தமிழகத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் 'இந்து' நாளேட்டுக்கு அளித்த பேட்டியிலும், இலங்கையின் வெளிநாட்டுத் துறை செயலாளர் இதை உறுதிப்படுத்தியுள்ளார்.

காங்கிரஸ் ஆட்சியைப் பாராட்டுவதற்கு பேனாவை உதறிக் கொண்டு, மாலைகளைக் கரங்களில் ஏந்திக் கொண்டு காத்திருப்பவர்கள்.

தூத்துக்குடியில் பேசிய கருத்தை பிரணாப் - ஏன் இலங்கைக்கு அதிகாரபூர்வமான தெரிவிக்கவில்லை என்று கேட்டிருக்க வேண்டாமா?

அப்படியானால், தூத்துக்குடியில் பிரணாப் வெளியிட்ட கருத்து தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காகவா? சோனியா - மன்மோகன்சிங் எல்லாம் கலந்து ஆலோசிக்காமலா, பிரணாப் பேசியிருப்பார் என்று எழுதிய கலைஞர், சோனியா - மன்மோகன்சிங் ஆலோசனையோடுதான் இப்படி ஒரு ஏமாற்று நாடகம் நடந்திருக்கிறது என்று இப்போது எழுதுவாரா? இவை தமிழர்களிடம் எழுந்துள்ள நியாயமான சந்தேகங்கள்!

ஞாயிறு தோறும் 'முரசொலி' நாளேடு, முரசொலி மாறன் எழுதிய மாநில சுயாட்சி நூலின் பகுதிகளை வெளியிட்டு வருகிறது. அதில் கடந்த மார்ச் முதல் தேதி முரசொலி மாறனின் கட்டுரைக்கான தலைப்பு, 'கட்டளையிடுகிற எஜமானன் மத்திய அரசு' என்பதாகும்.

ஆனால், கட்டளையிடாமலே மத்திய அரசை எஜமானனாக ஏற்றுக் கொள்கிற நிலைக்கு, தி.மு.க. அரசு இப்போது வந்து நிற்கிறது, என்பதே உண்மை.

இப்படி - மத்திய அரசின் எஜமானத்துவத்தை வலியுறுத்தும் முரசொலி மாறன் கருத்தைப் பேசினால்கூட இறையாண்மைக்கு எதிரானது என்று, தேசியப் பாதுகாப்புச் சட்டம் கலைஞர் ஆட்சியில் பாய்ந்தாலும் வியப்பதற்கில்லை. ●

# வேலுச்சாமியின் சாட்சியம்

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

செய்துவிட்டு, மீண்டும் காஞ்சிபுரம் திரும்பி கூட்டம் பேசிவிட்டு, பிறகு திருத்தணி, பள்ளிப்பட்டுக்குச் சென்று பிரச்சாரம் செய்துவிட்டு வேலூர் திரும்பினோம்.

அடுத்த நாள் 20-ம் தேதி சேலம், ஆத்தூர் சென்றுவிட்டு நான் விடை பெற்று திருச்சி சென்றுவிட்டேன். அடுத்து 21-ம் தேதி காலை சுப்ரமணியசாமி, விமானம் மூலம் டில்லி செல்லத் திட்டமிட்டிருந்தார். 21-ம் தேதி பகலில் டில்லியில் ஒரு முக்கிய வேலை இருக்கிறது. எனவே, அதை முடித்துக் கொண்டு 22-ம் தேதி சென்னை வந்து திருச்சி வழியே மதுரைக்குச் செல்கிறேன் என்று என்னிடம் சுப்ரமணியசாமி பயணத் திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்.

21-ம் தேதி இரவு தான் ராஜீவ் கொலை செய்யப்படுகிறார். அன்று சுப்ரமணியசாமி நடந்து கொண்ட விதம் அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது. 21-ம் தேதி காலையில் அவர் திட்டமிட்டபடி டில்லி செல்லவில்லை. அவரின் அன்றைய அனைத்து நடவடிக்கைகளும் மர்மமாகவே இருந்தன. அன்று, அவர் யாரை யாரைச் சந்தித்தார் என்ற விவரங்களும் ரகசியமாகவே இருக்கின்றன. 21-ம் தேதி காலை அவர் சென்னை விமான நிலையம் அருகே உள்ள டிரைடென்ட் ஓட்டலில்தான் தங்கியிருந்தார். சென்னையில் அவர் ஏன் மர்மமாகத் தங்கினார் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது. தன் கட்சியின் நெருங்கிய தோழர்களுக்குக் கூட தெரிவிக்காமல் அவர் தில்லி பயணத்தை ரத்து செய்தது ஏன் என்பது மர்மமாகவே இருக்கிறது.

நான் 21-ம் தேதி காலை - தில்லிக்கு சுப்ரமணியசாமியின் வீட்டுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவர் சென்னையில்தான் இருப்பார் என்று அவரது மனைவி கூறினார். பிறகு கட்சிப் பிரமுகர்களிடம் தொடர்பு கொண்டு விசாரித்தேன். சுப்ரமணியசாமி எங்கு இருக்கிறார் என்ற விவரம் யாருக்கும் தெரியவில்லை.

21-ம் தேதி காலை தில்லிக்கு விமானம் மூலம் புறப்படப் போவதாகக் கூறிய சுப்ரமணியசாமி அன்று காலையில் தில்லி பயண டிக்கெட்டை ரத்து செய்தார். பிறகு சென்னையி லிருந்து பெங்களூருக்கு திருப்பெரும்புதூர் வழியாக காரில் செல்ல வேண்டிய அவசியமென்ன? இதைத் தனது முக்கியத் தோழர்களுக்குக்கூட தெரிவிக்காமல் மறைத்தது ஏன்?

பெங்களூரில் யாரைச் சந்திக்க அவர் அவசரமாகப் போனார்? ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் பெங்களூரைத் தளமாகக் கொண்டு செயல்பட்டிருக்கலாம். ராஜீவ் கொலைக்குப் பிறகு கூடி அவர்கள் பெங்களூர் வழியாக வெளிநாட்டுக்குத் தப்பியிருக்கலாம். இந்த நிலையில் பெங்களூருக்கு யாரையோ அவசரமாகச் சந்திக்க சுப்ரமணியசாமி சென்றிருக்கிறார்.

அப்போது சுப்ரமணியசாமி மத்திய அமைச்சர். அமைச்சர் பதவிக்குரிய பல்வேறு வசதிகள் அவருக்கு உண்டு. மே 21-ம் தேதி அவருக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்ன? பாதுகாப்புக்காக செய்யப்பட்ட வசதிகள் என்ன? இது பற்றிய ஆவணங்களை தமிழக அரசு மற்றும் மத்திய அரசிடமிருந்து ஜெயின் கமிஷன் பெற வேண்டும்.

21-ம் தேதி இரவு 10.25 மணிக்கு நான் சுப்ரமணியசாமி வீட்டுக்குத் தொலைபேசியில் பேசினேன். அப்போது ராஜீவ் கொலை பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. யாருக்குமே எதுவுமே தெரியாது. 23-ம் தேதி அவரது திருச்சிப் பயணத்தை உறுதி செய்து கொள்ளவே நான் தொடர்பு கொண்டேன். தொலைபேசியை எடுத்த சாமி, என் குரலைக் கேட்டதும், மிக சர்வ சாதாரணமாக, ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற செய்தியைச் சொல்லத்தானே போன் செய்தீர்கள்? என்றார். நான் அதிர்ந்து போனேன். வெளி உலகத்துக்குத் தெரியாத தகவல் - இவருக்கு மட்டும் எப்படி தெரிந்தது?

சிறிது நாட்கள் கழித்து - அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த திருப்பெரும்புதூர் காங்கிரஸ் வேட்பாளர் மரகதம் சந்திரசேகரை நலம் விசாரிக்க நானும் சாமியும் போனோம். மரகதத்துக்குத் துளி காயம் கூட ஏற்படவில்லை. மரகதம் அம்மாள் பாசாங்கு செய்வது போலவே எனக்குத் தோன்றியது.

மரகதம் பற்றி பேச்சு எடுத்தபோது - அறையில் சொல்கிறேன் - நிறைய விஷயம் இருக்கு என்றார் சாமி. திருப்பெரும்புதூரில் - பொதுக் கூட்டத்துக்குத் தேர்வு செய்த இடம் மரகதத்துக்கேத் தெரியாது. அவருக்கே தெரியாமல் சிலர் தேர்வு செய்துவிட்டனர். அது சதிகாரர்களுக்குச் சாதகமாகிவிட்டது என்றார் சாமி. இந்த அளவுக்குத் துல்லியமான தகவல்கள் சாமிக்கு எப்படித் தெரிந்தன?

பிரதமர் சந்திரசேகருக்குத் தெரியும் முன்பே எனக்கு ராஜீவ் மரணச் செய்தி தெரிந்துவிட்டது என்று சுப்ரமணியசாமி கூறியிருப்பதை கமிஷன் கவனத்தில் கொள்ள வேண்டும்.


- என்று சுப்ரமணியசாமியுடன் மிக நெருக்கமாக உடனிருந்த திருச்சி இ.வேலுசாமி தனது சாட்சியத்தில் கூறி இருக்கிறார்.

ஜெயின் கமிஷன் முன்பு தரப்பட்ட இந்த சாட்சியமும் கமிஷன் தந்துள்ள பரிந்துரையும் சுப்ரமணியசாமி மீது விசாரணை நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. ●

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on: 5th March 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2040 | மார்ச் 12, 2009 | புரட்சி 8 | முழக்கம் 09 | விலை : ரூ.2.50


# சட்டத்துக்கே எதிரான கைது

## கொளத்தூர் மணி – சீமானை விடுதலை செய்க!



கொளத்தூர் மணி, சீமான் கைது – சட்டத்துக்கே எதிரானது என்பதை ஆணித்தரமாக விளக்கி, சென்னை தியாகராயர் நகர் கூட்டத்தில் தியாகு (தமிழ் தேசிய விடுதலை இயக்கம்) உரையாற்றினார். காடு வெட்டி குருவை விடுதலை செய்தது போல் – இருவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் பால் கனகராஜ் வலியுறுத்தினார்.

### தியாகு உரை



தோழர்களே, மீண்டும் இயக்குனர் சீமானை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழும், தோழர் கொளத்தூர் மணியை இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் சட்டப்புறம்பான தடைச் சட்டத்தின் சில பிரிவுகளின் கீழும் சிறைப்படுத்தி இருக்கிறார்கள். தோழர்களே, நான் மிகவும் சுருக்கமாக சில செய்திகளை தெரிவிக்க விரும்புகிறேன். முதலில், சிறைப்படுத்துவதற்கான உரிமை சட்டத்தில் யாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சீமானைக் கைது செய்வதற்கு உத்தரவிட்டிருப்பவர் நெல்லை காவல்துறை அதிகாரி மஞ்சுநாதன் அய்.பி.எஸ். என்பவர். தேசியப் பாதுகாப்பு சட்டப்படியோ, அல்லது வேறு தடுப்புக் காவல் சட்டப்படியோ, ஒருவரைக் கைது செய்ய வேண்டுமானால், அந்த அதிகாரி தன் விருப்பப்படி, மூளையைப் பயன்படுத்தித்தான் (Application of Mind) அதைச் செய்ய வேண்டும். இதுதான் சட்டம். முதலமைச்சருக்கோ, அமைச்சரவைக்கோ அல்லது மின்வெட்டுத் துறை அமைச்சர் ஆற்காட்டுக்கோ கைது செய்யும் ஆணை வழங்க சட்டப்படி அதிகாரம் கிடையாது. ஆனால் என்ன நடந்தது? சட்டப் பேரவையில் ஒரு காங்கிரஸ் உறுப்பினர், சீமானை எப்போது கைது செய்யப் போகிறீர்கள் என்று கேட்கும்போது, அமைச்சர் ஆற்காடு வீராசாமி, இன்றைக்கே தேசிய பாதுகாப்பு சட்டப்படியோ அல்லது வேறு ஏதோ ஒரு தடுப்புக் காவல் சட்டப்படியோ கைது செய்யப்படுவார் என்று விடையளிக்கிறார். இது சட்டப் பேரவைக் குறிப்பில் பதிவாகி இருக்கிறது. திருநெல்வேலி காவல்துறை அதிகாரி தன் விருப்பப்படி இந்தக் கைதை செய்யவில்லை. ஆற்காடு வீராசாமி சட்டப் பேரவையில் அறிவித்த பிறகே கைது செய்துள்ளார் என்பதற்கு கைது செய்யப்பட்ட தேதி சான்றாகும். அமைச்சர் ஆற்காடு வீராசாமி சட்டசபையில் இப்படி அறிவித்த பிறகுதான் காவல்துறை அதிகாரிக்கு தேசிய பாதுகாப்பு சட்டப்படி கைது செய்யப்பட வேண்டும் என்று தோன்றியிருக்கிறது. எனவே, தன் விருப்பப்படி மூளையைப் பயன்படுத்தி, காவல்துறை அதிகாரி இதைச் செய்யவில்லை என்பதால், இந்தக் கைது சட்ட விரோதம்.

அடுத்து, தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் இந்தக் கைது நடைபெற்றிருக்கிறது என்பதாகும். தடை செய்யப்பட்ட இயக்கத்தைப் பற்றிப் பேசினாலோ, இந்திய அரசை குறை கூறினாலோ, இந்திய இறையான்மையைப் பற்றிப் பேசினாலோ, தேசியப் பாதுகாப்பு சட்டம் பாயும் என்று பரவலாக ஒரு அச்சம் உருவாக்கப்பட்டிருக்கிறது. கைது செய்யப்பட்ட சீமானோ, கொளத்தூர் மணியோ இதற்காக அஞ்சவில்லை. அண்மையில் இயக்குனர் சீமானை சிறையில் சந்தித்து வந்த ஒடுக்குமுறைக்கு எதிரான பத்திரிகையாளர்கள், சீமான் எங்களுக்கு ஆறுதல் கூறி, அச்சமின்றி போராடுங்கள் என்று கூறியதாகக் கூறினார்கள். எனவே, கைதானவர்களுக்கு அச்சமில்லை. ஆனால், அவர்களைக் கைது செய்ததன் மூலம் மற்றவர்களை அச்சுறுத்துகிறார்கள்.

தேசிய பாதுகாப்பு சட்டம் எப்போது வந்தது? 1980 ஆம் ஆண்டு ‘மிசா’வுக்கு வாரிசாக இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது. ‘மிசா’வுக்கு முன்பு - ‘டி.அய்.ஆர்.’ டிபன்ஸ் ஆப் இந்தியா என்ற சட்டம் இருந்தது. அந்த சட்டத்தின் கீழ் தான் முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் - கருணாநிதியைக் கைது செய்தார். அந்த சட்டத்துக்கு எல்லாம் மூலம் பிரிட்டானியா அரசு கொண்டு வந்த ரவுலட் சட்டம். எனவே இந்த சட்டங்களுக்கு எல்லாம் மூலம் ரவுலட் சட்டம்தான். ஜாலியன் வாலாபாக்கில், கண்மூடித்தனமாக மக்களை சுட்டுக் கொன்ற ஜெனரல் டயர், நீதிமன்றத்தில் கூறும் போது, “நான் ஏன் தோட்டாக்கள் தீரும் வரை சுட்டுக் கொல்ல உத்தரவிட்டேன், தெரியுமா? அந்த மக்களின் உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதால் தான்” என்று சொன்னான். அதே டயரின் நோக்கத்தோடுதான்

(2 ஆம் பக்கம்)

## தியாகராயர் நகர் கூட்ட எழுச்சி

பெரியார் திராவிடர் கழகம், தமிழ் தேச பொதுவுடைமை கட்சி, தமிழ் தேசிய விடுதலை இயக்கம் ஆகிய அமைப்புகள் கூட்டாக உருவாக்கியுள்ள ‘தமிழர் ஒருங்கிணைப்பு’ என்ற அமைப்பின் சார்பில், கொளத்தூர் மணி, இயக்குனர் சீமானை விடுதலை செய்யக் கோரி கருத்துரிமை முழக்கம், சென்னை தியாகராயர் சாலையில் உள்ள முத்துரங்கம் சாலையில் 9.3.2009 மாலை எழுச்சியுடன் நடந்தது.

தென்சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத் தலைவர் தபசி குமரன் தலைமை தாங்கினார். சிவ காளிதாசன் (த.தே.வி.இ.) வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர் பாண்டிமா தேவி, சட்டக் கல்லூரி மாணவி தி.ல.சுதா காந்தி, இயக்குனர் ஆர்.கே. செல்வமணி, தியாகு (த.தே.வி.இ.), மும்பை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி எச். சுரேஷ், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தலைவர் பால். கனகராஜ், விடுதலை இராசேந்திரன் (பெ.தி.க.), பெ. மணியரசன் (த.தே.பொ.க.) ஆகியோர் உரையாற்றினர். கவி பாஸ்கர் நன்றி கூறினார். பெரும் திரளாக மக்கள் கூடியிருந்தனர்.

கொளத்தூர் மணி – சீமான் கைது சட்ட விரோதமானது என்பதற்கான அடுக்கடுக்கான வாதங்கள் முன் வைக்கப்பட்டதோடு, காங்கிரஸ் – தி.மு.க. துரோகங்களும், பார்ப்பன ஜெயலலிதாவின் நாடகங்களும் கூட்த்தில் விளக்கி பேசப்பட்டன. பொதுக் கூட்டமாக இருந்தாலும், அரங்கில் நடந்த கத்தரங்கு போல் மக்கள் அமைதியாக இறுதி வரை இருந்து உரைகளைக் கேட்டனர். தோழர் தியாகு கூட்டச் செலவுக்காக துண்டேந்தி நிதி திரட்டியபோது கூட்டத்தினர் வழங்கிய தொகை ரூ.5200.

# கூட்டணி நலனுக்கு - சட்டத்தைத் தவறாக பயன்படுத்துவதா?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இப்போது உயர்நீதிமன்றத்தில் தாக்குதல்களும் இந்தக் கைதுகளும் நடந்துள்ளன.

இப்போது - தேசிய பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 3 இல் அடங்கியுள்ள 2வது உட்பிரிவுப்படி சீமான் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தப் பிரிவு என்ன கூறுகிறது? மய்ய மாநில அரசுகளின் பாதுகாப்புக்கு மாறாக, பொது ஒழுங்குக்கு மாறாக அல்லது உணவுப் பண்டங்கள் வினியோகிப்பைக் குலைக்க எந்த வகையிலாவது **செயல்பட்டால்** (Acting in any manner) இந்தப் பிரிவை பயன்படுத்தலாம் என்று கூறுகிறது. செயல்படுதல் என்றால் என்ன? இந்த மேடையில் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்; சொல்லிக் கொண்டிருக் கிறேன். பேசுவதும், செயல்படுவதும் ஒன்று அல்ல. சொல் வேறு; செயல் வேறு என்பது - அதிகாரி மஞ்சுநாதனுக்கு தெரியுமா? அமைச்சர் ஆற்காடு வீராசாமிக்கு தெரியுமா? பேசுவது என்பது செயல்படுவது அல்ல என்று உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில் தெளிவுபடுத்திவிட்டது.

இப்போது - இறையாண்மை என்று ஏதோ ஒரு அதிசயப் பொருளைப் பற்றிப் பேசுகிறார்களே; அந்த இறையாண்மையைத் திணிக்கப் பார்க்கிறார்களே; அந்த இறையாண்மைக்கு எதிராகப் பேசுவது நாட்டின் எந்தச் சட்டப்படியும் குற்றமல்ல. இது உங்களுக்குத் தெரியுமா? நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். இந்த இறையாண்மையை நான் ஏற்க மறுக்கிறேன். ஏனென்றால், இந்திய இறை யாண்மையை ஏற்பது என்பது, தமிழக இறை யாண்மையை மறுப்பது. நான் தமிழக இறை யாண்மையை ஏற்கிறேன்; இதுவும் ஒரு கருத்து தான். குற்றமல்ல. நான் ஒரு கேள்வி கேட்கிறேன், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ராணுவ ஆட்சி நடத்துவதற்கு வழி இருக்கிறதா? ஏதாவது ஒரு விதி இருக்கிறதா? இல்லை. ஆனால், யாரோ ஒருவன் உரத்த சிந்தனையில் இந்த நாட்டில் ராணுவ ஆட்சி நடக்க வேண்டும் என்று எழுதினால், அது குற்றமா? இல்லை. அது ஒரு கருத்து. அவ்வளவுதான். அந்தக் கருத்தைச் சொல்லுகிற உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. அதனால் தேசியப் பாதுகாப்பு ஒரு போதும் குலைந்து விடாது. இப்போது சீமான் பேச்சில் - இவர்கள் குற்றம் கண்டுபிடித்த பகுதி என்ன? தமிழகத்தில் 5000 இளைஞர்களைத் திரட்ட முடியுமா என்று, பிரபாகரன், தம்மிடம் கேட்டார் என்றும் - இதோ, அதைவிடப் பல மடங்கு கூட்டம் இங்கே திரண்டிருக் கிறது என்று சீமான் பேசியதை குற்றம் என்கிறார்கள். இதைவிடப் பல மடங்கு அளவில் பேசியவர்கள் எல்லாம், இந்த நாட்டில், முன்னாள், இன்னாள் முதலமைச்சர்களாக இல்லையா?

இப்படிப் பேசிவிட்டு, சீமான் கூறுகிறார், "என் தலைவன் பிரபாகரன் பின்னால் அன்பான இளைஞர்களே, எழுச்சியுடனும் புரட்சியுடனும் எழுந்து நில்லுங்கள். இந்த மண்ணிலே புரட்சி நிகழ்ந்தாக வேண்டும். புரட்சி எப்போது வெல்லும்? அதை நாளை தமிழ் ஈழம் சொல்லும்" 'புரட்சி' என்ற சொல் இந்திய இறையாண்மைக்கு ஆபத்து என்றால், எப்படி, புரட்சித் தலைவர்களையும், புரட்சித் தலைவி களையும் நாடாள அனுமதித்தீர்கள்? (கைதட்டல்)

குற்றச்சாட்டில் மேலும் என்ன கூறுகிறார்கள்? சீமான் தன்னுடைய உணர்ச்சி மயமான பேச்சால் பொது மக்களிடையே வன்முறையைத் தூண்டினார் என்கிறார்கள். உணர்ச்சி மயமாகப் பேசுவது தவறா? குற்றச்சாட்டில் கூறியுள்ள இவைகூட தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வராது. இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என்பதற்காக இதற்கு மேல் ஒரு குற்றச்சாட்டை இணைக்கிறார்கள்.

அத்துடன் இறையாண்மைக்கும் பொது ஒழுங்குக்கும் எதிராக கேடு பயக்கும் வகையில் **செயல்படவும்** செய்தார்" என்று இந்த ஆணையில் சொல்லப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், சீமான் - கேடு பயக்கும் வகையில் **செயல்பட்டது** என்ன? இதைவிட கொடுமை என்ன தெரியுமா? இந்த சமூக விரோத காக்கிச்சட்டைக்காரன் எழுதுகிறான், சீமான், சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்று. நாட்டில் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் முதல் இடம், இந்தக் காக்கிச் சட்டைக்காரர்களுக்குத்தான். சீமான் செய்த சமூக விரோத நடவடிக்கை என்ன? எதையாவது ஒன்றை சொல், பார்ப்போம்? 'ஆக்டிங்', 'ஆக்டிங்' என்கிறீர்களே! அவர் என்ன செயல்பட்டார்? அவருக்குத் தெரிந்த 'ஆக்டிங்' திரைப்படத்தில் நடிப்பு மட்டும் தான். இந்த வழக்கு - நீதிமன்றத்தில் நேர்மையான நீதிபதி முன் நிற்குமா? ஒருவன் என்ன பேசுகிறான் என்பதை வைத்து யாரையும் தண்டிக்க முடியாது என்று 'பொடா' வழக்கில் மட்டுமல்ல, எத்தனையோ வழக்குகளில் உச்சநீதிமன்றம் கூறிவிட்டது. செயல்பட்டால்தான் தண்டிக்க முடியும். அல்லது அந்தப் பேச்சைக் கேட்டு மற்றவர்கள் செயல்பட்டால் தண்டிக்கலாம். சீமான் பேச்சைக் கேட்டு நாட்டில் பொது ஒழுங்கைக் குலைக்குமள வுக்கு யார் செயல்பட்டார்கள்; சொல் பார்க்கலாம்!


அப்படி - ஒரு பேச்சினால் படுகொலைகள் நடந்தது என்றால், இந்தியாவில், குஜராத் முதல்வர் மோடி, விசுவ இந்து பரிஷத் தலைவர் தொகாடியா பேச்சுகளால்தான் நடந்தது. கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்துக்குப் பிறகு நரேந்திர மோடியும், தொக்காடியாவும், முஸ்லீம்களைக் கொன்று குவியுங்கள் என்று பேசியதால், மூன்று நாட்களில் மூவாயிரம் முஸ்லீம்கள், குஜராத்தில் படுகொலை செய்யப்பட்டார்கள். அந்த நரேந்திர மோடி - ஒரு நாள் சிறை வைக்கப்பட்டானா? பொது ஒழுங்கைக் குலைத்ததற்காக தொக்காடியாவை சிறையில் வைக்கும் துணிச்சல், இந்த அரசுகளுக்கு இருந்தது உண்டா? சீமான், எந்தப் பொது ஒழுங்கையும் குலைக்கவில்லை. இந்த சட்டப் பிரிவு தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக் கிறது. அரசியல் உள்நோக்கத்தோடு, கூட்டணி நலனுக் காக இந்த சட்டப் பிரிவு தவறாகப் பயன்படுத்தப்பட் டிருக்கிறது என்று குற்றம்சாட்டுகிறோம். அதற்காக நாங்கள் அஞ்சவும் மாட்டோம். அரசிடம் சென்று கெஞ்சவும் மாட்டோம். இவற்றையெல்லாம் மிஞ்சி வெற்றி பெறுவோம்; இன்னும் ஒரே ஒரு செய்தி. சட்டப்புறம்பான நடவடிக்கைகள் சட்டம். சட்டப் புறம்பான நடவடிக்கைகள் என்று எதைக் கூறுகிறது? நாட்டின் ஒரு பகுதியைப் பிரித்து, அயல்நாட்டுடன் இணைப்பது. ஒரு பகுதியைப் பிரிந்து தனி நாடு அமைக்க போராடுவது. இந்த நடவடிக்கைகளுக்கு உதவி செய்வது. இவைதான் சட்டப்புறம்பான நட வடிக்கைகள் இந்தச் சட்டத்தின் கீழ் தான் விடுதலைப் புலிகள் இயக்கம், தடை செய்யப்பட்டுள்ளது. 'பயங்கர வாதம்' என்ற அடிப்படையில் அல்ல.

இப்போது மீண்டும் மீண்டும் ராஜீவ் கொலை பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்களே; அந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள். இது ஒரு பயங்கரவாத நடவடிக்கை அல்ல. தடா சட்டத்தின் கீழ் குற்றம்சாட்டப்பட்ட 26 பேரும் குற்றவாளிகளும் அல்ல என்று தெளிவாகத் தீர்ப்பளித்துவிட்டார்கள். இந்திய அமைதிப்படை ஈழத்தில் குற்றங்களை இழைத்தது உண்மை. இதற்கு அரசு அளித்த ஆதாரங்களே சான்று என்று உறுதிப்படுத்திய உச்சநீதிமன்றம் - அப்படி அமைதிப்படை இழைத்த குற்றங்களுக்கு பழி வாங்கும் நடவடிக்கையே ராஜீவ் கொலை என்று கூறியுள்ளது.

இங்கே எங்கே பயங்கரவாதம் வந்தது. தமிழ் ஈழத்தின் நிலப்பரப்பு என்ன என்பதை தெளிவாக விடுதலைப்புலிகள் வரையறுத்து வைத்திருக்கிறார்கள். அதற்கு மேல் ஒரு அங்குல மண்ணுக்குக்கூட அவர்கள் உரிமைகோருவது கிடையாது. ஆனால், இந்திய அரசியல் சட்டம் தனது நிலப்பகுதியை எவ்வாறு வரையறுத்துள்ளது? அரசு மாநிலங்கள் என்றும், ஒன்றிய ஆட்சி பரப்புகள் என்றும், அவ்வப்போது சம்பாதித்து சேர்த்துக் கொள்ளும் பகுதிகள் என்றும் எழுதி வைத்திருக்கிறது. நாட்டு எல்லையை விரிவாக்கு வதே சட்டத்தில் எழுதி வைத்துள்ள ஒரு அரசு, தன் மண்ணின் விடுதலைக்காகப் போராடுகிறவனைப் பார்த்து, தமிழ்நாட்டைப் பிரித்து இணைக்கப் பார்க்கிறான் என்று புளுகுவதும் இந்தப் புளுகை, இங்கே இருக்கிற மாநில அரசு திருப்பிச் சொல்வதும், இதற்காக நீங்கள் ஒருவரை கைது செய்து சிறை யிலடைப்பதும் நியாயத்திற்கோ, அவர்கள் நடத்தும் போராட்டத்தின் உண்மைத் தன்மைக்கோ புறம் பானது. நாம் ஒன்றைத் தெளிவாகக் கூறுவோம்.

தமிழ் ஈழ மக்களைப் பாதுகாக்க வேண்டு மென்றால், முல்லைத் தீவிலே முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் மக்களை, உயிரோடு பாதுகாக்க வேண்டும் என்றால், சிங்கள அரசு, இந்திய அரசோடு சேர்ந்து நிறைவேற்றி வரும், சதித் திட்டத்தை முறியடிக்க வேண்டும் என்றால், எந்த அரசையும் நம்பி, அதைச் செய்து முடிக்க முடியாது. நாளொரு பேச்சு பேசும் அரசியல்வாதிகளை நம்பி செய்து முடிக்க முடியாது. அதை செய்து முடிப்பதற்கு ஒரே ஒரு வழி, தமிழக மக்கள் கிளர்ந்து எழுந்து போராட வேண்டி யது மட்டும் தான். அப்படி, தமிழக மக்களைக் கிளர்ந்தெழுந்து போராடுவதற்கான உரிமையை எங்களுக்குக் கொடு; நாங்கள் தமிழ் ஈழ மக்களைக் காபாற்றுகிறோம். ஆனால், அந்த உரிமையை, பேச்சுரிமையை, கருத்துரிமையை மறுத்து, எங்கள் தலைவர்களை சிறைப்படுத்துவாய் என்றால், இந்தப் போராட்டம் தமிழ் ஈழ மக்களை மீட்பதற்கான போராட்டமாக அல்லாமல், தமிழக மக்களை உங்கள் பிடியிலிருந்து மீட்கும் போராட்டமாக மாறும்.

**உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் பால். கனகராஜ் உரையில் குறிப்பிட்டதாவது:**



அடிப்படை உரிமைகளே மறுக்கப்பட்ட வழக்கறிஞர் சமூகத்தின் தலைவராக நின்று உங்கள் முன் பேசு கிறேன். காவல்துறை யினரின் தாக்குதலினால் 500க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் நேரடி யாக பாதிக்கப்பட் டுள்ளனர். 81 பேர் படு காயமடைந்துள்ளனர். 16 பேர் இன்னும் மருத்துவமனையிலிருந்து வெளிவர வில்லை. 150 பேர் உடலில் பலத்த அடிபட்டு வெளியே கூற கூச்சப்பட்டு மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். 300 வழக்கறிஞர்கள் ஓட ஓட விரட்டப்பட்டு, மானபங்கப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வளவுக்குப் பிறகு வழக்கறிஞர்கள் புகார் தந்தால், வழக்குப் பதிவு செய்ய காவல்துறை மறுக்கிறது. காவல்துறையின் இந்த நடவடிக்கை ஏதோ அதிகார முறைகேடு; அத்து மீறல்கள் என்ற எல்லைக்குள் குறுக்கிட முடியாது; அப்படி இருந்தால், நாமும் அதை மன்னித்து விட்டு விடலாம். ஆனால், நடந்து முடிந்திருப்பது குற்றம்.

வழக்கறிஞர்கள், பெண் வழக்கறிஞர்கள் அலு வலகம் உடைக்கப்பட்டு, நீதிபதிகளே தாக்கப்பட்டு, பல நூறு கார்கள் உடைக்கப்பட்டு, பொது சொத்து களுக்கு நாசம் விளைவிக்கப்பட்டுள்ளது. பொது சொத்துக்களை சேதப் படுத்துவோரை கண்டவுடன் சுடும் ஆணை காவல்துறைக்கு பிறப்பிக்கப்பட் டுள்ளது. இதை காவல்துறையினர் ஒலி பெருக்கியில் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்தது. இவர்கள் மீது புகார் தந்தாலே புகாரை ஏற்க மறுக்கிறார்கள். கடந்த மாதம் 19 ஆம் தேதி நடந்த சம்பவத்துக்கு குற்றம் இழைத்தவர் மீது இதுவரை நடவடிக்கை இல்லை. எனவே தமிழகத்தில அடிப்படை உரிமைகளே மறுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கருத்துரிமைப் பறிப்பு என்று கூறுவதுகூட மிக மிக சாதாரணமாகவே எனக்கு தோன்றுகிறது.

இப்போது இயக்குனர் சீமான், கொளத்தூர் மணி ஆகியோரை கூட்டத்தில் கருத்துகளைத் தெரிவித்த தற்காக கைது செய்திருக்கிறார்கள். அவர்கள் மீது தொடரப்பட்டுள்ள சட்டப் பிரிவுகள் 13(1), 13(2) மற்றும் சட்டப்பிரிவுகளின் கீழ் அவர்களை கைது செய்திருப்பதே தவறு என்று வழக்கறிஞர் என்ற

(4 ஆம் பக்கம்)

## முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி எச்.சுரேஷ் வற்புறுத்தல்

# தடுப்புக் காவல் சட்டங்களை திரும்பப் பெறுக!

பம்பாய் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுரேஷ் - மனித உரிமைப் போராட்டங்களில் முன்னணியில் நிற்பவர். தலித், சுற்றுச்சூழல் தொடர்பான பல்வேறு பொது விசாரணைகளில் நடுவராகப் பங்கேற்றவர். காவிரி நீர் உரிமைக் காக - தமிழர்கள், கன்னடர் களால் மோசமாகத் தாக்கப்பட் டனர். அப் போது உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் ஆலோசனைப்படி நீதிபதி சுரேஷ் தலைமையில் ஒரு குழு விசாரணை நடத்தி, தமிழர்கள் மீது நடத்தப் பட்ட தாக்குதல்களை உலகத்தின் முன் வெளிக் கொண்டு வந்தது. தூக்குத் தண்டனைக்கு எதிரான கருத்துள்ள நீதிபதி சுரேஷ் - தனது பதவி காலங்களில் ஒருமுறை கூட தூக்குத் தண்டனை விதித்தது கிடையாது. ‘தமிழர் ஒருங்கிணைப்பு’ சார்பில் சென்னை தியாகராயர் நகரில் நடந்த கருத்துரிமை முழக்கம் கூட்டத்தில் பங்கேற்று தடுப்புக் காவல் சட்டங்கள் முறை கேடாகப் பயன்படுத்துவது பற்றியும், தேசிய சுய நிர்ணய உரிமை கோருவோரை பயங்கரவாதிகளாக சித்தரிப்பது பற்றியும் விரிவாக விளக்கினார். அவரது ஆங்கில உரையை தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் தியாகு தமிழில் மொழி பெயர்த்தார். நீதிபதி எச்.சுரேஷ் ஆற்றிய உரையின் சுருக்கம்:



பெ. மணியரசன், திருக்குறள் ஆங்கில நூலை நீதிபதி எச். சுரேசுக்கு வழங்கினார்

நாடு முழுவதும் மக்கள் மீது அரசுகள் அடக்கு முறைகளையும், அதிகாரங்களையும் கட்டவிழ்த்து விட்டு வருவதைப் பார்க்கிறோம். பயங்கரவாதம் தலைதூக்கி வருகிறது என்ற பெயரில் இந்த அடக்கு முறைகள் நடைபெறுகின்றன. நாட்டில் மக்களின் அடிப்படையான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானால், அவர்களுக்கான நீதி மறுக்கப்படக் கூடாது. அவர்களுக்கான உரிமைகள் வழங்கப் பட்டாக வேண்டும். உண்மையான அர்த்தமுள்ள சுதந்திரத்தை அவர்களுக்கு வழங்க வேண்டும். இவற்றை வழங்கிடாமல் அடக்குமுறைகளையும், அதிகாரத்தையும் திணிப்பது பிரச்சினைகளைத் தீர்க்க உதவாது.

சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவத்தை நமது அரசமைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது. மக்களின் குரலை அங்கீகரிக்க அரசு தான் உண்மையான குடிஅரசு. நமது அரசியல் சட்டத்தில் நாம் உறுதி செய்திருக்கிறோம். ஆனாலும், மக்களின் உரிமைகள் - அது பற்றிய அவர்களின் உணர்வுகள், விருப்பங்களை நாம் மதிக்கிறோமா என்பதுதான், இப்போது எழுந்துள்ள கேள்வி. அரசமைப்புச் சட்டங்கள் வந்ததற்குப் பிறகு, பிற்காலத்தில் அய்.நா. வின் அரசியல் மற்றும் குடியுரிமை உடன்பாடுகளும் வந்தன. தேசிய சுயநிர்ணய உரிமைக்கு அய்க்கிய நாடுகளின் அவை ஏற்பு வழங்கியுள்ளது. உலகின் பல்வேறு நாடுகள் இந்த உரிமைக்கு ஏற்பு வழங்கி யுள்ளன. அய்.நா.வின் பல்வேறு மனித உரிமை உடன்பாடுகளை நாம் ஏற்றுக் கொண்டாலும், ஒரே ஒரு உடன்பாட்டை மட்டும் ஏற்க, இந்தியா மறுத் துள்ளது. அதுதான் தேசிய சுயநிர்ணய உரிமைக்கு ஏற்பு வழங்கும் உடன்பாடு. தேசிய சுய நிர்ணய உரிமையை இந்தியா ஏற்காத காரணத்தால்தான் தங்களை தாங்களே ஆட்சி செய்து கொள்ள விரும்பும் காஷ்மீர் மக்களின் உரிமையை நாம் மறுக்கிறோம். மணிப்பூர் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஏற்க மறுக்கிறோம். இதே போல - பல ஆண்டுகளுக்கு முன் பஞ்சாபில் நடந்த தேசிய சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தையும் மறுத்தோம்.

நான் அண்மையில் மணிப்பூர் மாநிலம் சென்றிருந்தேன். இப்போது மணிப்பூர் மக்களிடம் ஒரு வாக்கெடுப்பு நடத்தினால், அவர்கள் - இந்தியா வுடன் சேர்ந்து இருக்க மாட்டோம் என்றே வாக்களிப்பார்கள்.

மணிப்பூர் மக்கள் வீரம் செறிந்தவர்கள். மணிப்பூர் பெண்கள் பர்மாவை எதிர்த்து போரிட்டவர்கள் - மணிப்பூரில் நிலப்பிரபுத்துவ மன்னராட்சிதான் நடந்தது. பிரிட்டானியர் காலனி ஆட்சிக்குப் பிறகு, மணிப்பூர் மக்களுக்கு அவர்கள் சுதந்திரம் வழங்கினர். ஆனால், இந்தியா, எப்படியோ மணிப்பூரை, 1949 அக்டோபர் 15-ம் தேதி முதல் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இந்தியாவுடன் இணை வதால், ஜனநாயக ஆட்சி தங்களுக்கு கிடைக்கும் என்று அந்த மக்கள் நம்பினார்கள். ஆனால் என்ன நடந்தது? 1952 ஆம் ஆண்டு ராணுவ சிறப்பு அதிகாரச் சட்டம் கொண்டு வரப்பட்டு, ஆயுதப் படைகள் அனுப்பப்பட்டு, 57 ஆண்டுகளாக இந்திய ராணுவ ஆட்சி அங்கே நடந்து கொண்டிருக்கிறது.

நான் மணிப்பூர் தலைநகரம் இம்பாலுக்கு சென்றிருந்தேன். அங்கே திரையரங்குகளில் கடைசி திரைப்படக் காட்சி மாலை 4.30 மணிக்கு, 6.30 மணிக்குப் பிறகு மக்கள் வீட்டை விட்டு வெளியே போக முடியாது. வெளியே பார்த்தால், ராணுவத்தினர் சுட்டு விடுவார்கள்.

ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். இம்பாலில் முதன்மை பெருநகர நீதிபதியின் வீட்டிற்குள் ராணுவம் நுழைந்து, அவரை கடத்திப் போய், ரகசிய இடத்தில் வைத்து மூன்று நாள் சித்திரவதை செய்தது. அவரது உடலில் மின்சாரத்தை செலுத்தினார்கள். அந்த நீதிபதி, தனது வீட்டில் மணிப்பூர் பழங்குடி ஒருவருக்கு அடைக்கலம் கொடுத் திருப்பதாக குற்றம் சாட்டினார்கள். 3 நாள் சித்திரவதைக்குப் பிறகு, அவரை அப்படியே விட்டுவிட்டு ராணுவம் வெளியேறியது. பாதிக்கப்பட்ட நீதிபதி, கிழிந்த உடையுடன், உயர்நீதிமன்றம் போய் நடந்ததைக் கூறியபோது, நீதிபதிகள் அதிர்ச்சியடைந்தனர். இது பற்றி மாவட்ட நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை உயர்நீதிமன்றம் அமைத்தது. விசாரணையில் குற்றமிழைத்த ராணுவத்தினர் அடையாளம் காணப்பட்ட பிறகும் கூட - எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த சட்டத்தை எதிர்த்து, உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டது. ஆனால், சட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஒழுங்கு நெறி முறைகளை நீதிமன்றம் அறிவித்தது. அந்த நெறி முறைகளை ராணுவம் பின்பற்றுவதே இல்லை. இந்த சட்டத்தை திரும்பப் பெறக் கோரி ஷர்மிளா என்ற பெண் கடந்த 9 ஆண்டுகளாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகிறார். ராணுவம் அந்தப் பெண்ணை தூக்கிப் போய் மருத்துவமனையில் குழாய் வழியாக உணவை கட்டாயப்படுத்தி செலுத்தும். மீண்டும், அவர் போராட்டத்தைத் தொடங்குவார். அண்மையில் ராணுவம் அவரை கைது செய்துள்ளது.

அண்மையில் காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த பெண்கள் பம்பாய் வந்திருந்தனர். அவர்களில் இந்து, முஸ்லீம், வழக் கறிஞர், பேராசிரியர் என்று பல்வேறு பிரிவினரும் இருந்தனர். பம்பாய் வந்த அவர்கள், தங்கள் வாழ்வில் முதல் முறையாக சுதந்திர காற்றை சுவாசிப் பதாகக் கூறினர். அத்தகைய ஒடுக்கு முறையை இந்திய ராணுவம் அங்கே நடத்தி வருகிறது.

தங்களுக்கான சுயநிர்ணய உரிமை கோரி போராடும் மக்கள் மீதுதான் அரசு மோசமான ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டு வருகிறது. மக்களின் நேர்மையான அந்தப் போராட்டங்களைக் கையாளுவதில் தவறான அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. தடுப்புக் காவல் சட்டங்கள் அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றன. அரசமைப்பின் 22வது பிரிவின்கீழ் உள்ள 2 முதல் 7 பகுதிகள் வரை, விசாரணை இன்றி தடுப்புக் காவலில் வைக்கும் சட்டங்களைக் கொண்டு வருவதற்கு வழி வகுக்கிறது. இப்படிப்பட்ட ஒரு பிரிவு இடைக்கால ஏற்பாடாகவே இருக்கும் என்று சொல்லப்பட்டது. ஆனால், ஆட்சிக்கு வரும் அனைத்துக் கட்சிகளுமே மாறி மாறி, இந்தத் தடுப்புச் சட்டங்களைப் பயன்படுத்தியே வருகின்றன.

எனவே - அரசியலமைப்பில் தடுப்புக் காவல் சட்டங்களைக் கொண்டுவர வழி வகுக்கும் 22வது பிரிவு நீக்கப்பட வேண்டும் என்று முன்னாள் நீதிபதி சுரேஷ் வலியுறுத்தினார். தொடர்ந்து பேசுகையில் சென்னையில் வழக்கறிஞர்கள் மீது காவல்துறை நடத்திய தாக்குதல், நீதித்துறையின் மீது நடத்தப் பட்ட தாக்குதல் என்று கூறிய அவர், இரு தரப் பினரையும் அழைத்துப் பேசி, தற்போது எடுத்துள்ள முட்டுக்கட்டையை நீக்க வேண்டும் என்றார். தென்னாப்பிரிக்காவில் கறுப்பர், வெள்ளையர்கள் இனவெறியோடு தாங்கள் செயல்பட்டதை ஒப்புதல் வாக்கு மூலமாக தெரிவிக்க ட்ரூத் ஆணையம் ஏற்படுத்தப்பட்டதை அவர் நினைவு கூர்ந்தார். வழக்கறிஞர்கள் நடத்தும் வேலை நிறுத்தம் வேண்டுமென்றே நடத்தப்படுவதாக கூறுவதை மறுத்த அவர், நீதிமன்றம் தான் அவர்கள் வாழ்க்கை, பிழைப்பு என்ற நிலையில் வேண்டுமென்றே எப்படி புறக்கணிப்பார்கள் என்று கேட்டார். ●

## தேர்தல் ஆணையத்திடம் கழகம் மனு

தமிழகத் தேர்தல் ஆணையத்துக்கு கழக சார்பில் அளிக்கப்பட்ட கோரிக்கை மனு:

ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்யும்சிங்கள அரசுக்கு ஆயுதங்களை வழங்கி, தமிழர்களுக்கு துரோகமிழைக்கும் காங்கிரசுக்கு எதிராக, பிரச்சாரம் செய்ய எங்கள் அமைப்பான பெரியார் திராவிடர் கழகம் முடிவு செய்து, கடந்த 26.2.2009 அன்று திண்டுக்கல்லில் பிரச்சாரத்தைத் தொடங்கியது. கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி காங்கிரசை எதிர்த்து, மக்களிடம் பேசியதற்காக தமிழக அரசு திண்டுக்கல் காவல்துறை - இந்திய தண்டனைச் சட்டம் 153(ஏ), 505(i)(பி) மற்றும் 13 (1) (பி) சட்டவிரோத தடுப்புச் சட்டம் 1967 ஆகிய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து கொளத்தூர் மணியை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. இதன் மூலும் - காங்கிரஸ் எதிர்ப்பு பிரச்சாரம் தடுக்கப்பட்டுள்ளது.

வழக்கை முறையாக சந்திக்க தயாராகவே உள்ளோம். ஆனால், தேர்தல் வாக்கெடுப்பு முடியும் வரை பிரச்சாரத்திற்கு வராமல் தடுக்கும் நோக்கத்தோடு விசாரணையின்றியே ஓராண்டு காலம் சிறையில் அடைக்கும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை கொளத்தூர் மணி மீது பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதாக அறிகிறோம். இது தேர்தலில் பிரச்சாரம் செய்யக்கூடிய எங்களது ஜனநாயக உரிமையைப் பறிக்கும் நடவடிக்கையாகும். காங்கிரசுக்கு எதிரான பிரச்சாரத்தை முடக்கிட - தேசிய பாதுகாப்புச் சட்டத்தை முறைகேடாக தமிழக அரசு பயன்படுத்துவதை தடுத்து நிறுத்த முன்வருமாறு தேர்தல் ஆணையத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். எங்கள் அமைப்பு தேர்தலில் போட்டியிடாத அமைப்பு என்றாலும், தேர்தல் பிரச்சாரம் செய்வதற்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள ஜனநாயக உரிமையை தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி பழி வாங்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம். - இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர்இளங்கோ, சென்னை மாவட்ட தலைவர் தபசி. குமரன் ஆகியோர் தேர்தல் ஆணைய அதிகாரியிடம் மார்ச் 5 ஆம் தேதி நேரில் மனுவை அளித்தனர்.

REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

‘டெசோ’ கூட்டங்களில் கலைஞர் பேசியது என்ன? (3)

# தமிழ் ஈழத்தை ஏற்காதவன் சோற்றால் அடித்த பிண்டம்

நாம் கீழே வெளியிட்டிருப்பது கலைஞரின் உரை. தமிழின உணர்வோடு இந்திய ஒருமைப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கும் போர் முழக்கம். 1985 ஆம் ஆண்டு எதிர்கட்சியில் இருந்த கலைஞர் காங்கிரஸ் ஆட்சியை நோக்கி வைத்த கேள்விகள். தி.மு.க. தலைமைக் கழகமே, “தமிழனுக்கு ஒரு நாடு; தமிழ் ஈழ நாடு” என்ற தலைப்பில் இந்த உரையை நூலாக வெளியிட்டுள்ளது. ஒருமைப்பாட்டுக்கு எதிராக, கலைஞர் பேசியதில் கால்பங்கு கூட பேசாத சீமானை, கொளத்தூர் மணியை அதே கலைஞர் சிறைப்படுத்தியிருக்கிறார். அப்போது ஆட்சியில் இருந்த எம்.ஜி.ஆர். – கலைஞர் மீது இந்த உரைகளுக்காக எந்த வழக்கையும் போடவில்லை.

என்னிடத்திலே ஒரு துண்டு அறிக்கை தரப்பட்டது. தூத்துக்குடி தெர்மல் நகர் விடுதலைப் புலிகள் தோழமைக் கழகத்தின் சார்பிலே வெளியிடப்பட்ட அறிக்கை. அதில் சில விவரங்கள்:

இலங்கையில் தமிழன் எத்தனை ஆண்டுக்காலம் பூர்வீகமாக வாழ்ந்தான் - ஆண்டான் என்பதும், அதற்குப் பிறகு கி.மு.543-ல் வட இந்தியாவிலிருந்து விஜயன் தலைமையிலே சிங்களவன் வந்து - குடியேறினான் என்பதும், கொஞ்சம் கொஞ்சமாக தமிழனுடைய ஆட்சி வீழ்த்தப்பட்டது என்பதும், ஆண்டுக் கணக்கு விவரத்தோடு அதிலே வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படி வெளியிடப்பட்ட அதில், அங்கே சிங்கள ஆட்சி, உதயமான பிறகு - தமிழனுடைய ஆட்சி தோற்கடிக்கப்பட்ட பிறகு - இலங்கையில் தமிழர்களுக்கு இன்னல்கள் விளைவிக்கப்பட்ட போதெல்லாம், தமிழகத்திலே உள்ள மன்னர்கள் படையெடுத்துச் சென்று தமிழர்களைக் காப்பாற்றினார்கள் என்ற விவரங்கள் அதில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

கி.பி. 100 முதல் 200 வரையுள்ள காலகட்டத்திலே இலங்கையிலே தமிழர்கள் பாதிக்கப்பட்ட போது கரிகாலன் என்கின்ற தமிழ் மன்னன் படையெடுத்துச் சென்று தமிழர்களைக் காப்பாற்றினான். கி.பி.590-600 இந்தக் காலகட்டத்தில் சிம்ம விஷ்ணு என்ற தமிழ் நாட்டை ஆண்ட மன்னன் இலங்கைக்குச் சென்று அங்கு பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு பாதுகாப்பு அளித்திருக்கின்றான். கி.பி.645-ல் நரசிம்மவர்மன் என்ற மன்னன் தமிழகத்திலே இருந்து படையை அனுப்பி அங்கே பாதிக்கப்பட்ட தமிழர்களைக் காப்பாற்றி இருக்கிறான்.

கி.பி. 835-ல் பாண்டியன் சிரீமாற சீவல்லபன் என்ற மன்னன் படையை அனுப்பி அங்கே பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளித்திருக்கின்றான்.

கி.பி. 907-947 இந்தக் காலகட்டத்தில் பாரந்தகச் சோழன் தன்னுடைய படையை அனுப்பி இலங்கையிலே பாதிக்கப்பட்ட தமிழினத்தைக் காப்பாற்றியிருக்கின்றான்.

கி.பி.960-ல் சுந்தரச் சோழன் படையை அனுப்பி இலங்கையிலே சிங்களவர்களால் பாதிக்கப்பட்ட தமிழினத்தைக் காப்பாற்றி மீட்டுக் கொடுத்திருக்கின்றான்.

கி.பி.993-ல் இராசராச சோழன் படையை அனுப்பி இலங்கையிலே பாதிக்கப்பட்ட தமிழனைக் காப்பாற்றியிருக்கிறான்.

மீண்டும் கி.பி.1017-ல் இராசேந்திர சோழன் படையை அனுப்பி இலங்கையிலே பாதிக்கப்பட்ட தமிழர்களைக் காப்பாற்றியிருக்கிறான்.

கி.பி. 1055-ல் இரண்டாம் இராசேந்திர சோழன் படையை அனுப்பி விஜயபாகுவின் கொட்டத்தை அடக்கி இலங்கையிலே உள்ள தமிழர்களைப் பாதுகாத் திருக்கிறான். இப்படி வரிசையாகப் பார்த்தால், இலங்கைத் தமிழனுக்கு ஆபத்து வந்தபோதெல்லாம் தமிழ்நாட்டுப் படைதான் இலங்கைக்குச் சென்று தமிழர்களைக் காப்பாற்றியிருக்கிறது. **இப்போது நாம் பைத்தியக்காரத்தனமாக வடநாட்டுப் படையை எதிர்பார்த்தால் வருமா?**

எனவேதான் வரலாற்றினுடைய குறிப்பின்படி - சரித்திரத்தினுடைய தொடர்பின் படி பார்த்தால்கூட, இலங்கையிலே இன்றைக்குப் பாதிக்கப்படுகின்ற தமிழனைக் காப்பாற்றுகின்ற பெரும் பொறுப்பு இங்கே உள்ள ஐந்துகோடித் தமிழர்களுக்குத் தான் இருக்கும். ஐந்து கோடித் தமிழர்களில் சில பேருக்கு இல்லை. நான் ஒத்துக் கொள்கிறேன்.

**தமிழீழத்தை ஒத்துக் கொள்ளாத – இலங்கையிலே தனித்தமிழ்நாட்டை ஒத்துக் கொள்ளாத சில சோற்றாலடித்த பிண்டங்களும் தமிழ் நாட்டிலே இருக்கிறார்கள்.**

## எங்க மக்கள் சாக....

**– தமிழேந்தி –**

முட்டை யோட முடியலடா சாமி – உனக்கு
முழுமரி யாதை தரணும் சாமி
கெட்டுப் போன புத்தியடா சாமி – தமிழனைக்
கிள்ளுக் கீரையா நெனைச்ச சாமி

கொத்துக் கொத்தா எங்கமக்கள் சாக – நீ
கொண்டாட்டம் போடுறடா சாமி
ஒத்த பார்ப்பான் உனக்கித்தனை கொழுப்பா – உன்
ஒடம்புமொத்தம் சாக்கடை,இது பொழப்பா?

சோ பாரப்பான் அண்ட புளுகை விற்கிறான் – இந்து
ராம்பார்ப்பான் கொடுநஞ்சைக் கக்கறான்
கேட்பாரே இல்லாமலா போயிட்டோம் – செருப்பு
கிழியணுமா இதுக்காண்ணு பார்க்கிறோம்

அம்முஜெயா ஆட்சியிலே சாமி – வாங்கின
அடியெல்லாம் மறந்தயடா சாமி
சும்மாஒரு துக்கடாநீ சாமி – பார்ப்பான்
தூக்கி உன்னை வைக்கிறாண்டா சாமி

புகவந்தாய் அப்பஒரு நாளு – நல்லா
பூசையெல்லாம் வாங்கினடா சாமி
மகளிரணி விளக்கு மாத்தில் கொடுத்தும் – இன்னும்
மானங்கெட்டு வாழறடா சாமி!

அழுக்குப் பார்ப்பான் தில்லையிலே இருந்து – போட்ட
ஆட்டமென்ன கொஞ்சமோடா சாமி
கொழுப்பெடுத்த தீட்சத னுக்காக – நீ
கூண்டி லேற வரணுமாடா சாமி

காலமெல்லாம் சூத்திரனை ஏய்ச்சா – நாங்க
கண்ணைமூடிக் கெடக்கணுமா சாமி?
நாலெழுத்தைச் சேரி மக்கள் படிச்சா – இந்த
நாடழிஞ்சு போகுமாடா சாமி?

செத்துப் போகவில்லையடா அய்யா – எங்கள்
சிந்தை அணு ஒவ்வொன்றிலும் அய்யா
புத்தியினை இனி யேனும் மாத்திக்கோ – இல்லே
பூணூலு கும்பலைக் காப் பாத்திக்கோ.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் நான் கூறுகிறேன். மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் கூறப்படும் குற்றங்களுக்கு ஆதரவு காட்டி செயல்பட்டால்தான் அந்த சட்டப்படியே அவர்களை கைது செய்ய முடியும். பேசுவதை மட்டும் வைத்து கைது செய்யக் கூடாது என்று உச்சநீதிமன்றம் தெளிவாக கூறியிருக்கிறது.

இதே சட்டப் பிரிவுகளின் கீழ் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் கைது செய்யப்பட்டு, 15 நாள் காவலில் வைக்கப்பட்டார். 15 நாள் கழித்து, மீண்டும் காவல் நீட்டிப்புக்கு நீதிமன்றம் கொண்டு வரப்பட்டபோது உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி காவலை நீட்டிக்க முகாந்திரம் இல்லை என்ற காரணத்தினால், காவல்துறையே நீட்டிப்பைக் கோரவில்லை. எனவே பிணை மனு தாக்கல் செய்யப்படாத நிலையிலேயே அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். மீண்டும் அதே போல் அதே சட்டப் பிரிவுகளைப் பயன்படுத்தி, இப்போது கொளத்தூர் மணியை கைது செய்துள்ளனர்.

காவல்துறை தவறு என்று தெரிந்து செய்தாலும்கூட காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. காரணம் நல்ல எண்ணத் தின் அடிப்படையில் அவர்கள் செய்ததாகவே சட்டம் கூறுகிறது. ஒரு குற்றமும் செய்யாத ஒருவரை - விசாரணைக்கு அழைத்து, பல மணி நேரம் காத்திருக்க வைத்து, பிறகு அவர்களால் வெளியே அனுப்ப முடியும். அப்பாவி ஒருவரை இப்படி நடத்தலாமா என்று கேட்க முடியாது. காரணம், நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேயே காவல்துறை அதிகாரி விசாரணை நடத்தினார் என்ற பாதுகாப்பு அவர்களுக்கு இருக்கிறது. இப்போது, கொளத்தூர் மணி, சீமான் ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்குகள் தவறானவை என்று தெரிந்திருந்தும்கூட - அவர்கள் வழக்கு போட்டு கைது செய்கிறார்கள். நாம் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமானால் நீதிமன்றம் தான் போக வேண்டும்.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் போட்டுவிட்டால் 6 மாதம் வரை - உள்ளே வைத்து விடலாம். முதலில் ரிட் மனு தாக்கல் செய்து நோட்டீஸ் கொடுத்து விசாரணைக்கு வரவே எட்டு வாரங்கள் ஆக வேண்டும். பதில் மனு தாக்கல் செய்ய அரசு தரப்பில் அவகாசம் கேட்டு நான்கு வாரம் எடுத்துக் கொள்வார்கள். வழக்கு நீதிமன்றத்தில் முன்னுரிமை வரிசை அடிப்படையில்தான் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதால், அதற்கு காலதாமதம் ஆகும். ஆக, 6 மாதம் வரை காவலில் - எந்தத் தவறும் இல்லாமலே ஒருவரை வைத்துவிட முடியும். நீதிமன்றம் கைது செய்தது தவறு என்று கூறினாலும், 6 மாதம் வரை சிறையில்தான் இருக்க வேண்டும். எனவே கைது செய்யப்பட்டதன் நோக்கம் நிறைவேறிவிடும். குற்றம் செய்யாமல் சிறையில் இருந்தவர்கள். அதற்காக இழப்பீடு கேட்கவும் முடியாது. இத்தகைய நீதிமன்ற நடவடிக்கைகள் எதுவும் இல்லாமலே, இப்போதே, அரசு இவர்களை விடுதலை செய்யவும் வாய்ப்பு உண்டு. காடுவெட்டிகுருவின் கதை உங்களுக்கு தெரியும். அவர் தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டு, பல வாரங்கள் சிறையில் இருந்தார். உயர்நீதிமன்றத்தில் அவர் தொடர்ந்த வழக்கில் தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்தது சரிதான் என்று, உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பிறகு, அரசு அவரை விடுதலை செய்தது உங்களுக்கு தெரியும்.

இப்போது - சீமான், கொளத்தூர் மணி ஆகியோர் மீது தொடர்ந்துள்ள வழக்குகள், நீதிமன்றத்தில் நிற்கப் போவதில்லை என்பது அரசுக்கு தெரியும். நீதிமன்றத்தில் நாம் எந்த அடிப்படையில் வாதாடப் போகிறோம் என்பதும் - இக்கூட்டத்தின் வழியாகப் பேசியிருக்கிறோம். எனவே நெடுநாள் கழித்து விடுதலை செய்வதைவிட, தமிழக அரசு இப்போதே அவர்களை விடுதலை செய்தால், அது தமிழினத்துக்கு பெருமை சேர்க்கும். தமிழக முதல்வர் இப்படி ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கூட்டத்தின் நோக்கமும் நிறைவேறும்.

அரசியல் சட்டத்தின் 19வது பிரிவு கருத்துரிமையை, பேச்சுரிமையை அடிப்படை உரிமையாக்கியுள்ளது. மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதுதான் குற்றமே தவிர (294-பி) நல்ல வார்த்தைகளால் கருத்துகளை வெளியிடுவது அடிப்படை உரிமை. நல்ல வார்த்தைகளில் கூறப்படுகிற கருத்துகளை மதிக்க வேண்டும். அதுவே சுதந்திரமான பேச்சுரிமையை மதிப்பதாகும். ✦


“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 2451 2857

*அடுத்த இதழில்*
**பெரியார் நூல்கள் நாட்டுடைமை: ‘விடுதலை’க்கு பதிலடி**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 13th March 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 மார்ச் 19, 2009 புரட்சி 8 முழக்கம் 10 விலை : ரூ.2.50


## கூட்டணி பாதுகாப்புக்கு தேசிய பாதுகாப்பு சட்டமா?

# கொளத்தூர் மணி - சீமான் - நாஞ்சில் சம்பத்தை விடுதலை செய்!



சென்னை



கோவை

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான், ம.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத் ஆகியோரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், அவர்களை விடுதலை செய்யக் கோரியும் 16.3.2009 அன்று பல்வேறு நகரங்களில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப் பாட்டங்கள் எழுச்சியுடன் நடந்தன.

கடந்த பிப். 26 ஆம் தேதி திண்டுக் கல்லில் நடந்த கூட்டத்தில் தடைச் செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதர வாகவும், இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் பேசியதாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இந்திய தண்டனைச் சட்டத்தின் பிணையில் வெளிவர முடியாத பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு, மார்ச் 2 ஆம் தேதி கைது செய்யப்பட்டு, மதுரை சிறையில் அடைக்கப்பட்டார். திண்டுக்கல் நீதிமன்றத்தில் அவர் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மாவட்ட நீதிமன்றத் தில் பிணை மனுதாக்கலாகும் நிலையில் தமிழக அரசு கடந்த 10 ஆம் தேதி தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஏவியுள்ளது. ஓராண்டுக்கு வெளியில் வர முடியாத இந்த ஆள் தூக்கிச் சட்டத்தை, அதற்குப் பிறகு ம.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத் மீதும் பாய்ந்துள்ளது.

கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான், நாஞ்சில் சம்பத் ஆகியோர் மீது காங்கிரஸ் எதிர்ப்பு பிரச்சாரத்தை முடக்கும் நோக்கத்தோடு தி.மு.க. ஆட்சி மேற்கொண்டுள்ள இந்த அடக்குமுறையைக் கண்டித்து, பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. சென்னை, கோவை, மதுரை, திண்டுக் கல், ஈரோடு, திருப்பூர், மயிலாடுதுறை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் எழுச்சியுடன் நடந்தன.

சென்னையில், மெமோரியல் அரங்கம் அருகே மாலை 4 மணியளவில் கழக வழக்கறிஞர் செ. துரைசாமி தலைமையில் நடந்த கண்டன ஆர்ப் பாட்டத்தில் தோழமை அமைப் பினரும் பங்கேற்றனர். கண்டன முழக் கங்கள் எழுப்பப்பட்டன. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வாலாஜா வல்லவன் (மா.பெ.பொ.க.), கவிஞர் தமிழேந்தி, வேலுமணி (மக்கள் எழுச்சி இயக்கம்), ஆறுமுகம் (த.தே.பொ.க.), தியாகு (த.தே.வி.இ.) ஆகியோரைத் தொடர்ந்து வழக்கறிஞர் செ. துரைசாமி நிறைவுரையாற்றினார். 5.30 மணி வரை ஆர்ப்பாட்டம் நடந்தது. பொது மக்களுக்கு கைதை கண்டிக்கும் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. கழக வழக்கறிஞர்கள் இளங்கோ, சு. குமாரதேவன், மாவட்ட கழகத் தலைவர் தபசி குமரன், செயலாளர் உமாபதி, கேசவன், அன்பு தனசேகரன், பொன்னேரி வெள்ளச்சாமி, பன்னீர் செல்வம், டேவிட் பெரியார், அயன்புரம் மணிவண்ணன், தினகரன், திருமதி ஜாக்குலின், திருமதி பரத், பெண்கள் செயற்களம் அமைப்பைச் சார்ந்த தமிழிசை, நாத்திகம் கேசவன் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

### கோவை

16.3.09 திங்கள் காலை 10 மணி யளவில் கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குநர் சீமான், நாஞ்சில் சம்பத் ஆகியோரை கைது செய்ததை யும், அவர்களின் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் போடப்பட்டதையும் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### திருப்பூர் – ஈரோட்டில் கைது

கண்டன ஆர்ப்பாட் டத்துக்கு காவல்துறை அனுமதி மறுத்ததால் ஈரோடு, திருப்பூரில் கழகத் தோழர்கள் தடையை மீறி கைதானார்கள்.

கழகப் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில், மறுமலர்ச்சி தி.மு.க. மாவட்ட துணை செயலாளர் கிருட்டிணசாமி, அவைத் தலைவர் இராமகிருஷ்ணன், கழக செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் சுசி. கலையரசன், தலித் விடுதலைக் கட்சி பொதுச்செயலாளர் எம்.பி. செங்கோட்டையன், தமிழ் தேசிய விடுதலை இயக்கம் தேவேந் திரன், ஆதித் தமிழர் விடுதலை முன்னணி இரவிக்குமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கழக ஆட்சிக் குழு உறுப்பினர்

(4 ஆம் பக்கம்)

## சேலத்தில் பெரியார் திராவிடர் கழக மாநில செயற்குழு கூடுகிறது!

அன்புடையீர்!

பெரியார் திராவிடர் கழக மாநில செயற்குழு கூட்டம் எதிர்வரும் 29.3.2009 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

தலைமை : கு. இராமகிருட்டிணன் ( கழகப் பொதுச்செயலாளர்)

இடம் : சேலம் நேஷனல் ஓட்டல் அரங்கு (நான்கு ரோடு சந்திப்பு அருகில்)

பொருள் : (1) நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்தின் நிலைப்பாடு

(2) கழகத் தலைவர் கொளத்தூர் மணி கைது

(3) இயக்க செயல்பாடுகள்

தோழர்கள் தவறாது வருகை தர வேண்டுகிறோம்!

தோழமையுள்ள
விடுதலை இராசேந்திரன்
(பொதுச் செயலாளர்)

## "விடுதலை" யின் சொத்தை வாதங்களுக்கு பதில்

# பெரியாரியலை 'வேதமாக்க' வேண்டாம்!

'விடுதலை' நாளேடு அறிவார்ந்த கூர்மையான வாதங்களை முன் வைத்து இன எதிரிகளைக் கலங்கடித்த காலம் ஒன்று இருந்தது. ஆனால், 'விடுதலை' இப்போது போராட்டப் பண்புகளை இழந்து சமரசங்களோடு தனி மனித துதிப்பாடலில் மூழ்கிப் போய் கிடக்கிறது. அந்தக் கழகமே உறுதியான கொள்கைப் பயணமும், லட்சியத் தெளிவுமின்றி சந்தர்ப்பவாத சேற்றில் மூழ்கிவிட்ட போது அதன் மோசமான பிரதிகளாகவே அந்த அமைப்பின் ஏடுகளும் - மாறி விடுகின்றன!

பெரியார் நூல்கள் நாட்டுடைமை பற்றி பெரியாரிய சிந்தனையாளர் தோழர் எஸ்.வி. ராஜதுரை, 'தினமணி'யில் எழுதிய கட்டுரைக்கு 'விடுதலை' (3.3.2009) ஏற்கனவே எழுதிய பழைய சொத்தை வாதங்களையே மீண்டும் எழுதித் தீர்த்திருக்கிறது. தோழர் எஸ்.வி.ஆர். தனது கட்டுரையில் எழுப்பியுள்ள ஒரு கேள்விக்குக் கூட 'விடுதலை'யின் மின்சாரத்தால் பதில் கூற முடியவில்லை. எஸ்.வி.ஆர். எழுப்பிய முக்கிய கேள்விகள் இவை தான்!

*1. நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்கு பெரியார் நூல்கள் நாட்டுடைமை பற்றியது அல்ல; பெரியார் 'குடி அரசு' ஏட்டில் எழுதியது, பேசியது பற்றிய முழுமையான தொகுப்பை வெளியிடுவது பற்றிய வழக்கு தான். காலவரிசைத் தொகுப்பு என்பது வேறு; நூல்கள் நாட்டுடைமை என்பது வேறு.*

*2. தலைப்பு வாரியாக பெரியார் கட்டுரைகளை வெளியிடுவது பெரியார் பற்றிய முழுமையான பரிமாணத்தை வெளிப்படுத்தாது. பெரியார் சிந்தனையில் சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, கடவுள் மறுப்பு, மத மறுப்பு, பொருளாதாரம் தொடர்பான கருத்துகளைத் தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாது. அவரது சிந்தனைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை. எனவே, அவர் வாழ்ந்த சமூக அரசியல் பண்பாட்டுப் பின்புலத்திலிருந்து அவர் சிந்தித்த கருத்துகளை அந்தப் பின்புலத்தோடு காலவரிசைப்படி தருவதே சரியானது.*

*3. பெரியாரால் - ஏற்கனவே வாங்கப்பட்ட சொத்துக்களின் அறங்காவலர்களாக சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் ஆயுட்கால உறுப்பினர்கள் செயல்படுவார்கள் என்று சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் சட்ட திட்டம் கூறுகிறது. இதில் பெரியாரின் - எழுத்தும் பேச்சும், எப்படி வரும்? தனது பேச்சையும், எழுத்தையும் பெரியார் ஏற்கனவே வாங்கி வைத்திருந்ததாக வீரமணி கூறுகிறாரா? இது பெரியாரை இழிவுபடுத்துவதல்லவா?*

*4. சுயமரியாதை சங்கத்தின் சட்டத் திட்டம் சுயமரியாதை சங்கத்துக்காக, சுயமரியாதை சங்கத்தின் நிதியிலிருந்து பெரியார் வாங்கிய சொத்துகளைப் பற்றித்தான் குறிப்பிடுகிறது. ஆனால், பெரியார் நடத்திய 'குடிஅரசு', 'பகுத்தறிவு', 'புரட்சி', 'விடுதலை', 'ரிவோல்ட்', 'ஜஸ்டிஸ்' முதலிய ஏடுகள் 'சுயமரியாதை பிரச்சார நிறுவன'த்தால் வெளியிடப்பட்டவையே அல்ல. அந்த நிறுவனம் பதிவு செய்யப்பட்டது 1952 இல் தான்! பிறகு சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் சார்பில் எப்படி உரிமை கோர முடியும்?*

*5. எழுத்துப்பூர்வமாக - ஒருவருக்கு ஒப்புதல் தந்தால் தான் பதிப்புரிமை கோர முடியும் என்று பதிப்புரிமை சட்டம் கூறுகிறது. பெரியார் - வீரமணிக்கு அப்படி எழுத்துப்பூர்வமாக பதிப்புரிமை வழங்கியுள்ளாரா? இல்லையே!*

*6. ஏறத்தாழ எட்டு ஆண்டுகால 'குடிஅரசு'ம், இரண்டு ஆண்டுகால 'விடுதலை'யும் தம்மிடம் இல்லை என்று 'விடுதலை'யில் வீரமணியே அறிக்கை வெளியிடுகிறார். இதுதான் பெரியாரின் 'அறிவுசார்ந்த சொத்தை' - இவர் பாதுகாத்த லட்சணமா?*

- இப்படி தோழர் எஸ்.வி. ராஜதுரை எழுப்பிய எந்தக் கேள்விக்கும் ஒருவரி பதில்கூட மின்சாரத்தின் கட்டுரையில் கிடையாது. பதில் சொல்ல வந்ததாக - பேனா பிடித்தவர்கள் ஒன்றுக்குக்கூட பதில் கூறாமல் திணறிப் போய் நிற்பது அவர்களின் பரிதாப நிலையையே படம்பிடித்துக் காட்டுகிறது; சரி விட்டு விடுவோம்.

வேறு என்ன கருத்துகளை அக்கட்டுரை, முன் வைக்கிறது? எல்லாமுமே பழைய பல்லவி. பெரியார் நூல்களை காலவரிசைப்படி - பெரிய பெரிய தொகுதிகளாக வெளியிட்டால் அது கண்டிப்பாக அலமாரியில்தான் தூங்குமாம்! வெகு மக்களுக்கு போய்ச் சேராதாம்! வெகு மக்களுக்கு சென்றடைய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டுமாம்! எந்த பதிப்பகத்தாருக்கும் இதுவரை தெரியாத ஆராய்ச்சியை நடத்தி, 'மின்சார'த்தின் கட்டுரை விளக்கம் அளித்திருக்கிறது. *300 பக்கங்களுக்கு* ***மிகைப்படாமல்*** இருந்தால் அது, வெகு மக்களுக்கு போய்ச் சேர்ந்துவிடுமாம்! அதுவே *301 பக்கங்களாகிவிட்டால், அது **'கண்டிப்பாக'** அலமாரிக்குள் முடங்கிவிடு மாம்! 299* பக்கங்கள் வரை இருந்தால் மட்டுமே அது கடை கோடி பொது மக்களுக்கு போய் சேரும் என்ற திடுக்கிடும் ஆய்வுகளைக் கூறி 'விடுதலை' திணற வைத்துள்ளது. பெரியாரின் கருத்துகளை தலைப்பு வாரியாகத் தொகுத்து - இதுவரை 31 தொகுதிகளை வெளியிட்டுள்ளதாகவும், அக்கட்டுரை கூறுகிறது. பெரியாரியலை வெகு மக்களிடம் கொண்டு செல்லும் 'சூட்சமம்' பக்கங்களின் எண்ணிக்கையில் அடங்கியிருப்பதைக் கண்டறிந்துள்ள மின்சாரத்துக்கு நாம் பதில் சொல்ல வேண்டாம்; அவர்கள் நடத்தும் 'திராவிடன் புத்தக நிலையமே' பதில் தந்திருக்கிறது.

தங்களின் நோக்கம் வெகுமக்களிடம் பெரியாரியலைப் பரப்புவதைத் தவிர, அறிவுஜீவிகளுக்கோ, ஆராய்ச்சியாளர்களுக்கோ அல்ல என்று மின்சாரம் எழுதுவதற்கும் இதில் பதில் கூறப்பட்டுள்ளது.

'சாதி - தீண்டாமை' எனும் தலைப்புகளில் வெளிவந்துள்ள 31 தொகுதிகளிலும் கடைசி பக்கத்தில் ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

> *"ஒவ்வொரு பாகமும் 300 பக்கங்களுக்கு மேல்! மக்கள் பதிப்பு... ஆய்வு மேற்கொள்ளும் மாணவ மணிகளே! மதிப்புமிகு வரலாற்று ஆசிரியர்களே கைவிளக்காய் பயன்படும் அய்யாவின் இந்த வழிகாட்டி நூலை வாங்கிப் பயன் அடையுங்கள்"*

- என்று அந்த விளம்பரம் கூறுகிறது. வரலாற்று ஆசிரியர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் 'கை விளக்காக' - வெளியிடுகிறோம் என்று விளம்பரம் செய்து கொண்டு, இன்னொரு பக்கம் 'வெகு மக்களுக்கு' கொண்டு செல்வதே தமது நோக்கம் அறிவு ஜீவிகளுக்கு அல்ல என்று 'மின்சாரங்கள்' எழுதிக் கொண்டிருக்கிறார்கள். 2005 ஆம் ஆண்டில் - பெரியார் சிந்தனை களை 503 பக்கங்களில் தொகுத்து, திராவிடர் கழகம் வெளியிட்டுள்ளது - மின்சாரத்துக்கு தெரியாது போலும்! கருத்தியல் தளம் ஏதுமின்றி சந்தர்ப்பவாத நோக்கத்தோடு, பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சிகளை தடைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு - எதையாவது ஒரு பதிலைக் கூற வேண்டுமே என்ற 'நெருக்கடிக்குள்' சிக்கி பேனாவைப் பிடிப்பதால் தான் இப்படி - முரண்பாட்டுக்குள் சிக்கிக் கொள்கிறார்கள்.

மற்றொரு 'திடுக்கிடும்' ஆராய்ச்சியையும் மின்சாரம் கட்டுரை முன் வைத்துள்ளது. பெரியார் காலத்தில் - அவர் வாழ்ந்த போது பெரியார் கருத்துகளைப் பற்றி கவலைப்பட்டவர்கள் தான். இப்போது பெரியார் கருத்துகளையே பேசத் தகுதி படைத்தவர்கள் என்கிறது அந்த ஆராய்ச்சி!

பெரியார் காலத்துக்குப் பிறகு உணர்ந்து, பெரியாரியலைப் புரிந்து கொண்டு - அந்த தத்துவம் மக்களை சென்றடைய வேண்டிய அவசியத்தைப் புரிந்து, அதைப் பரப்புவதற்கு முன் வந்தால் பாராட்டமாட்டார்களாம். நீ பெரியார் காலத்தில் என்ன செய்தாய்? உனக்கு என்ன தகுதி என்று கேட்பார்களாம். அப்படியே இருக்கட்டும்; ஒரு கேள்வியை கேட்கிறோம்; தி.மு.க. தோன்றிய காலத்திலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை பெரியாரை குறை கூறி, பெரியாரை கடுமையாக விமர்சித்தவர் தானே கலைஞர். அவரைப் பார்த்து இப்போது பெரியாரைப் பற்றிப் பேச உமக்கு தகுதி உண்டா? என்ற கேள்வியை மின்சாரங்கள் கேட்பார்களா?

அதே கலைஞர் கருணாநிதி - வீரமணிக்கு வழங்கிய பாராட்டுரைகளை தங்கள் தலைவருக்கான நற் சான்றிதழ்களாக இதே கட்டுரையில் எடுத்துக் காட்டி பெருமைப்படுகிறதே, மின்சாரத்தின் கட்டுரை! ஏன் இந்த முரண்பாடு!

தமிழகத்திலே 'விடுதலை' நாளேடு ஒன்றினால் மட்டுமே "தமிழர் தலைவர்" என்று அழைக்கப்படும் இவர் தான், பெரியார் காலத்திலிருந்து இருந்து வருகிறாராம். எனவே, பெரியார் நூல்கள் பரவுவது பற்றி அவருக்கு மட்டுமே கவலை உண்டாம். மற்றவர்கள் எவரும் கவலைப்படத் தேவை இல்லை என்கிறது மின்சாரம் கட்டுரை! "என் புருசனுக்கு என்மீது இல்லாத அக்கரை உனக்கு என்னாடி?" என்கிற 'குழாயடி' தரத்துக்கு - 'விடுதலை'யின் 'அறிவார்ந்த' வாதங்கள் சுருங்கிப் போய் விட்டனவே! அந்தோ பரிதாபம்!

பெரியார் **நூல்கள்** நாட்டுடைமையாக்க வேண்டும் என்பது அல்ல பிரச்சனை. பெரியாரின் **எழுத்து பேச்சுகள்** கால வரிசைப்படி தொகுக்கப்பட வேண்டும். இதுதான் வழக்கு என்று எஸ்.வி.ராஜதுரை எழுதியதற்கு மின்சாரம் கூறும் பதில் என்ன?

"பெரியாரின் நூல்களில் - அவரின் எழுத்துகள், பேச்சுகள் இல்லையா? இதுவரை 31 தொகுதிகளை வெளியிட்டுள்ளோமே!" என்று பதில் கூறுகிறது கட்டுரை. முதலில் ஒன்றை புரிந்து கொள்ளட்டும்! அவை எல்லாம் பெரியாரின் நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவையல்ல. பெரியார் நடத்திய 'குடிஅரசு', 'புரட்சி' போன்ற இதழ்களிலிருந்தும், 'விடுதலை' நாளேட்டிலிருந்தும் எடுக்கப்பட்டு, இப்போதுதான் முதன்முதலாக நூல் வடிவமே பெறத் தொடங்கியுள்ளன. தங்களின் வெளியீடு எதிலிருந்து தொகுக்கப்படுகிறது என்பதுகூட தெரியாமலேயே அவ்வளவு அவசரம் காட்டி பேனாவை எல்லாம் தூக்கிவிடக் கூடாது!

பார்ப்பன ஏடுகள் - பெரியார் கருத்தைத் திரிக்கவில்லையா என்று ஒரு கேள்வி. பார்ப்பனர்கள் எப்போதுமே பெரியார் கருத்தைத் திரித்துத் தான் கூறுவார்கள்! அப்படி திரிபுவாதங்கள் நடக்கும்போது முறியடிப்பதுதான் பெரியாரியலாளர்களின் வரலாற்றுக் கடமை! எவருமே பெரியார் கருத்துகளை 'திரித்து' விடாதபடி - பெரியார் நூல்களை, ஏடுகளை 'சேப்டி லாக்கரில்', 'தமிழர் தலைவர்கள்' பூட்டி விடக் கூடாது; அப்படி பூட்டி வைத்திருக்கும் போதே சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை பார்ப்பன ஏடுகள் திருத்தி வெளியிட்டுவிட்டதாக, 'மின்சாரம்' கட்டுரை கூறுகிறதே! அப்போது மட்டும் எப்படி 'திருத்தல் வாதம்' நடந்ததாம்? இதிலிருந்து ஒரு உண்மையை 'மின்சாரங்கள்' புரிந்து கொள்ள வேண்டும். பெரியார் நூல்கள் அரசுடைமையாகா விட்டாலும் திருத்தல் வாதம் நடக்கும்; அரசுடைமை யானாலும் திருத்தல் வாதம் நடக்கும்; அப்படி திருத்தல் வாதங்கள் வரும் போது - அதை எதிர் கொண்டு முறியடிப்பதுதான் - உண்மையான பெரியாரியல்வாதிகள் கடமையாக இருக்கும். இத்தகைய 'விவாதக் களங்கள்' எதிர் நீச்சல் வழியாகத்தான் பெரியாரியலே - தனது வெற்றிப் பயணத்தை நடத்தி வந்திருக்கிறது. அதனால்தான் தன்னுடைய கருத்துகளுக்கு எப்போதுமே எதிரிகள் தான் விளம்பரப்படுத்தி வருகிறார்கள் என்று அறிவு ஆசான் பெரியார் கூறி வந்திருக்கிறார். விவாதங்களுக்கும், எதிர்ப்புகளுக்கும் உள்ளாகும் போதுதான் பெரியாரியல் மக்களிடம் சென்றடையும். பார்ப்பன இருட்டடிப்பைக் கிழித்து பெரியாரியம் வளர்ந்ததே - அவர்கள் காட்டிய எதிர்ப்பு - திரிப்புகளால் தான்.

பெரியார் கருத்தை - பார்ப்பனர்கள் மட்டுமா திரிக்கிறார்கள்; பெரியாரை - தங்களுக்கு மட்டுமே உரிமை கொண்டாடும் "தமிழர் தலைவர்" களும் திரிக்கிறார்களே? அடுக்கடுக்கான ஆதாரங்களோடு - 'புரட்சி பெரியார் முழக்கம்' அம்பலப்படுத்தி வருகிறதே; அதற்கெல்லாம் பதில் உண்டா?

பாரதியார் பாடல்கள் திரிக்கப்பட்டுவிட்டதாக - பாரதியாரின் பெயர்த்தி குமுறுகிறாராம்! "இதற்கு என்ன பதிலை வைத்துள்ளார் ராஜதுரைகள்?" என்று சவால் விடுகிறது அந்தக் கட்டுரை! இதற்கு ராஜதுரை ஏன் பதில் வைத்திருக்க வேண்டும்? அதைத் தான் பாரதியின் பேத்தியே பார்த்துக் கொள்வாரே!

பெரியார் - தனித்தமிழ் நாடே கேட்கவில்லை என்று 'தினமணி'யில் கி.வீரமணி கட்டுரை எழுதிய போது, வீரமணியின் திரிபுவாதத்தை ஆதாரத்தோடு அம்பலப்படுத்தி, 'மரபும் - திரிபும்' நூலை எழுதினாரே ராஜதுரை! 2001 ஆம் ஆண்டு வெளிவந்த இந்த நூலுக்கு கடந்த எட்டு ஆண்டுகளாக 'விடுதலை'யோ, 'தமிழர்

**(3 ஆம் பக்கம்)**

# ‘பொன் மொழிகள்’ வழக்கில் பெரியார் கூறியது என்ன?

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரோ’ - மின்சாரமோ வாய் திறக்காதது ஏன்? பதில் கூறுவார்களா?

பெரியார் தனித் தமிழ்நாடு கேட்கவில்லை என்று, வீரமணி திரித்தாரா இல்லையா? அந்த திருத்தல்வாதத்தை எப்படி முறியடிக்க முடிந்தது? பெரியார் பேச்சு - எழுத்துகளைக் கொண்டுதானே! இந்த எழுத்தும் பேச்சும். பெரியார் பிறந்தகத்துக்குள் முடங்கி விட்டால் திரிப்பவர்கள் திரித்துக் கொண்டுதானே இருப்பார்கள்? இந்த ஆபத்துகள் நிகழக் கூடாது என்பதற்குத் தான் பெரியார் எழுத்து பேச்சுகளை ‘பிறந்தகத்தை’ விட்டு வெளியே கொண்டு வரவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது. தலைப்பு வாரியாகத் தொகுக்கிறோம் என்று கூறுகிறவர்களைக் கேட்கிறோம்; பெரியார் தனித்தமிழ் நாடு பற்றி பேசிய ஏராளமான பேச்சுகளை தனித் தலைப்பாகத் தொகுத்து வெளியிடுவீர்களா?

‘தினமணி’ பார்ப்பன நாளேட்டில் எழுதலாமா? ‘தினமணி’ வெளியிடுகிறது என்றாலே, அதன் நோக்கம் புரியவில்லையா என்று மின்சாரம் கேட்கிறார்.

‘தினமணி’ பார்ப்பன ஏடு தான். அந்த பார்ப்பன ஏட்டுக்கு பெரியார் ‘தனிநாடு’ கேட்கவில்லை என்று இதே வீரமணி கட்டுரை எழுதவில்லையா? பார்ப்பன இந்துத்துவ சக்திகளை மகிழ்விக்க ஜெயலலிதா ஆட்சியில் மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, அதை ஆதரித்து நீதிபதி வேணுகோபால் ‘தினமணி’க்கு கட்டுரை எழுதி, அந்தக் கட்டுரையை ‘தினமணி’க்கு நன்றி தெரிவித்து, ‘விடுதலை’ மறு வெளியீடாக வெளியிடவில்லையா?

தனது வாதத்துக்கு வலிமை சேர்க்க வரலாற்று நிகழ்ச்சி ஒன்றுக்கு தாவுகிறது மின்சாரம் கட்டுரை! அது ‘பெரியார் பொன்மொழிகள்’ நூல் தடை செய்யப்பட்டு, பெரியார் கைது செய்யப்பட்ட வரலாறு. சரி; இந்த வரலாற்று நிகழ்வாவது இவர்களின் வாதங்களுக்கு வலிமை சேர்க்கிறதா என்றால், அதுவும் இல்லை.

திருச்சி திராவிட மணி பதிப்பக சார்பில் 1947 இல் வெளியிடப்பட்டது ‘பொன் மொழிகள்’. பெரியார் அனுமதியோடுதான் - இந்த நூலை அந்த பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இதை பெரியாரே நீதிமன்றத்தில் கூறியுள்ளார். எனவே பெரியார் தனது காலத்திலேயே பிற நிறுவனங்கள் தமது நூலை வெளியிட அனுமதித்துள்ளார் என்பதும், தான் மட்டுமே வெளியிட கருதவில்லை என்பதும் தெளிவாகிறது. அந்த வழக்கில் நீதிமன்றத்தில் பெரியார் மற்றொரு கருத்தையும் கூறினார்:

“‘பொன்மொழிகள்’ நூலில் இடம் பெற்றுள்ளவை பொறுக்கி எடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டவை. அதிலுள்ள வாசகங்கள் நுணுக்கமாகப் படித்துப் பார்த்து கவலை கொள்ளவில்லை. அவைகள் என்னால் எழுதப்பட்ட, பேசப்பட்டவை தானா என்பதும் எனக்குத் தெரியாது. இவ்வளவு காலத்துக்குப் பிறகும் அவைகள் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் என்னால் சொல்ல முடியாது” என்று நீதிமன்றத்தில் கூறிய பெரியார், இப்படி பொறுக்கி எடுத்து தொகுக்கப்பட்டதால் - இப்போது, அதன் சரியான அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது என்பதை இவ்வாறு கூறுகிறார்:

“பெரும்பாலும் அவைகள் அக்காலங்களில் பயிற்சியில்லாத இளைஞர்களால் நெட்டெழுத்திலே எழுதப்பட்டவைகள். மேலும் அவைகள் வெளியிடுபவர்களின் கருத்துக்கேற்றபடி வெளியிட்டிருக்கலாம். **எனவே அவைகளிலிருந்து தொகுக்கப்பட்ட இத் தொகுப்பு நான் அன்று என்ன கருத்துடன் சொல்லியிருப்பேனோ அதைக் கொண்டிருக்க முடியாது**” என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

ஒரு காலத்தில் - எந்த சமூகப் பின்னணியில் எத்தகைய அரசியல் சூழலில் ஒரு கருத்து முன் வைக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்வதற்குத் தான் காலவரிசைத் தொகுப்பு வரவேண்டும் என்ற கருத்தே வலியுறுத்தப்படுகிறது. காலச் சூழல் - சமூக அரசியல் பின்னணியிலிருந்து துண்டித்து, கருத்துகளை மட்டும் தலைப்பு வாரியாக பிரித்து வெளியிடுவது சரியான புரிதலுக்கு இட்டுச் செல்லாது என்பதையே பெரியாரின் இந்த நீதிமன்ற வாக்கு மூலமே சான்றாக உணர்த்திக் கொண்டிருக்கிறது.

**“அன்று என்ன கருத்துடன் சொல்லியிருப்பேனோ”** என்று பெரியார் கூறியிருப்பதுதான் இங்கே ஆழமாகக் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். பெரியார் கூறுவதற்காவது மதிப்பளித்து தங்களை திருத்திக் கொள்ள வேண்டும் என்பதைத்தான் கட்டுரையாளர்களுக்கு பதிலாக முன் வைக்க விரும்புகிறோம்.

கால்பந்து விளையாட்டில் - பந்தை விட்டுவிட்டு விளையாடுகிறவர் காலை உதைப்பது போல் எஸ்.வி. ராஜதுரை அவர்களையும், அவரோடு துணையாசிரியராக இருந்தது பெரியாரியம் பற்றிய ஆழமான தமிழ் ஆங்கில நூல்களை வெளியிட்டவருமான வ.கீதாவையும், மிகவும் கீழ்த்தரமாக அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வ. கீதா - எஸ்.வி. ராஜதுரையின் ‘பார்ப்பனத் தோழி’யாம்! தரம்தாழ்ந்த எழுத்து! வ.கீதா பிறப்பால் பார்ப்பனர் தான்; ஆனாலும் பெரியாரியல்வாதி. பெரியாரியலுக்கு மகத்தான பங்களிப்புகளை அறிவுத்தளத்தில் வழங்கியவர். (தோழர் எஸ்.வி. ராஜதுரை, வ.கீதாவின் பெரியாரியல் பங்களிப்பு குறித்து தோழர் ஒருவர் எழுதியதை 4 ஆம் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்) - பெரியாரியலுக்கு இவர்கள் வழங்கிய பங்களிப்பில் ஒரு சிறு அளவாவது கி.வீரமணி அறிவு தளத்தில் வழங்கியது உண்டா?

“நான் ஒரு பாப்பாத்தி தான்” என்று சட்டமன்றத்தில் ஆணவத்தோடு அறிவித்து, இந்து பார்ப்பனிய கொள்கைகளை முழுமையாக ஏற்றுக் கொண்ட, ஜெயலலிதாவை ‘சமூகநீதி காத்த வீராங்கனையாக்கி’ 12 ஆண்டு காலம் தோளில் சுமந்து திரிந்தவர்கள், பெரியாரியலை ஏற்றுக் கொண்ட பார்ப்பனரைக் குறை கூறத் தகுதி உண்டா? கலைஞர் கருணாநிதிக்கும் வீரமணிக்கும் ‘வழக்கறிஞராக’ நின்று கட்டுரை எழுதும் சின்னக் குத்தூசி யார்? அவரும் ஒரு பார்ப்பனர் தானே? அவரது ‘முரசொலி’ கட்டுரைகளை ‘விடுதலை’ வெளியிடுகிறதே! ஆந்திர நாத்திகர் கோரா - பார்ப்பனர் தானே? அவரை பெரியார் திடலுக்கு அழைக்கவில்லையா? இப்போதும் அவரது மகன் நடத்தும் நாத்திகர் மாநாடுகளுக்கு - வீரமணி போவதில்லையா? ‘நக்கீரன்’ வார ஏட்டில் “இந்து மதம் எங்கே போகிறது?” என்று அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாச்சாரி எழுதி வந்த கட்டுரையை வாரம் தவறாமல் ‘விடுதலை’யும் வெளியிட வில்லையா? தாத்தாச்சாரியார் - என்ன “சூத்திரரா”?

பெரியார் நூல்களைப் பரப்புவது பற்றி, “யாரும் கவலைப்படத் தேவையில்லை” என்று கூறுகிறது. மின்சாரத்தின் கட்டுரைத் தலைப்பு; தி.மு.க. கூட்டணியில் ‘கலைஞரின் இதயத்தில் சீட்டு’ வாங்கிக் கொண்டு சோனியாவின் தூதுவர்களாக புறப்படும் “தன்மானத் தமிழர் தலைவர்களுக்கும்” அவரது அரசவை பாராட்டுரையாளர்களுக்கும் வேண்டுமானால் பெரியார் நூல்கள் சிந்தனைகள் பற்றிய கவலை இல்லாமல் இருக்கலாம்.

ஆனால் உண்மையான பெரியாரியல்வாதிகள் கவலைப்படத்தான் செய்வார்கள்.

முனை மழுங்கிய வாதங்களை எழுப்பிப் பயன் இல்லை.

வேதங்களைப் பார்ப்பனர்கள் அச்சில் ஏற்றாமல், தங்களுக்குள்ளேயே மனப்பாடம் செய்து வைத்தார்கள். எனவே அதற்கு ‘மறை’ என்று பெயர் சூட்டப்பட்டது. மக்களிடம் வேதத்தை கொண்டு செல்ல பார்ப்பனர்கள் மறுத்த காரணம் - அது தங்களின் சுரண்டும் உடைமை என்பதால் தான். வேத எதிர்ப்பாளரான பெரியாரின் சிந்தனைகளை தங்களுக்குள் முடக்கிட துடிப்பதும்கூட பார்ப்பனியம் தான்.

பெரியாரியம் பார்ப்பனர் சுரண்டலுக்கான வேதம் அல்ல; பார்ப்பனரல்லாத மக்களின் உரிமைப் பெட்டகம்; அது மக்களிடம் தான் வரவேண்டும்! மின்சாரங்கள் பெரியாரியலை ‘வேத’மாக்க முயல வேண்டாம்.

**– இராவணன்**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 19.03.2009**

## காங்கிரசை கலக்கும் கழகத்தின் குறுந்தகடு

‘இனி என்ன செய்யப் போறீங்க?’ எனும் தலைப்பில் பெரியார் திராவிடர் கழகம் தயாரித்துள்ள குறுந்தகடு நாடு முழுதும் அதிர்வு அலைகளை உருவாக்கி வருகிறது. காங்கிரஸ் வட்டாரங்கள் கலக்கமடைந்திருப்பதாக ஏடுகள் செய்திகளை வெளியிட்டுள்ளன. ‘தினமலர்’ பார்ப்பன ஏடு அந்தக் குறுந்தகடு தடை செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு மூன்று நாட்களாக எதிர்ப்பான செய்திகளை வெளியிட்டுள்ளது. ‘தினமலர்’, பார்ப்பன நாளேட்டுடன் கடந்த சில காலமாக நட்பு பாராட்டத் தொடங்கியுள்ளது தி.மு.க. என்பது குறிப்பிடத்தக்கது. சீமான், கொளத்தூர் மணி கைது செய்யப்பட வேண்டும் என்று ‘தினமலர்’ வலியுறுத்தியதைத் தொடர்ந்து - உடனே தி.மு.க. ஆட்சி, அவர்களை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்து விட்டது.

கழகத்தின் குறுந்தகடு பற்றி ‘ஜூனியர் விகடன்’ வார ஏடு (மார்ச் 11, 2009) காங்கிரசுக்கு எதிராக ‘ஆயுத்தமாகும் சி.டி.கள்’ என்ற தலைப்பில் இரண்டு பக்க கட்டுரையை வெளியிட்டு, அதில் அடங்கியுள்ள கருத்துகள், படங்களை விவரித்துள்ளது. கழகத் தோழர்கள் பேட்டியையும், காங்கிரஸ் தலைவர் தங்கபாலு பேட்டியையும் வெளியிட்டுள்ளது. இதைத் தடை செய்யும் நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக தங்கபாலு கூறியுள்ளார்.

‘நக்கீரன்’ ஏடு இது குறித்து இரண்டு பக்க கட்டுரையை பொதுச் செயலாளர் இராமகிருட்டிணன் பேட்டியோடு வெளியிட்டுள்ளது. கட்டுரை இவ்வாறு தொடங்குகிறது. “பதினைந்து நிமிடங்கள்தான் ஓடுகிறது அந்த குறுந்தகடு. ஆனால், ஐந்தாண்டுகால ஆட்சியின் ஆணிவேரையே அசைக்கும் வலிமை அதற்கு இருப்பதை, அதிலுள்ள காட்சிகளைக் காணும் மக்களிடமிருந்து வெளிப்படும் உணர்வின் மூலமாக அறிய முடிகிறது.”

தமிழகம் முழுதும் - பல்லாயிரக்கணக்கில் பிரதி எடுத்து வழங்கப்பட்டு வரும் இந்தக் குறுந்தகடு காங்கிரசாரை கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

## சுரேஷ் – கீதா மண ஏற்பு விழா!

மயிலாடுதுறை கழகத் தோழர் தெ. மகேஷ் அவர்களின் சகோதரரும், நினைவில் வாழும் கி.தெட்சிணாமூர்த்தி - வசந்தா ஆகியோரின் மகன் தெ. சுரேஷ், மயிலாடுதுறை ரெ சேகர் - ஜெயமணி ஆகியோரின் மகள் சே. கீதா ஆகியோர் வாழ்க்கை இணை ஏற்பு விழா - 8.3.2009 ஞாயிறு காலை 9 மணியளவில் மயிலாடுதுறை ரெத்னா திருமண மண்டபத்தில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் சிறப்புடன் நடந்தது. கழக ஏட்டுக்கு மணமக்கள் சார்பில் ரூ.500 நன்கொடை வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

**தமிழர்களே, தயாராவீர்!**

ஏப்ரலில் – ஈரோட்டில் **“தமிழின வாக்காளர்கள் மாநாடு”**

**இனப் பகையை முறியடிக்க திரளுவோம்!**

(தேதி விவரம் – அடுத்த இதழில்)

**அழைக்கிறது தமிழர் ஒருங்கிணைப்பு!**

# பெரியாரியலுக்கு – வ.கீதாவின் பங்களிப்பு

*பெரியார் பேச்சு – எழுத்துகள் – நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வரும் எஸ்.வி.ராஜ துரைக்கு எதிராக, ‘விடுதலை’யில் கட்டுரை தீட்டிய மின்சாரம் – வ.கீதா பார்ப்பனப் பெண் என்றும், எஸ்.வி.ஆர். பெண் தோழி என்றும் எழுதியுள்ளதற்கு – எதிர் வினையாக – தமிழின உணர்வுடன் தோழர் ஒருவர் எழுதியுள்ளதை வெளியிடுகிறோம்.*

எஸ்.வி.ராஜதுரையுடன் வ.கீதா எழுதியவை பெரியார் குறித்த நூல்கள் மட்டுமல்ல; பல்வேறு மார்க்சிய நூல்கள், கவிதை, சிறுகதை மொழி யாக்கங்கள் உண்டு. வ. கீதா, எம்.எஸ்.எஸ்.பாண்டியனுடன் இணைந்தும் எழுதியுள்ளார். அதேபோல இராமா யணம் பற்றி பெரியார் எழுதிய விமர் சனங்களை ஆங்கில மொழிக்குக் கொண்டு சென்ற பாலா ரிச்மன் என்னும் அமெரிக்க அறிஞருடனும் இணைந்து எழுதியுள்ளார்.

பெரியாரையும் அவரது சுயமரி யாதை இயக்கத்தையும் குறிப்பிட்ட வரலாற்று, அரசியல் சூழலில் வைத்தும் பெரியார் இயக்கத்தவரால் எந்த நூலும் எழுதப் பட்டிராத நிலையில், எஸ்.வி. ராஜ துரையுடன் இணைந்து வ.கீதா எழுதி யுள்ள ‘பெரியார்: சுயமரியாதை சம தர்மம் நூலுக்கோ, எஸ்.வி. ராஜ துரை தனியாக எழுதியுள்ள ‘பெரியார்: ஆகஸ்ட் 15’ நூலுக்கோ இணையான நூலொன்றை வீரமணி கூட்டத்தார் என்றேனும் எழுதியிருக்கிறார்களா? அதேபோல, பெரியாரின் வாழ்வையும் சிந்தனையையும் இந்தியா முழுவதற்கு மட்டுமின்றி உலகெங்கினுமுள்ள அறிஞர் பெருமக்களுக்கும் எடுத்துச் செல்வதற்காக வ.கீதாவும், எஸ்.வி.ராஜ துரையும் இணைந்து எழுதியுள்ள ‘Towards a Non-Brahmin Millennium: From Iyothee Thass to Periyar’ என்னும் நூல் மூன்றாவது பதிப்பைக் கண்டிருக்கிறது. வ.கீதாவும், எஸ்.வி. ராஜதுரையும் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளின் தொகுப்பு ‘The Periyar Century: Themes in Caste and Gender’ என்னும் தலைப்பில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தால் சென்ற ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இதில் வ.கீதாவின் பங்களிப்பு தான் முதன்மையானது. ஹைதராபாத், மும்பை, டெல்லி, திருவனந்தபுரம், கோல்கத்தா போன்ற இந்திய நகரங்களில் மட்டுமல்லாது அமெரிக்கா, இலங்கை போன்ற நாடுகளும் நடத்தப் பட்ட பல்வேறு கருத்தரங்குகளில் கலந்து கொண்டு பெரியார் கருத்துகளைப் பரப்பியவர் வ.கீதா.

பெண் விடுதலை குறித்த சிந்தனைகளுக்கும் செயல்பாடுகளுக்கும் தந்தை பெரியாரும் சுயமரியாதை இயக்கப் பெண்களும் வழங்கிய பங்களிப்புகளை ‘காலக் கனவு’ என்னும் நாடக வடிவத்தில் அமைத்து அதைத் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் மட்டுமின்றி டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்திலும் அரங்கேறச் செய்தவர் வ.கீதா தான். ‘இந்துப் பண்பாட்டைக் காப்பாற்றுதல்’ என்னும் பெயரால் கர்நாடக மாநிலத்தில் ராம் சேனையினர் நடத்தி வரும் காலித்தனங்களைக் கண்டித்து டெல்லி பல்கலைக்கழக மாணவர்கள் அருந்ததி ராய் போன்ற அறிஞர்களைக் கொண்டு நடத்திய கண்டனக் கூட்டங்களில் பெண் விடுதலை பற்றி பெரியார் கூறிய கருத்துகளும் படிக்கப்பட்டன. அவற்றை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து அந்த மாணவர்களுக்குக் கொடுத்துவிட்டு வந்தவர் வ.கீதா தான்.

வ. கீதா எழுதிய ஆங்கில நூல்கள், மும்பை எஸ்.என்.டி.டி. பெண்கள் பல்கலைக்கழகத்தில் பாட நூல்களாக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரியார் கருத்துகள் கணிசமாக இடம் பெற்றுள்ளன.

‘அனைவருக்கும் கல்வி’ என்னும் மத்திய அரசின் திட்டத்தின் கீழ் தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை, தொடக்கப் பள்ளிச் சிறுவர் சிறுமிகளுக்காக ‘வாசிப்பு நூல்கள்’ சிலவற்றைக் கொண்டு வந்துள்ளது. அவற்றைக் கொண்டு வரும் பொறுப்பு வ.கீதாவிடம் ஒப்படைக்கப்பட்டது. வ.கீதாவின் பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட நூல்களிலொன்று ‘அனைவரும் உறவுகளே’. பார்ப்பனிய கல்வி முறையே இதுகாறும் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலையில் துப்புரவுத் தொழிலாளிகளையும் செருப்புத் தைக்கும் தொழிலாளியையும் குழந்தைகள் ‘மாமா’, ‘அண்ணன்’ என்று உறவு முறை வைத்து அழைக்கும்படி செய்கிறது அந்த நூல். அந்த ‘வாசிப்பு நூல்கள்’ வெளியீட்டு விழா சென்னையில் சென்ற ஆண்டு நடந்தது. அதில் சிறப்புரையாற்றிய அமைச்சர் தங்கம் தென்னரசு, வ.கீதா வின் பணிகளைப் போற்றிப் புகழ்ந்தார். ‘கீதோபசங்களை வெறுப்பவன் நான். ஆனால், இந்த கீதாவின் (வ.கீதாவின்) உபதேசங்களை மணிக்கணக்கில் கேட்பதில் எனக்கு விருப்பமுண்டு’ எனப் பேசியிருக்கிறார்.

தோழர் எஸ்.வி.ராஜதுரை மார்க்சிய சிந்தனையாளர். பல ஆண்டுகள் பொதுவுடைமை இயக்கங்களில் இருந்தவர். தற்போது எந்தக் கட்சியையும் நிறுவனத்தையும் சாராமல் இருக்கும் அவர், பெரியார் சிந்தனையை உலகெங்கும் பரப்புவதற்காக, இப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததன் காரணமாக ஒரு கண் பார்வையை இழந்து, மும்முறை மாரடைப்பால் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் புற்று நோயால் அவதியுற்ற தனது துணைவியாரின் ஓய்வூதியத்தையும், தனது எழுத்துகளுக்குக் கிடைக்கும் அற்ப சன்மானங்களையும் கொண்டு எழுபது வயதை நெருங்கும் இந்த நேரத்திலும் சலிப்பின்றி உழைத்து வருபவர்.

**– ஓர் உணர்வுள்ள தமிழன்**

---

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

பொள்ளாச்சி மனோகரன், பொள்ளாச்சி பிரகாசு, மாவட்ட தலைவர் கருமலையப்பன், ப. இராமச்சந்திரன், யாழ். நடராசன், ஆனைமலை கா.சு. நாகராசு, கோவை மாநகர செயலாளர் வே. கோபால், அமைப்பாளர் இ.மு. சாஜித், அலுவலக பொறுப்பாளர் சா. கதிரவன், மாணவரணி அமைப்பாளர் பன்னீர் செல்வம், சண்முக சுந்தரம், இராஜன், ஈசுவரன், குமணன், சிங்கை ஜெயந், சிங்கை மூர்த்தி, செந்தில், நாகராசு, மாணவர் கழகத் தோழர்கள் பாலமுரளி, மணிகண்டன், நேரு உள்ளிட்ட பல்வேறு தோழர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கொளத்தூர் மணி, சீமான், நாஞ்சில் சம்பத்தை விடுதலை செய்யக் கோரியும், அவர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் போடப்பட்டதை கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. நண்பகல் 11 மணி முதல் 12 மணி வரை கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் ஆர்ப்பாட்டம் எழுச்சியோடு நடைபெற்றது.

## திண்டுக்கல்

திண்டுக்கல்லில் நகராட்சி அலுவலகம் முன் மாவட்ட கழகத் தலைவர் துரை. சம்பத் தலைமையில் மாலை 4 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடந்தது. 180 தோழர்கள் பங்கேற்றனர். செல்வராசன் (ம.தி.மு.க. மாவட்ட செயலாளர்), மைதீன் பாவா (விடுதலை சிறுத்தைகள் கட்சி நகர செயலாளர்), அன்பரசு (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), பேட்ரிக் சகாயராஜ், கு.சே. வீரப்பன் (தமிழர் தேசிய இயக்கம்), பாண்டியன் (புரட்சிகர விடுதலை முன்னணி), ஆபிரகாம் (மார்க்சிய லெனினிய கட்சி), அருட்தந்தை பிலிப்ஸ் சுதாகர் உரையாற்றினர்.

ஒட்டன் சத்திரம் தோழர்கள் பெரியார் நம்பி, பழனி நல்லதம்பி, மாவட்ட செயலாளர் கா.சு. ரவன்னா, தாமரைக் கண்ணன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர். நகர செயலாளர் சுப்ரமணியன் நன்றி கூறினார்.

## மயிலாடுதுறை

மயிலாடுதுறையில் வட்டாட்சியர் அலுவலகம் முன் பகல் 11 மணியளவில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட கழகத் தலைவர் பரசுராமன் தலைமை தாங்கினார். நகர துணைத் தலைவர் நாகராஜன், ஒன்றிய செயலாளர்கள் ஜீவா, முரளி, இயற்கை ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட அமைப்பாளர் இளைய ராஜா, ந.க. அழகிரி (ம.தி.மு.க. பேச்சாளர்), டி.பி. பன்னீர்செல்வம் (ம.தி.மு.க. நகர செயலாளர்), தங்க. அய்யாசாமி (பா.ம.க. மாவட்ட செயலாளர்), முரளி (தமிழின உரிமை இயக்கம்) பெரியார் செல்வம் (சீர்காழி நகர தலைவர்), அன்பரசன் (மயிலாடுதுறை நகர செயலாளர்), ரஷீத்கான் (மாவட்ட துணைத் தலைவர்) ஆகியோர் கண்டன உரையாற்றினர். பகல் 1.30 வரை ஆர்ப்பாட்டம் நடந்தது.

---


## ஆர்ப்பாட்ட முழக்கங்கள்

- *தேசியப் பாதுகாப்பா?<br>கூட்டணிப் பாதுகாப்பா?<br>தேசியப் பாதுகாப்பா?<br>காங்கிரசு பாதுகாப்பா?*
- *முடக்காதே; முடக்காதே;<br>கருத்துரிமையை முடக்காதே!<br>பறிக்காதே; பறிக்காதே;<br>பேச்சுரிமையை பறிக்காதே!<br>தமிழக அரசே; தமிழக அரசே;<br>பறிக்காதே; பறிக்காதே;<br>தேர்தல் பிரச்சார உரிமையை<br>பறிக்காதே; பறிக்காதே!*
- *சோனியாவைப் பேசினால்<br>ஓராண்டுக்கு சிறையாம்!<br>ராஜீவ்காந்தியை பேசினால்<br>ஓராண்டுக்கு சிறையாம்!<br>நடக்குது; நடக்குது<br>காங்கிரசு ‘பினாமி’ ஆட்சி!*
- *திரும்புது; திரும்புது<br>மிசா காலம் திரும்புது!<br>பொடா காலம் திரும்புது!<br>தி.மு.க. ஆட்சியிலே திரும்புது!<br>கலைஞர் ஆட்சியிலே திரும்புது!*
- *கொளத்தூர் மணி பேச்சாலே<br>கலவரம் வெடிச்சுதா!<br>சீமான் பேச்சாலே<br>ரணகளம் நடந்துச்சா!<br>நாஞ்சில் சம்பத் பேச்சாலே<br>நாடு உடைஞ்சு போச்சுதா!<br>பதில் சொல்; பதில் சொல்;<br>தமிழக அரசே பதில் சொல்!*
- *அண்ணாவின் நூற்றாண்டில்<br>அடக்குமுறை பாயுது!<br>ஆரியத்தின் பாதயில்<br>தி.மு.க. ஆட்சி போகது!<br>மறந்தாச்சு; மறந்தாச்சு<br>அண்ணாவை மறந்தாச்சு!<br>மாநில சுயாட்சி மறந்தாச்சு!<br>திராவிடத்தையும் மறந்தாச்சு!<br>புகுந்தாச்சு; புகுந்தாச்சு<br>தேசியத்துக்குள் புகுந்தாச்சு!<br>காங்கிரசில் கலந்தாச்சு!*
- *சோனியாவைப் பேசினால்<br>தேசத்துக்கு ஆபத்தா?<br>ராஜீவைப் பேசினால்<br>தேசத்துக்கு ஆபத்தா?<br>காங்கிரசைப் பேசினால்<br>தேசத்துக்கு ஆபத்தா?<br>காங்கிரசு - காணாமப்போனா<br>தேசமும் காணாமப் போயிடுமா?*
- *பாய்ந்ததா? பாய்ந்ததா?<br>சோனியாவைத் தாக்கிப் பேசும்<br>சுப்ரமணியசாமி மீது<br>பாதுகாப்பு சட்டம் பாய்ந்ததா?<br>கொளத்தூர் மணி - சீமான் மீது<br>பாய்ந்து குதறும் தடுப்புச் சட்டம்<br>பார்ப்பனர் மீது பாய மட்டும்<br>பதுங்குகிறதா பாருங்க!*
- *ஒலி பெருக்கியில் பேசினாலே<br>ஒருமைப்பாடு போயிடுமா?<br>மேடை போட்டு பேசினாலே<br>தேசம் பிளவுபட்டுடுமா?<br>தமிழகஅரசே பதில் சொல்;<br>தி.மு.க. அரசே பதில் சொல்.*
- *கன்னட நடிகன் ராஜ்குமாரை<br>காப்பாற்றி வந்ததற்கு<br>கைகுலுக்கிய கலைஞரே<br>கொளத்தூர் மணியிடம்<br>கைக்குலுக்கிய கலைஞரே!<br>கழக ஆட்சியைக் காப்பாற்ற<br>காங்கிரசை திருப்திப்படுத்த<br>கைவிலங்கா கைவிலங்கா!<br>கொளத்தூர் மணிக்குக் கைவிலங்கா!*
- *பாருங்கம்மா, பாருங்க<br>பாருங்கய்யா, பாருங்க<br>பசப்பு வேலை பாருங்க<br>ஆட்சிக்குவர இன உணர்வாம்<br>ஆட்சிக்கு வந்தால் மாறிப் போகுமாம்!<br>ஆட்சிக்கு வர வீரப் பேச்சாம்<br>ஆட்சிக்கு வந்தால் மாறிப் போச்சாம்!*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 20th March 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 மார்ச் 26, 2009 புரட்சி 8 முழக்கம் 11 விலை : ரூ.2.50


## பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் திரளுகிறார்கள்!

**ஏப்.11 ஈரோட்டில்**

# தமிழின வாக்காளர் மாநாடு

பெரியார் பிறந்த மண்ணான ஈரோட்டில், தமிழின உணர்வாளர்கள் திரளுகிறார்கள். ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒவ்வொரு நாளும் இலங்கை ராணுவம் தமிழர்களை கொத்து கொத்தாக பிணமாக்கி வருகிறது.அய்.நா.வும், அமெரிக்காவும், பிரிட்டனும் போரை நிறுத்துமாறு வலியுறுத்தியும் - இலங்கை அரசு கேட்க மறுக்கிறது. கடந்த ஜன.20 முதல் மார்ச் 7 ஆம் தேதி வரை 46 நாட்களில் 2683 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட தாகவும், 7 ஆயிரத்து 241 பேர் படுகாயமடைந்ததாக வும் அய்.நா.வின் தகவல் கூறுகிறது. அய்.நா.வின் மனித உரிமை ஆணையத் தலைவர் முதலில் இதை வெளியிட மறுத்த நிலையில் மனித உரிமைக் குழு உறுப்பினர்கள் அறிக்கையை கசிய விட்டதைத் தொடர்ந்து உண்மைகள் வெளிவந்தன.

இந்த நிலையில் அய்.நா. பாதுகாப்புக் கவுன்சில் - தமிழர்கள் மீது ராணுவம் நடத்தும் இனப் படுகொலையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடிவு செய்து, அதற்கான பட்டியலில் இணைத் துள்ளது. அய்.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர அமெரிக்க பிரதிநிதி சூசன் ஈ ரைஸ் பாதுகாப்புக் குழுவில் இதை விவாதிக்க, தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார். இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலினால் அமெரிக்கா மிகவும் கவலை கொண்டுள்ளதால் இது பற்றி விசாரிக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தியுள்ளார். அய்ரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர்கள் சார்பாக பிரிட்டனுக்கான அய்ரோப்பிய ஒன்றியத்துக்கான தூதர் ஜான் சேவேர்ஸ் பாதுகாப்புக் கவுன்சில், இது பற்றி விசாரிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் அய்.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் விவாதம் வந்துவிடக் கூடாது என்று இலங்கை, சீனாவிடம் தஞ்சமடைந்துள்ளது. இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் அய்.நா. தலையிடக் கூடாது என்று சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.போர் நிறுத்தம் செய்யாவிட்டால், இலங்கையை ‘காமன் வெல்த்’ அமைப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று இங்கிலாந்து நாட்டின் ஆளும் கட்சியான தொழிலாளர் கட்சியின் பெண் மக்களவை உறுப்பினர் ஜோன்மேரி ரியான் - இங்கிலாந்து பிரதமர் கார்டன் பிரவுனிடம் வலியுறுத்தியுள்ளார்.

இனியும் இனப்படுகொலைகள் தொடர்வதை தாங்கிக் கொள்ள முடியாது என்று விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளதோடு, இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்யப்படவேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளனர். விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் நடேசன், லண்டனிலிருந்து வெளிவரும் ‘தி சண்டே டைம்ஸ்’ இதழுக்கு அளித்த பேட்டியில், இலங்கை அரசுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளார். சர்வதேச பிரதிநிதிகள் - முல்லைத் தீவுக்கு வந்து நேரில் பார்வையிட்டு உண்மைகளைத் தெரிந்து கொள்ளட்டும் என்றும் விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது. ஆனால், இந்தியா இவ்வளவுக்குப் பிறகும் வாய் திறக்கவில்லை. தமிழக முதலமைச்சர் கலைஞர், இலங்கையின் இறை யாண்மையில் தலையிட முடியாது என்று - ராஜபக்சே கூறும் கருத்தை இப்போது வெளிப்படையாகப் பேசத் தொடங்கிவிட்டார்,. சோனியா இதுவரை ஈழத் தமிழர் பிரச்சினைப் பற்றி வாயே திறக்கவில்லை. இந்தியப் பார்ப்பன வல்லாதிக்க ஆட்சியின் துரோகம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தலில் இனப் பகைக்கு பாடம் புகட்ட தமிழின உணர்வாளர்கள் தயாராகி வருகிறார்கள். காங்கிரசை தோற்கடிக்க வற்புறுத்தி, பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட குறுந்தகடு, தமிழகத்தில் பெரும் பரபரப்பை உருவாக்கி வருகிறது.

பெரியார் திராவிடர் கழகம் - தமிழ்த் தேச பொது வுடைமை கட்சி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து உருவாக்கியுள்ள ‘தமிழர் ஒருங்கிணைப்பு’ ஈழத் தமிழர்களின் பிரச் சினையை மக்களிடம் கொண்டு செல்லும் தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ளது. அதன் மற்றொரு செயல்பாடாக எதிர்வரும் ஏப்.11 ஆம் தேதி ஈரோட் டில் தமிழின வாக்காளர் மாநாட்டை கூட்டியுள்ளது. இதற்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த மார்ச் 18 ஆம் தேதி ஈரோட்டில் அபிநயா ரீஜென்சி ஓட்டல் அரங்கில் நடைபெற்றது. கழக பொதுச் செய லாளர்கள், கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், பெ. மணியரசன் (தே.பொ.க), தியாகு (த.தே.வி.இ.), ஈரோடு ரத்தினசாமி, கழகப் பொறுப் பாளர்கள் நாத்திக ஜோதி, இராம இளங்கோவன், த.தே.பொ.க., த.தே.வி.இ. தோழர்கள், உணர்வாளர்கள் உள்ளிட்ட 50 பேர் பங்கேற்றனர். 15 பேர் கொண்ட வரவேற்புக்குழு மாநாட்டுக்காக அமைக்கப்பட் டுள்ளது.

ஏப்.11 ஆம் தேதி ஈரோடு திருநகர் காலனி மாவீரன் முத்துக்குமரன் அரங்கில் மாலை 4 மணியளவில் மாநாடு தொடங்குகிறது. ஈரோடு ரத்தினசாமி தலைமை தாங்குகிறார். மோகனராசு வரவேற்புரை யாற்றுகிறார். இராம. இளங்கோவன் முன்னிலை வகிக்கிறார். இயக்குனர் மணிவண்ணன், தமிழருவி மணியன், புலவர் புலமைபித்தன், ஓவியா, பெ.மணி யரசன், தியாகு, கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் மற்றும் மதுரை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஆகியோர் பங்கேற்று பேசுகின்றனர். சமர்பா குழுவினரின் இசை நிகழ்ச்சியும் உண்டு. மாநாட்டில் தேர்தல் குறித்து இன உணர்வுள்ள தமிழர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. தமிழ்நாடு முழுதுமிருந்தும் தனிப் பேருந்துகளில் கட்சிகளைக் கடந்து இன உணர்வாளர்கள் ஈரோடு நோக்கித் திரள இருக்கிறார்கள்.

நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் புதிய திருப்புமுனையை இம்மாநாடு உருவாக்கப் போகிறது. தமிழக முழுதும் பரவியுள்ள இன எழுச்சி உணர்வுக்கு வடிவம் தந்து ஒருங்கிணைத்து உணர்வுகளை ஓட்டு சக்தியாக மாற்றும் மாநாடாக இது திகழப் போகிறது. மாநாட்டை தடுத்து நிறுத்திடும் முயற்சிகள் ஆளும் கட்சிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றாலும் அந்த முயற்சிகளை முறியடித்து, மாநாட்டை உறுதியாக நடத்திட தீவிரப் பணிகள் தொடங்கி விட்டன. ●

## கைதைக் கண்டித்து கழக ஆர்ப்பாட்டங்கள்

**மேட்டூர் :** கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குநர் சீமான், ம.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத் ஆகியோர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டதை எதிர்த்து கழகத்தின் சார்பில் சேலம் பழைய பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள போஸ் மைதானத்தில் 16.3.2009 அன்று காலையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

காலை 11 மணிக்கு முழக்கங்கள் முழங்க ஆர்ப்பாட்டம் தொடங்கியது. சுமார் அரைமணி நேரம் பொது மக்களின் கவனத்தைக் கவரும் வகையில் முழக்கங்கள் முன் வைக்கப்பட்டன. கழகத்தின் மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஜீவானந்தம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநகர மாவட்டச் செயலாளர் அங்கப்பன், குடியுரிமை பாதுகாப்பு நடுவத்தைச் சார்ந்த தமயந்தி, மனித உரிமை பாதுகாப்பு மய்யத்தின் மாயன், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் சேகர், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் தமிழ்த்தேசியன், சட்டக் கல்லூரி அம்பேத்கர் மாணவர் விடுதியின் கார்க்கி, ம.தி.மு.க. மாநகரச் செயலாளர் முருகேசன், மார்க்சிய - பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் ஆனையப்பன், தமிழ்நாடு மனித உரிமை இயக்கத் தலைவர் பூமொழி, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பிந்துசாரன், தமிழர் தேசிய இயக்கத்தின் சிவப்பிரியன், இந்திய கம்யூனிஸ்ட் (மா-லெ) கட்சியின் கோ. சீனிவாசன், சட்டக்கல்லூரி மாணவர் ஆனந்தராஜ், கழகத்தின் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் ஆகியோர் உரையாற்றிய பின்னர், கழகத்தின் மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு தலைமையுரையாற்றினார்

**தருமபுரி :** கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான், நாஞ்சில் சம்பத், விடுதலை சிறுத்தை அமைப்பு தோழர்கள் 26 பேர் ஆகியோரை விடுதலை செய்யக்கோரி 16.3.2009 அன்று தருமபுரி இராஜகோபால் பூங்கா அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் முனி. ஆறுமுகம் தலைமையேற்றார். மாவட்ட அமைப்பாளர் கொ.வேடியப்பன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் வி.எஸ்.சம்பத், ஒன்றிய செயலாளர் ஆசை பாட்சா, பாப்புலர் சம்பத், விடுதலை சிறுத்தை, இளஞ் சிறுத்தைகள் எழுச்சி பாசறை மாநில துணைப் பொதுச் செயலாளர் பொ.மு.நந்தன், பா.ம.க. நகர செயலாளர் கு. சுப்பிரமணி, கழக ஒன்றிய அமைப்பாளர் கொ.செந்தில்குமார், இளங்கோவன், கோவிந்தராசு, நஞ்சப்பன் உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். நெ.த.அறிவுடைநம்பி நன்றி கூறினார்.

**விழுப்புரம் :** 6.3.09 மாலை 3 மணியளவில் விழுப்புரம் மாவட்டம் கழகம் சார்பில் கழகத்தலைவர் கொளத்தூர் மணி, இயக்குநர் சீமான் ஆகியோரை விடுதலைச் செய்யக் கோரி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ந. அய்யனார் தலைமையேற்க, ம.கணேசன் முன்னிலை வகிக்க, ஆ.தமிழ்தாச துரை, தி.மலை மாவட்ட அமைப்பாளர் சி. சாமிதுரை, கோ. பாபு, கோ.ப.சிவராமன், பேராசிரியர் கல்விமணி, தமிழர் இயக்க கூட்டமைப்பு மு.வ. நடராசன், தே. ஏழுமலை, தமிழர் கழகம் தங்க செந்தில்குமார், கல்லை தமிழ் வேங்கை மக்கள் உரிமை இயக்கம் எழில் இளங்கோ, தமிழீழ விடுதலை ஆதரவு ஒருங்கிணைப்பு குழு வழக்கறிஞர் லூசியா, மனித உரிமை இயக்கம் வழக்கறிஞர் ப. கண்ணன் ஆகியோர் கண்டனவுரை நிகழ்த்தினர். செஞ்சி சாக்ரடீசு, ஒரத்தூர் சுபாஷ் சந்திரபோசு, கல்லை சி. ஆசைத்தம்பி, மு.வ. செல்வராசு, ச. பெரியார் வெங்கட், ஆ. இராமர், ச. தனபால் உள்பட ஏராளமான தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

# அன்று இந்திராவின் ‘மிசா’ இன்று கலைஞரின் ‘தேசிய பாதுகாப்பு சட்டம்’

ம.தி.மு.க.விலிருந்து விலகி மு.கண்ணப்பன் தி.மு.க.வில் சேர்ந்தபோதுதான் கலைஞருக்கு 1976 ஆம் ஆண்டின் நெருக்கடி காலக் கொடுமைகள் எல்லாம் நினைவுக்கு வந்திருக்கிறது.

> “நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருந்தபோது இந்தியாவிலே முதன்முதலாகச் செயற்குழுவைக் கூட்டி நெருக்கடி நிலையைக் கண்டித்து அதைத் திரும்பப் பெறவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றிய ஒரே அரசியல் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்... நாம் ஜனநாயகத்திற்கு விரோதமான இந்த நெருக்கடிக்காலச் சட்டத்தை மிசா கொடுமையை எதிர்க்கிறோம் என்று பிரகடனப்படுத்திய **காலக் கட்டம் அது**”
> (‘முரசொலி’ மார்ச் 24)

- என்று கலைஞர் மலரும் நினைவுகளை அசை போட்டிருக்கிறார்.

மு.க.ஸ்டாலின் தனது பேரன் பேத்தி குடும்ப சகிதமாக இடிக்கப்பட இருக்கும் சென்னை சிறையைப் பார்வையிட்டு, தாம் அடைக்கப்பட்டிருந்த சிறைப்பகுதிக்குள் சென்று, பேரனை புகைப்படம் எடுக்கச் சொல்லி கண்களில் நீர் மல்க, அந்தக் கால நினைவுகளை அசை போட்டிருக்கிறார். கலைஞருக்கு அவை மலரும் நினைவுகளாகவே முடிந்து போயிருந்தால் - நாமும் கூட மகிழ்ச்சியடைந்திருப்போம். ஆனால், அந்த அடக்குமுறைகளை மலரும் நினைவுகளாக அல்ல, நிகழும் நடப்புகளாக மாற்றிக் கொண்டிருக்கிறோமே என்ற உணர்வுகளோ, உறுத்தலோ, அதற்கான சலனமோகூட கலைஞரிடம் இல்லாமல் போய்விட்டதே!

அன்று – விசாரணை ஏதுமின்றி ஓராண்டு சிறையில் அடைக்கும் ‘மிசா’வை காங்கிரஸ் தலைவர் இந்திராகாந்தி கைகளில் எடுத்தார் என்றால்,

**இன்று – அதற்கு மாற்றாக கலைஞர் விசாரணை ஏதுமின்றி ஓராண்டு சிறையில் அடைக்கும் “தேசிய பாதுகாப்பு சட்டத்தை” தனது கைகளில் தூக்கியிருக்கிறார்; அவ்வளவுதான் வேறுபாடு!**

அன்று – இந்திராகாந்தியின் அவசர நிலையை எதிர்த்து தி.மு.க. வெடிகுண்டு தூக்கவில்லை. கடற்கரையிலே மக்களை கூட்டி வைத்துக் கண்டனக் குரல் எழுப்பி பேசியது; அவ்வளவு தான். அதற்கு ஓராண்டு ‘மிசா’.

**இன்று – கொளத்தூர் மணியும், இயக்குனர் சீமானும், நாஞ்சில் சம்பத்தும் வெடிகுண்டு தூக்கவில்லை. எந்த காங்கிரஸ் ‘மிசா’வின் கீழ் தி.மு.க.வை ஒடுக்கியதோ, அதே காங்கிரஸ், ஈழத் தமிழர்களைக் கொன்று குவிக்கும் சிங்களத்துக்கு துணை போவதை மக்களைக் கூட்டி வைத்து அன்று தி.மு.க. கடற்கரையில் பேசியதுபோல் இன்றும் மேடையில்தான் பேசினார்கள்.**

ஆனால், அன்று – ‘அவசர நிலை எதிர்ப்புக் களத்தின் போர் வீரனாக’ நின்ற கலைஞர்,

**இன்று – தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் பாதுகாவலனாக மாறியிருக்கிறார்.**

அன்று – இந்திரா அவசர நிலை பிரகடனம் செய்தபோது – கலைஞரின் ‘முரசொலி’ இந்திராவின் படத்தை ஹிட்லராக மாற்றி கேலிச் சித்திரம் போட்டது.

**இன்று – நாஞ்சில் சம்பத், எந்த அரசுப் பதவியிலும் இல்லாத சோனியாவை முசோலினி என்று குறிப்பிட்டதற்காக கலைஞர் ஆட்சி ஓராண்டுக்கு சிறையில் வைக்கும் ஆள் தூக்கி சட்டத்தை ஏவுகிறது.**

எந்த இந்திராகாந்தி ‘மிசா’வின் கீழ் தி.மு.க.வினரை சிறைப்படுத்தி சர்க்காரியா விசாரணை ஆணையத்தை நிறுவி அலைக் கழித்தாரோ, அவமதித்தாரோ அதே இந்திராவை - ‘நேருவின் மகளே வருக; நிலையான ஆட்சி தருக’ என்று பட்டுக் கம்பளம் விரித்து கைகொடுத்தவரும் இதே கலைஞர் தான்! அன்றும் - கலைஞரின் பச்சை அரசியல் சந்தர்ப்பவாதம் தான் அரங்கேறியது. கடற்கரைக் கூட்டத்திலே இந்த ‘தமிழினத் துரோக நாடகத்தில்’ கதாபாத்திரமேற்றிருந்த கலைஞர், இந்திராவுடன் கைகுலுக்கியபோது, அன்று - கலைஞரை திராவிடர் கழகம் ஆதரித்த நிலையிலும் - பொறுக்க முடியாத கோவை இராமகிருட்டிணன் தலைமையில் செயல்பட்ட திராவிடர் கழக இளைஞரணி - இந்த கூட்டணியைக் கண்டித்து சென்னை நகரிலே சுவரொட்டிகளை ஒட்டி, தனது எதிர்ப்பைப் பதிப்பு செய்தது.

சென்னை சிறையிலே மிசாவில் கைதானவர்கள் கொடூரமாக தாக்கப்பட்டனர். தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபுவும், சாத்தூர் பாலகிருட்டிணனும் சிறையில் பட்ட அடியால் மரணத்தையே தழுவினர். சிட்டிபாபு சிறையில் எழுதிய ‘டைரி’ சிறைக் கொடுமைகளை பதிவு செய்தது. முரசொலி மாறன் முதுகுத் தண்டும் பாதிக்கப்பட்டது. அதே ‘மிசா’வின் கொடுமையினால் தான்.

*அன்று – இந்திராவின் காங்கிரஸ் தமிழ்நாட்டில் தமிழின உணர்வை நசுக்கி, ஆளுநர் ஆட்சியை அறிவித்து, ஆர்.வி.சுப்ரமணியம், தவே என்று இரண்டு பார்ப்பன ஆலோசகர்களை அனுப்பி, தமிழின உணர்வுக்கு எதிராக திட்டமிட்ட ‘அழிப்பையே’ நடத்தி முடித்தார்கள்; தமிழகம் பார்ப்பன அதிகார நாடாக மாற்றப்பட்டது.*

**இன்று – இந்திராவின் மருமகள் சோனியாவின் ஆட்சியில் என்ன நடக்கிறது?**

*ஈழத் தமிழர்களையும், அவர்களின் விடுதலைப்படையான விடுதலைப் புலிகளையும் பூண்டோடு ஒழிக்க சபதமேற்று செயல்படுகிறது. பணத்தையும், ஆயுதங்களையும் வாரி வழங்கி, உளவு நிறுவனங்களின் சேவைகளைப் பகிர்ந்து, ராடார்களையும், கப்பல்களையும் தூக்கிக் கொடுத்து தமிழர்களை நன்றாகக் கொன்று குவிக்க வைத்து வேடிக்கைப் பார்த்து மகிழ்கிறது.*

அன்று – இந்திரா ஆட்சியில் தமிழகத்தில் ‘தமிழின’ அழிப்புக்கான ஒடுக்குமுறைகள்;

**இன்று – சோனியா ஆட்சியில் ஈழத்தில் திட்டமிட்ட தமிழின அழிப்புக்கு பேராதரவு.**

அன்று – இந்திரா ஆட்சியின் அடக்குமுறையை எதிர்த்துப் பேசியதால் – தீர்மானம் போட்டதால் – விசாரணையின்றி ஓராண்டுக்கு மேல் சிறை;

**இன்று – தி.மு.க. ஆட்சியில் சோனியாவை எதிர்த்தால், காங்கிரசின் துரோகத்தைக் கண்டித்துப் பேசினால், ராஜீவ் மரணத்தை விமர்சித்தால் – விசாரணையின்றி ஓராண்டு சிறை.**

இரண்டுக்கும் வேறுபாடு ஒன்றுதான். அன்று காங்கிரசின் ஆணையில் அடக்கு முறை; இன்று காங்கிரசே கேட்க வேண்டாம்; ‘நான் எதற்கு இருக்கிறேன் தாயே’ என்று கலைஞரே - காங்கிரசின் ‘பாத்திரத்தை’ ஏற்றுக் கொண்டு விட்டார். அவ்வளவுதான் வேறுபாடு. கரம் என்றாலே இப்போது கலைஞருக்கு உடனடியாக நினைவுக்கு வருவது காங்கிரஸ்தான் என்றாகிவிட்டது. தி.மு.க.வில் இணைந்த கண்ணப்பன், ‘உங்கள் கரத்தைப் பலப்படுத்துவோம்’ என்று கலைஞரிடம் கூறியவுடன், ‘தோழமைக் கட்சியின் சின்னம் கரம்; காங்கிரஸ் கட்சியின் சின்னம் கரம்; அதைப் பலப்படுத்துவோம் என்று கண்ணப்பன் சொல்லியிருக்கிறார்” என்று கலைஞர் அதற்கு விளக்கம் தரும் எல்லைக்குப் போய் விட்டார்.

- *அந்தக் ‘கரம்’ தான் – மிசாவின் கரம்;*
- *அந்தக் ‘கரம்’ தான் – சிட்டிபாபுகளையும், பாலகிருஷ்ணன்களையும் பிணமாக்கிய ‘கரம்’.*
- *அந்தக் ‘கரம்’ தான் – ஸ்டாலினையும், முரசொலிமாறனையும் – சிறைக்குள் அடித்து உதைத்த ‘கரம்’.*
- *அந்தக் ‘கரம்’ தான் – இன்றும் ஈழத் தமிழர்களின் இனப் படுகொலைகளுக்கு நீண்டிடும் கரம்.*

இன்னமும் தமிழின உணர்வை இழந்திடாமல், அந்த உணர்வுக்காக - எந்தப் பலனையும் எதிர்பாராமல் தி.மு.க.வில் உழைத்துக் கொண்டிருக்கும் உண்மை தமிழின உணர்வாளர்களே; தமிழின இளைஞர்களே!

உங்கள் குருதியோட்டத்தோடு கலந்து நிற்கும் - அந்த இன உணர்வோடு சிந்தியுங்கள்!


கலைஞரின் இந்த நிலைப்பாடுகள் சரி தானா?

துரோக காங்கிரசைத் தூக்கி நிறுத்தி - அவர்கள் நடத்தும் இனப் படுகொலையின் கோர முகத்தை மறைக்கத் துடிப்பது - நேர்மை தானா?

காங்கிரசை மகிழ்விக்க - தேசிய பாதுகாப்புச் சட்டத்தை கையில் எடுப்பது நேர்மைதானா?

உள்ளத்தைத் தொட்டு சிந்தியுங்கள்! ●

## ஈழத் தமிழருக்கு உதவுங்கள் சேலத்தில் 7 நாள் தொடர் கூட்டங்கள்



‘ஈழத் தமிழர்களுக்கு உதவுங்கள்’ எனும் தலைப்பில் சேலம் மாநகரில் 22.2.2009 முதல் 28.2.2009 வரை தெருமுனை பகுத்தறிவு பிரச்சாரம் பொதுக் கூட்டங்கள் எழுச்சியுடன் நடைபெற்றன. பிப்.22 அன்று அருணாசலம் முக்கிய சாலையில் மாலை 6.30 மணிக்கு இன எழுச்சிப் பாடல்களை மோ.பாலு பாடினார். தமிழர் ஒருங்கிணைப்பு தோழர்கள் இளமாறன், கோகுல கண்ணன் இன எழுச்சி உரையாற்றினர். தொடர்ந்து சிற்பிராசனின் மந்திரமா, தந்திரமா? 2 மணி நேரம் நடைபெற்றது. பிப்.23 அன்று கருங்கல்பட்டி காய்கடை அருகில் சமர்பா குமரனின் இன உணர்வு எழுச்சிப் பாடல்களுடன் நிகழ்ச்சி தொடங்கியது. தோழர்கள் கோகுல கண்ணன், மோ. பாலு சிறப்புரையாற்றினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார்.

பிப். 24 அன்னதானப்பட்டி கண்ணகி தெருவிலும், பிப். 25 நாட்டாமங்கலம் முக்கிய சாலை காளியம்மன் கோவில் அருகிலும், பிப். 26 தாதகாப்பட்டி சிரங்கன் தெரு-2 பில்லுகடை அருகிலும், பிப்.27 வெள்ளி களரம்பட்டி ஆட்டோ நிறுத்தகம் அருகிலும் பரப்புரை கூட்டங்கள் நடந்தன.

பிப்.28 மாலை 6 மணி அளவில் பெரியார் நூலகம் தாகூர் தெரு தாதகாப்பட்டியில் கோகுல கண்ணன் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து சிற்பி ராசனின் மந்திரமா தந்திரமா? நிகழ்ச்சி நடந்தது. கோவை ராமகிருட்டிணன் சிறப்புரையாற்றினார். ஈரோட்டு பூகம்பம் முரசொலி முகிலன், பகுத்தறிவு நிகழ்ச்சி

(4 ஆம் பக்கம்)

## இயக்குனர் ஆர்.கே.செல்வமணி எழுச்சி உரை

# தமிழினத்தை அழிக்கும் 'இத்தாலி காங்கிரஸ்'

*இத்தாலி தேசிய காங்கிரஸ் – தமிழினத்தையே அழிக்கத் துடிக்கிறது என்று – இயக்குனர் ஆர்.கே. செல்வமணி குறிப்பிட்டார்.*

*தமிழர் ஒருங்கிணைப்பு சார்பில் 9.3.2007 அன்று தியாகராயர் நகரில் நடந்த கூட்டத்தில் ஆற்றிய உரை:*

ஒரு சின்ன சூறாவளி சுழன்றடித்தப் பிறகு நான் பேச வந்துள்ளேன். ஒரு இரும்பு கத்தி இரும்பையே அல்வா வெட்டுவது போல வெட்டியது சுதா காந்தியின் உரை. அதாவது ஒருவரை ரொம்ப திட்டனும்னா என்ன திட்டலாம். "நிழல் கூட பின் தொடர அவமானப்படும் காங்கிரஸ்காரன்" இதைவிட கடினமான ஒரு வார்த்தையை கண்டு பிடிப்பது கடினம். இதற்கு மேலும் காங்கிரஸ் இருக்கனுமா இப்பவே தூக்குப் போட்டு சாகனும் என்பது போல இருந்தது அந்த வார்த்தை.

கருத்துரிமை என்றால் என்ன? இந்த இந்திய திருநாட்டிலே ஒரு குடிமகனா வாழற எனக்கு என்ன சுதந்திரம் இருக்கு. இந்திய அரசாங்கத்துக்கோ, அல்லது தமிழக அரசாங்கத்துக்கோ எதிரா பேசினார் என சீமான், கொளத்தூர் மணி, நாஞ்சில் சம்பத் ஆகியோரை கைது செய்துள்ளனர். இவர்களை பேசியதற்காக கைது செய்தார்கள் என்றால், அவர்களை வேடிக்கை பார்க்கப் போன என்னையும் கைது செய்தனர். எதற்காக கைது செய்கிறார்கள் என்றே புரியவில்லை. சீமானை நண்பர் என்ற முறையிலே பார்க்கலாம் என சென்றேன். அதற்கும் கைது செய்தார்கள். எதற்கு கைது செய்கிறீர்கள் என்று கேட்டால், இறையாண்மை சட்டம் என்று சொன்னார்கள். இது என்ன இறையாண்மை? கேவலமான சொல்லாக இறையாண்மை என்பது மாறிவிட்டது.

என் நண்பர் சொன்னார், 'உன்னை கைது செய்ய வந்த காவலரிடம் இறையாண்மை என்றால் என்ன என்று கேள், அதற்கு அவர்கள் சரியாக விளக்கம் சொன்னால் நீ கைதாகி உள்ளே போய்விடு' என்றார். இங்கிருக்கிற காவலர்கள் யாராவது இறையாண்மை என்றால் இதுதான் என்று சொல்லட்டும், அந்த இறையாண்மையை நான் மீறவில்லை. எனக்கு தெரியவில்லை, நீங்கள் சொன்னால் அதன்படி நான் நடக்கிறேன்.

நாஞ்சில் சம்பத் அவர்கள், "இந்தக் கொடுமை களுக்கு எல்லாம் நீங்கள் பதில் சொல்லவில்லை என்றால், டில்லியில் ஒரு தமிழ்நாடு தூதரகம் இருக்கும்" என்றார். நீங்கள் இந்த கொடுமைகளுக்கு முடிவு கட்ட மாட்டீர்கள் என்றால் எதிர்வினை இருக்கும் என்று சொன்னால் அவரை உடனே கைது செய்து விடுவீர்களா?

சீமான் என்னிடம் சொன்னார், 'இறை யாண்மையைப் பற்றி பேசினால் அவர்களுக்கு கவலை இல்லை. நான் கேட்ட ஒரே ஒரு கேள்வி, காங்கிரஸ்காரர்களே! நீங்கள் காமராசர் ஆட்சி வரும் வரும் என்று பேசுகின்றீர்களே, உங்களில் யார் காமராசர் என்று சொல்லுங்க" என்றேன். இதுதான் அவர்களுக்கு ரொம்ப வருத்தம். இதைத்தான் அவர்களால் தாங்க முடியவில்லை. உடனே என் மீது கோபப்படுகிறார்கள் என்றார்.

அரசாங்கம் தனக்கு பிடிக்கவில்லை என்றால் 'கஞ்சா' வைத்தும் கைது செய்வார்கள். ராஜீவ் மரணம், தமிழ்நாட்டில் நடந்தது. நான் மரணத்தைப் பற்றி ஒரு திரைப்படம் எடுத்தேன்; தணிக்கையில் வெட்ட வேண்டியதை எல்லாம் வெட்டட்டும். அதற்குப் பிறகு நான் படத்தை வெளியிடுகிறேன் என்பதற்கே நான் 14 வருடங்கள் போராட வேண்டியிருந்தது. 'குற்றப் பத்திரிகை' என்ற அந்த படத்தையே முழுமையாக நிறுத்தி விட்டார்கள். அந்த படத்தை நான் எடுக்கும்போது ஒரு கலைஞனாக நான் சிந்தித்து எடுத்தேன்.

அந்தப் பெண் (தனு) சம்பவம் நடந்த இடத்துக்கு எப்படி வந்தார்? நாம் சட்டத்தை மீறி ஒரு வழிப் பாதையில் வண்டி ஓட்டிப் போனால் எதிரே போலீசை பார்த்தால் நமக்கு ஒரு நடுக்கம் வரும். அதைப் போல ஒரு குற்றம் செய்பவனுக்கு நிச்சயம் ஒரு பயம் வரும். ஆனால், ஒரு பெண் தனியாக



உடலில் குண்டுகளோடு வருகிறார் என்றால் பக்கத்தில் போலீஸ் இருக்கிறது. ஆனால் முகத்தில் எந்தவித கலக்கமும், மாற்றமும் இல்லாமல் இந்த பெண் எப்படிப் போக முடிந்தது? இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த 20 பேர் ஒரு வீட்டினுள் நுழை கிறார்கள் அந்த வீட்டில் கணவன் மனைவி இரண்டு பெண் குழந்தைகள், ஒரு மூதாட்டி உள்ளனர். முதலில் கணவனை ராணுவம் கொல்லுகிறது. ஒரு பெண் தெரியாமல் தப்பித்து வீட்டின் பின்னால் இருந்த மரத்தின் மீது ஏறி அமர்ந்து கொள்கிறார். அந்தப் பெண் பார்வையிலேயே அவருடைய மூதாட்டி, அம்மா, சகோதரி ஆகியோரை பாலியல் வன்முறை செய்து குண்டு வைத்துக் கொன்று விடுகிறார்கள். அந்தப் பெண்ணால் தடுக்கவும் முடியாது; அழவும் முடியாது. ஏன் என்றால் அதனால் அவருக்கும் அதே கதி ஏற்பட்டு விடும். வாய்விட்டு அழவும் முடியாத வேதனையில் தன் கையை எடுத்து கடித்துக் கொண்டு அழுகிறாள். தன் கையே துண்டாகி விடும் சூழ்நிலை.

இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் எல்லா மனிதத் தன்மையுமே, அந்த உணர்ச்சிகளே இல்லாமல் போய்விடுமல்லவா? நெல்சன் மண்டேலா சொன்னார், "ஒரு சாதாரண சட்டத்துக்கு அடி பணிகிற, மதிக்கிற ஒரு குடிமகன் ஒரு கொடும் சட்டத்தின் காரணமாக அந்த சட்டத்தை மீறுவதான சட்டச் சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்குகிறது." என்றார். அமைதியை காக்கப் போன இந்திய அமைதிப் படையால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய பழியை தீர்க்கிறார்கள். அது தானே ராஜீவ் காந்தியின் மரணம். ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா, நளினியை பார்த்துவிட்டு சென்ற பிறகுதான் ஈழத் தமிழர்கள் மீதான ராணுவத்தின் தாக்குதல் அதிகமானது. தமிழர்கள் எப்போதும் உணர்ச்சியை வெளிக்காட்டக் கூடியவர்கள். ஆனால், அய்ரோப்பியன் அப்படி அல்ல. அவர்கள் சாவு வீட்டிற்கே 'கோட், சூட்' போட்டுக் கொண்டு அழகாக வருவான். திருமணத்திற்கும் அப்படியே தான் வருவான். அவர்களுடைய முகத்தில் எந்தவித மாற்றமும் கண்டு பிடிக்க முடியாது. அந்த பரம்பரையில் இருந்து வந்தவர்தான் சோனியா காந்தி. அதனாலேதான் ஒரு பெண்ணுக்கு தூக்குதண்டனை வேண்டாம் என்று சொல்லி, அதன் மூலமாக அம்மா என்று அனைவராலும் தன்னை உயர்த்திக் கொண்டு பழிவாங்க தன்னை தயார்படுத்திக் கொண்டு பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்களை பழிவாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றை மட்டும் நான் கேட்க விரும்புகிறேன். காந்தியை கோட்சே கொன்றான். அவனுக்குகூட நான் ஏன் கொன்றேன் என்று சொல்வதற்கு ஒரு உரிமை இருந்தது. இந்திரா காந்தியை சீக்கிய மதத்தைச் சார்ந்த பியாந்த்சிங் சுட்டுக் கொன்றான். அதற்காக அவன் பரம்பரையையே கொல்லவில்லை. அவன் மனைவியே இந்திய பாராளுமன்றத்தில் உறுப்பினராக வந்து அமர முடிந்தது. அவனுக்கு ஒரு பரிகாரம் இருந்தது. அதே போல விடுதலைப் புலிகளே கொன்று இருந்தால்கூட அதற்காக ஒரு தமிழினத்தையே அழித்துவிட வேண்டுமா?

40,50 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டு செத்துக் கொண்டிருக்கிறார்களே, இது நியாயம் தானா? காந்தியையும், இந்திராவையும் சுட்டுக் கொன்றவர் களால் அவர்களின் இனமோ, சமூகமோ பாதிக்கவில்லை. அவர்களுக்கு ஒரு நீதி, தமிழனுக்கு ஒரு நீதியா? எந்த விதத்தில் நியாயம் இது? தன் நாட்டில் வாழக்கூடிய அனைத்து இனங்களையும் பாதுகாக்கின்ற ஒரு அரசுதான் சட்டப்படியான ஒரு அரசு. அப்படி இருந்தால்தான் அந்த நாட்டின் இறையாண்மைப் பற்றி பேச முடியும். இலங்கை அரசே கூட தன் நாட்டில் வாழுகின்ற சிங்கள இனத்தையும், தமிழ் இனத்தையும் பாதுகாக்கின்ற ஒரு அமைப்பாக இருந்தா தான் அந்த நாட்டிற்கு இறையாண்மைப் பற்றிப் பேச தகுதி இருக்கும். அப்படி இல்லாமல் ஒரு இனப் படுகொலையே நடத்துகிற நாட்டிற்கு இறையாண்மைப் பற்றிப் பேச தகுதி இல்லை. இந்த இறையாண்மை சட்டம் இந்தியாவில் 1991-க்கு முன்பு வந்ததா அல்லது அதற்குப் பின்பு வந்ததா?

அன்றைக்கு ஆயுதம் தாங்கிப் போராடிய போராளி குழுக்களுக்கு ஆயுதம் கொடுத்தது யார்? பயிற்சி கொடுத்தது யார்? இந்தியா தானே! அது இலங்கையின் இறையாண்மைக்கு எதிரான குற்றமில்லையா? அந்தக் குற்றத்தை இந்திரா காந்தி செய்தாரா, இல்லையா. ராஜீவ் காந்தி, எம்.ஜி.ஆர்., கலைஞர் கருணாநிதி ஆகியோர் செய்தார்கள் இல்லையா? ஆகவே இறையாண்மை சட்டத்தில் அவர்களை கைது செய்யுங்கள். அதற்குப் பிறகு கொளத்தூர் மணியையும், சீமானையும் கைது செய்யுங்கள். ஏனென்றால் இவர்கள் எல்லாம் பேசியதை உண்மை என்று நம்பித்தான் 1983லேயே நாங்கள் கல்லூரியில் படிக்கும் போதே உணர்வு பெற்றோம். இலங்கை தமிழர்களுக்காக பேசவில்லை என்றால் போராடவில்லை என்றால், நாங்கள் எல்லாம் தமிழர்களே இல்லை என்ற உணர்வை எங்கள் ரத்தத்திலேயே நீங்கள் தான் ஏற்றி விட்டீர்கள். ஆனால், இப்போது உங்களால் மாற முடிகிறது. எங்களால் மாற முடியவில்லை. தூங்கினாலும், சாப்பிட்டாலும், தொலைக்காட்சிப் பார்த்தாலும் ஈழத் தமிழர் படும் துயரங்களை தாங்க முடியவில்லை. எங்களுக்கு கோபம் வருகிறது. இயலாமை வருகிறது. தீக்குளிக்க தோணுது. வெறி வருகிறது. அப்புறம் வன்முறையில் இறங்க வேண்டிய சூழல் வருகிறது. அதனாலே எங்களுடைய உணர்வுகளை, கோபத்தை நீங்கள்தான் புரிந்துக் கொள்ள வேண்டும். நாடுகூட அப்புறம் முதலில் அந்த மக்களை பாதுகாக்க வேண்டும். அதை செய்யாமல் எங்கள் தோழர்களை தண்டிக்க மட்டும் உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

இந்திய விடுதலைக்காக பாடுபட்டது இந்திய தேசிய காங்கிரஸ். தமிழ் ஈழ விடுதலையை ஆதரித்தது இந்திரா காங்கிரஸ். தமிழ் இனத்தை அழிக்கப் பார்க்கிறது இத்தாலிய தேசிய காங்கிரஸ். இன்றைக்கு காங்கிரசை மூன்றாக பிரித்துக் கொள்ளுங்கள். இந்திய காங்கிரஸ் இந்தியாவின் தேசிய விடுதலைக்காக பாடுபட்டது என்றால் காந்தி காங்கிரசையே கலைத்து விடலாம் என்று சொன்னார். காரணம் - சுதந்திரத்தோடு காங்கிரசின் நோக்கம் முடிந்து விட்டது. அதற்குப் பிறகு காங்கிரஸ் பதவிக்காக நீடித்தது. இந்திரா காந்தி ஆட்சியில் இருக்கும்போது, இதே கொடுமை இலங்கையில் நடக்கும் போது முதன்முதலாக இது இனப்படுகொலை என்று சொன்னவர் இந்திரா காந்தி. இவர்களைவிட இந்திராவுக்கு தெரியாதா? இறையாண்மை பற்றி. உண்மையாக இந்தியாவை நேசித்ததால் மக்களை மதித்ததால் இந்திரா காந்தி காலத்தின் காங்கிரஸ் - ஈழத் தமிழரின் சுதந்திரத்தை பாதுகாக்க குரல் கொடுத்தது. இன்றைக்கு இந்த தமிழினத்தை அழிப்பது தான் இந்த இத்தாலிய காங்கிரஸ். போபர்சு வாங்கியதாலே ஒரு முறை ஆட்சி போச்சு, இன்று இங்கு கொடுப்பதாலே இன்னொரு முறை ஆட்சிப் போகப் போகிறது. (கைதட்டல்)

காங்கிரசுகாரர்கள் கேட்கிறார்கள், உங்களை கைது செய்வது, ஆட்சி செய்கிற கலைஞர் அரசு தானே. அவரை திட்டாமல் எங்களை திட்டு கிறீர்களே என்று கேட்கிற அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஒன்றை சொல்லிக் கொள்கிறேன். 'மனோகரா' திரைப்படம் உங்களுக்கு தெரிந்திருக்கும்.

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ஞாநியின் ‘தர்க்க வாதங்கள்’

**நமது விளக்கம்**

‘ராஜீவ் காந்தி கொலை செய்யப்படவில்லை; அவருக்கு தரப்பட்டது மரண தண்டனை’ என்று, கழகத் தலைவர் கொளத்தூர் மணி சென்னை எம்.ஜி.ஆர். நகரில் பேசியதை ‘கீற்று’ இணையதளம் வெளியிட்டிருந்தது. ‘குமுதம்’ பத்திரிகையில் வாரம்தோறும் ‘ஓ’ பக்கங்கள் எழுதி வரும் ஞாநி, இதைத் தேடி எடுத்து வெளியிட்டு, “மரண தண்டனையை பெரியார் திராவிடர் கழகம் ஏற்றுக் கொள்கிறதா? ராஜீவ்காந்தியுடன் இறந்த 20 அப்பாவி போலீசாருக்கும் மரணதண்டனை தரப்பட வேண்டுமா? அப்படியானால் ராஜீவ் கொலையாளிகளுக்கு விதித்த மரண தண்டனையை எதிர்த்து பெரியார் திராவிடர் கழகம் கையெழுத்து இயக்கம் நடத்தலாமா?” என்ற கேள்விகளை ‘தர்க்க’ ரீதியாக எழுப்பியிருந்தார். (‘குமுதம்’ 4.3.2009) கொளத்தூர் மணியின் அந்த உரையை பல லட்சம் மக்கள் படிக்கும் ‘குமுதம்’ இதழில் வெளிப்படுத்தியதற்காக அவருக்கு முதலில் நன்றி கூறுகிறோம்.

‘குமுதம்’ இதழில் ஞாநி அந்த உரையை வெளியிட்டதற்குப் பிறகு தமிழக அரசின் காவல்துறை, முதல்வர் கலைஞர் ஆணைக்கேற்ப கொளத்தூர் மணியை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்துள்ளது. கொளத்தூர் மணி இப்போது மதுரை மத்திய சிறையிலும் அடைக்கப்பட்டுவிட்டார். எல்லோரையும் ‘தர்க்க’ ரீதியாக மட்டுமே பார்க்கக் கூடியவர் ஞாநி. ஆனால், பார்ப்னபாரதிக்கு மட்டும் விதிவிலக்கு தந்து விடுவார். எனவே கொளத்தூர் மணியின் இந்த பேச்சுக்கு காரணமாக இருந்த உணர்வுகளை, நியாயங்களை ஞாநியால் பார்க்க முடியாது. பாதிக்கப்பட்ட சமூகத்துக்கும், வர்க்கத்துக்கும் தானே அந்த ‘வலி’யும் உணர்வும் புரியும். கொளத்தூர் மணி இப்படி ராஜீவ் காந்தியைப் பற்றி விமர்சிக்க வேண்டிய காரணத்தை அவரே ‘குமுதம் ரிப் போர்ட்டர்’ ஏட்டுக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி : ராஜீவ்காந்தி கொலையை நீங்கள் நியாயப்படுத்தி வருவதாக உங்கள் மீது குற்றம்சாட்டப்படுகிறதே?

பதில் : அப்படி நாங்கள் ஆரம்பத்திலிருந்தே பேசியிருக்க வேண்டும். அப்படி பேசியிருந்தால், ஓர் இனமே அழிந்து கொண்டிருப்பதைவிட ஒரு மனிதர் இறந்ததுதான் பெரிதென்று அவர்கள் பேசாமல், அமைதியாக இருந்திருப்பார்கள். அப்படி நாங்கள் பேசாமல் விட்டதன் விளைவாகத்தான் அளவுக்கு அதிகமாக அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரிக்கப்பட்டு, தொடர்புடையவர்கள் என்று கூறப்பட்டவர்களுக்கு தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. சும்மா அதையே இன்னும் பேசிக் கொண்டிருந்தால் எப்படி?

- என்று கொளத்தூர் மணி விளக்கியுள்ளார். இதே கருத்து, “ஞாநி ‘குமுத’த்தில் எடுத்துக்காட்டியுள்ள கொளத்தூர் மணி பேச்சிலும் இடம் பெற்றுள்ளது” **என்றுதான் நாம் பேசியிருக்க வேண்டும்** என்று கொளத்தூர் மணி, தனது உரையோடு சேர்த்து குறிப்பிட்டுள்ளார். 18 வருடங்களாக அந்த ஒரு சாவை மட்டுமே முன் வைத்து ஈழத் தமிழர்கள் மீதான திட்டமிட்ட வெறுப்பும், பகையும் தொடர்ந்து காங்கிரசாரால் வெளிப்படுத்தப்பட்டு வருவதற்கான எதிர் வினையே கொளத்தூர் மணியின் உரை.

ராஜீவ்காந்தி மரணத்தில் விசாரணை நடத்திய புலனாய்வுத் துறைக்கு உதவியவர் ஞாநி. எனவே ஞாநிக்கு இது தொடர்பான தார்மீகக் கடமைகள் உண்டு. ராஜீவ் கொலை விசாரணை நடந்து கொண்டிருந்த போது, சிவராஜன் என்பவர் திருவள்ளூரில் நடந்த வி.பி.சிங் கூட்டத்தில் பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருப்பதை ஞாநி ஒலிநாடா ஒன்றின் வழியாக கண்டுபிடித்தார். உடனே ‘இந்து’ பத்திரிகை ஆசிரியர் ‘ராம்’ உடன் தொடர்பு கொண்டு, அவரையும் அழைத்துப் போய் புலனாய்வுத் துறை இயக்குனர் கார்த்திகேயனிடம் அந்த ஒளி நாடாவை அளித்தார். ‘ஒரு இந்தியக் குடிமகன் என்ற கடமையுணர்வோடு இதை நான் செய்தேன்’ என்ற கருத்தையும் வெளியிட்டிருந்தார். எனவே அந்தக் கடமை உணர்வின் தொடர்ச்சியாக - ஞாநி இப்போதும் எழுதியிருக்கலாம். ஆனாலும் கொளத்தூர் மணி பேச்சின் நோக்கத்தை அதன் ஆதங்கத்தை தெளிவுபடுத்தியப் பிறகும், அதைப் புரிந்து கொள்ள பிடிவாதமாக ஞாநி மறுக்கிறார். அதற்கான காரணத்தை அவர்தான் விளக்க வேண்டும்!

உடனடியாக இந்த பதிலை நாம் எழுதாமைக்கும் காரணம் உண்டு.

கொளத்தூர் மணியின் ஒரு மேடை பேச்சுக்காகவே தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். அதுவும் - ஞாநி ‘குமுத’த்தில் அதை வெளிப்படுத்தியது இந்தக் கைதுக்கு முக்கிய காரணமாக இருந்திருக்கிறது.

ஒரு கருத்தை பேசியதற்காக தேசிய பாதுகாப்புச் சட்டத்தை - கலைஞர் கருணாநிதி பயன்படுத்தலாமா? என்ற “தர்க்கவாதத்தை” ஞாநி ‘குமுத’த்தில் எழுப்புவாரா என்று எதிர்பார்த்திருந்தோம். அப்படி இதுவரை - தனது ‘ஓ’ பக்கங்களில் அவர் எழுதவில்லை; அதற்காக ‘குட்டு’ வைக்கவில்லை; ஞாநியின் கணிப்பொறி தட்டச்சுப் பலகையில் அவரது கரங்கள் இந்த ‘தர்க்க வாதங்களை’ ஏன் தட்டாமல் போய்விட்டன என்ற கேள்வியை நாம் கேட்க வேண்டியிருக்கிறது.

கொளத்தூர் மணியைக் கைது செய்ததற்காக கலைஞர் கருணாநிதிக்கு நான் “பூச்செண்டு” தரவில்லையே என்றுகூட ஞாநி - இதற்கும்கூட தர்க்க வாதம் புரியலாம்.

ஆனால், - வார்த்தைகள் - வாக்கியங்களில் - சொற்களை மட்டும் தேடிக் கொண்டிருக்காமல் உணர்வுகளைத் தேடுவது முக்கியம்.

ஆனால், அதைத் தேட வேண்டிய கவலையோ, உணர்வோ எனக்கில்லை என்பவரிடம் நாம் வேறு எதை எதிர் பார்க்க முடியும்? நிச்சயமாக ‘ஓ’ போட முடியாது.

**– விடுதலை இராசேந்திரன்**

## ஈழப் பிரச்சினையைப் பேசத் தடையா? தேர்தல் ஆணையம் விளக்கம்

ஈழத் தமிழர் பிரச்சினைப் பற்றி தேர்தல் களத்தில் பேசக் கூடாது என்றும், அது தொடர்பான வெளியீடுகளை அச்சகங்கள் வெளியிடக் கூடாது என்றும் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகள் என்ற பெயரில் மாநகர காவல்துறை அறிவித்துள்ளது. தேர்தல் ஆணையம் இத்தகைய கட்டுப்பாடுகளை விதித்திருப்பது உண்மைதானா என்று தமிழக தேர்தல் ஆணையர் நரேந்திர குப்தாவிடம் வழக்கறிஞர்கள் குழுவாக சென்று நேரில் கேட்டபோது, தேர்தல் ஆணையம் அத்தகைய விதிமுறைகள் எதையும் அறிவிக்கவில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளார். அப்படியானால் மறுப்பு அறிக்கை வெளியிடுங்கள் என்று, வழக்கறிஞர்கள் குழு கேட்டபோது நாங்கள் வெளியிடாத அறிக்கைக்கு எப்படி மறுப்பு தெரிவிக்க முடியும் என்று பதிலளித்துள்ளார். ஆனாலும் - தமிழக காவல்துறை தமிழ்நாட்டில் தேர்தல் முடியும் வரை ஈழத் தமிழர் பிரச்சினைகளைப் பேச விடாமல் தடுக்கும் முயற்சிகளை திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றன. மயிலாடுதுறையில் கழக சார்பில் நிறுவப்பட்ட ஈழத் தமிழர் படுகொலைகளை சித்தரிக்கும் கண்டனப் பதாகைகளை அகற்றியுள்ளனர். தனியார் நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ள இத்தகைய பதாகைகளும் நீக்கப்படுகின்றன.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதில், கண்ணே, மணியே, கற்கண்டே என்று சொன்ன மனோகரனை கைது செய்த போது, புருசோத்தமன் மேல் யாருக்கும் கோபம் வரவில்லை. வசந்தசேனை மேலே தான் கோபம் வந்தது. இதற்கு காரணம் வசந்தசேனை என்று தெரியுமல்லவா. அதுபோல இன்றைக்கு இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் காரணம் இந்திய தேசிய காங்கிரசு என்று அழைக்கப்பட்ட இந்த இத்தாலிய தேசிய காங்கிரசுதான். இந்த இத்தாலிய தேசிய காங்கிரசு வசந்தசேனையை தமிழ்நாட்டை விட்டே விரட்டப்பட்டால்தான் இவர்களுக்கெல்லாம் புத்தி வரும். அதனாலே தமிழின மக்களே முதலில் தமிழ்நாட்டில் எங்கெங்கே காங்கிரசு நிற்கிறதோ அங்கெல்லாம் அதற்கு தோல்வியை கொடுக்க வேண்டும். அப்போது தான் இன்ன காரணத்துக்காக தோற்கடிக்கப்பட்டது என்று தெரிந்தால்தான் அடுத்து யார் ஆட்சிக்கு வந்தாலும் அது பி.ஜே.பி.யாக இருந்தாலும், எவராக இருந்தாலும் தமிழினத்துக்கு விரோதமாக இருந்தால் டெப்பாசிட் போகும் என்ற பயம் அவர்களுக்கு வரும். அதனாலே நீங்கள் வாக்குச்சாவடிக்கு சென்று உங்கள் கையில் வைக்கிற மை கறையை தமிழினத்தின் மேல் உள்ள கறையை கலையப்படுகிற கறையாக பயன்படுத்துங்கள். ●

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மணி நேரம் நடந்தது. பிப். 22 முதல் 28 வரை நடந்த இந்தக் கூட்டங்கள் சேலம் இளைஞரணி தோழர்கள் இளம்பிள்ளை, கோகுல கண்ணன், பழனி, ராஜசேகரன், விசு, ரஞ்சித், சந்திரா, கலை, நாகலட்சுமி, ஆகியோர் ஆதரவுடன் சிறப்பாக நடந்து முடிந்தது. ஒவ்வொரு நிகழ்ச்சியும் திட்டமிட்டபடி பேச்சாளர்களுக்கு நேரம் வரையறுக்கப்பட்டு சிறப்புடன் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**செய்தி : சேலம் விசு, (அமைப்பாளர், சேலம் மாநகரம் கிழக்கு)**

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பத்திரிகையின் உரிமை விளக்க அறிவிக்கை**

படிவம் 4 (8வது விதி காண்க)

1. வெளியாகும் இடம் : 15, மயிலப்பர் தெரு, அயன்புரம், சென்னை–23.
2. வெளியாகும் காலம் : வாரம் ஒரு முறை
3. அச்சடிப்பவர்
   பெயர் : எஸ். தீமாஸ்
   இனம் : தமிழர்
   முகவரி : லில்லி சூசை ஆப்செட் 8, முகமது உசேன் சந்து சென்னை–600 014.
4. பதிப்பாளர்
   பெயர் : ஆனூர் செகதீசன்
   இனம் : திராவிடர்
   முகவரி : 15, மயிலப்பர் தெரு, அயன்புரம், சென்னை–23.
5. ஆசிரியர்
   பெயர் : விடுதலை இராசேந்திரன்
   இனம் : திராவிடர்
   முகவரி : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை– 600 041.
6. ஒரு விழுக்காட்டிற்குமேல் முதலீடு செய்யப்பட்டுள்ள பத்திரிகை உரிமையாளரும் கூட்டாளிகளும் பெயரும் முகவரியும் : இல்லை

நான் இதன் மூலம் மேலே காணப்படும் விவரங்கள் யாவும் எனக்குத் தெரிந்தவரை முற்றிலும் உண்மையென நம்பகமாக அறிவிக்கிறேன்.

நாள்: 26–3–2009
இடம்: சென்னை.

(ஒப்பம்)
ஆனூர் ஜெகதீசன்
வெளியிடுபவர் கையொப்பம்

**தோழர்களே!**
**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஆண்டுக் கட்டணம் செலுத்தி விட்டீர்களா!**

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 27th March 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.